# ஆலம் விழுதுகள்



-மாம்பழம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலம் விழுதுகள்

## மாம்பழம்

ஐப்பசி, 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


காணிக்கை........................................................................ i

அணிந்துரை........................................................................ ii

வாழ்த்துரை........................................................................ v

மதிப்புரை........................................................................ vi

என்னுரை........................................................................ xii

நன்றியுரை........................................................................ xiv

முன்னுரை "ஆலம் விழுதுகள்"........................................ 1

ஒற்றுமை ஓங்காதோ வேற்றுமை நீங்காதோ!................ 8

வன்முறை ஒரு நன்முறையா?........................................ 25

நறுமணங்கமழும் திருமணங்கள்........................................ 29

சீர்கெடுக்கும் சீதனம்........................................................ 45

செல்ல மொழியோ இது வெல்லமே தோற்று விடும்!.... 48

மதம் கண்ட மக்களோ!
மதம் கொண்ட மாக்களோ!.................. 58

கொடுத்து வாழ்! கெடுத்து வாழாதே!.............................. 68

சாதி இறக்காதோ! நீதி பிறக்காதோ!.............................. 72

நம் நாளைய ஈழத்தின் நம்பிக்கை ஒளிகள்.................. 81

எங்கும் அமைதி தங்கட்டும்!
நெஞ்சில் உவகை பொங்கட்டும்!!....... 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கை

தமிழீழம் ஈன்றெடுத்த கண்ணொத்த கன்றுகளே,
தமிழ் வீரம் தாங்கி நின்ற ஒழுக்கம் குன்றாக் குன்றுகளே,
தமிழுலகின் இருள் கலைக்கும் தியாகத் திருவிளக்குகளே,
தமிழுள்ளம் உள்ளவரை வாழும் மாவீரர்களே,

நும் பாதக் கமலங்களை
என் கண்ணீரால் நீராட்டி,
அன்பென்ற பூ எடுத்து,
நன்றியென்ற தீபமேற்றி,
யான் படைத்த இச்சிறு மலரை
பூசைக்கு வந்த புதிய மலராகக்
காணிக்கையாக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எனது உயர் கல்வியைத் தொடரவும், பொருளீட்டவும், இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அமெரிக்க நாட்டுக்கு வந்தேன். புதியதொரு சூழலில் எனது இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றுடன் எனக்குள்ள தொடர்பும் அருகிக்கொண்டே போனது. அந்நிலையில் 1983ம் ஆண்டு இலங்கைத் தீவில் இடம்பெற்ற இனப்படுகொலை என்னைத் தட்டி எழுப்பி சிந்திக்க வைத்தது. இப்படியே மடிந்து போகும் நம் இனத்தவர்க்கு நல்வாழ்வொன்று விடிந்து வராதா என ஏங்கிய நான், பொங்கி எழுந்த நம் இளவேங்கைகள் தம்முள் மோதிக் கொண்டது கண்டேன். நம் கதை முடிந்துவிட்டதென எண்ணி மனந்தளர்ந்து, செயலிழந்து ஒதுங்கிக்கொண்டேன். எனது இனத்துடன் எனக்கிருந்த உறவு துண்டிக்கப்பட்டதனால் தண்டிக்கப்பட்டவன் நான். ஒரு இனந்தெரியாத வெறுமை என்னை ஆட்கொண்டது. வீடற்றுத் தனியே நடுக்காட்டில் விடப்பட்டவன் போன்ற உணர்வே மேலோங்கியது. இவ்வெறுமையை நிறைவு செய்ய உழைப்பில் புலனைச் செலுத்தினேன். அப்போதும் நான் அடைந்த வெறுமை மறையவில்லை. இதே உணர்வைத்தான் தன் இனத்தை, மொழியை, பண்பாட்டைத் துறந்த ஒவ்வொரு புலம்பெயர்ந்த தமிழனும் அடைவானே என ஏங்கியது என் உள்ளம்.

இந்நிலையில் என்நண்பர் மாம்பழம் எழுதிய "ஆலம் விழுதுகள்" என்ற நூலைப்படித்தேன். ஒருமுறையல்ல பலமுறை படித்தேன். அரும்பெரும் கருத்துக்களைக் கருத்தாங்கி அவை-களை அன்புடன் சுமந்துவரும் தமிழ் மகளின் நடையழகை அந்நூலில் கண்டேன். மனங்குளிர அள்ளி அள்ளிப் பருகினேன். நான் அங்கு சந்தித்த கருத்துக்கள் என் சிந்தைக்கு அறுசுவை விருந்தாகி என்னில் புத்துணர்வூட்டித் தட்டி எழுப்பின. என் ஏக்கத்தைப் போக்கி ஊக்கம் அளித்தன. வெறுமை மறைந்து நிறைவு பிறந்தது. "நான் தனித்தவன்" என்ற உணர்வு இறந்து, "தனிப்பெரும் இனத்தவன்" என்ற எண்ணம் மேலெழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் ஆசிரியர் அழகிய தலைப்புகளின் கீழ், அரிய கருத்துக்களைத் தொகுத்து, தனது அனுபவக்களஞ்சியத்தில் தேக்கி வைத்த உண்மைகளையும் அவற்றுடன் பிணைத்து, அழகு தமிழிலே உணர்ச்சி பொங்க உரிமையுடன் தன் உடன் பிறப்புகளின் வாழ்வு வளம்பெற வழங்குகிறார். புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இவர் கையாளும் இத்தகைய அணுகுமுறையை முதன் முறையாக இந்நூலில்தான் நான் கண்டேன். அவருடன் நான் பழகிய காலங்களில் நேர்மையான நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதால் அவரைப் புரிந்து கொள்வது மட்டுமன்றி அவரது கூற்றுக்களின் அருமைப் பெருமைகளை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவும் உளது. நீல வானிலே நம் இறைவன் விண்மீன்களைத் தெளித்துவிட்டதுபோல் இந்நூல் எங்கும் பல பெரியோர்களின் கூற்றுக்களையும். அறிஞர்களின் எண்ணங்களையும், பல்வேறு தமிழ் இலக்கிய நூல்களிலிருந்து நல்ல மேற்கோளான பாடல்களையும் அள்ளித் தெளித்திருப்பது உள்ளத்திற்குத் தெளிவையும் இந்நூலுக்கு அழகையும் பெருமையையும் தருகிறது. எத்தனையோ எழுத்தாளர்கள் அணுகவே தயங்கும் விடயங்களை, துணிவோடு எவருக்கும் பணியாத பெருமையோடு, பரந்து விரிந்த மனத்தோடு அணுகி, சில கசப்பான உண்மைகளையும் நம்மவர் சந்தித்து தெளிவுபெற வைப்பது அவரது நோக்கம்

நம் தலைவர் மேதகு பிரபாகரனை நான் நன்கு அறிவேன். பல வருடங்களுக்கு முன் பாரதத்தில் இரு நாட்களை அவருடன் செலவிடும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் தமிழீழ அரசியலிலிருந்து ஒருசில காரணங்களால் ஒதுங்கி வாழ்ந்த காலத்தில் கூட அவரை நெப்போலியனைப்போன்ற நெஞ்சுரம் கொண்ட தலைவனாகவே கருதினேன். பிரபாகரன் என்றொரு தலைவன் தோன்றியிராவிடில் இன்று ஈழத்தில் தமிழினம் அழிந்து, சுடுகாட்டுச் சாம்பலாக மாறியிருக்கும் என்பதை நாட்கள் போகப்போக உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அனைவரும் அறிய அவரை என் தலைவனாக ஏற்று, அவர் பின்னே புலம் பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் அணி திரள, ஈழம் வாழ் நம் உடன் பிறப்புகளுக்கு உதவ அன்புடன் அழைக்கிறேன். இந்நிலைப்பாட்டை நான் எடுப்பதற்கு "ஆலம் விழுதுகள்" என்ற இந்நூலும் உறுதுணையாக அமைந்தது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆலம் விழுதுகள்" என்ற இவ்வழகிய நூலைத் தமிழுலகு ஆரத்தழுவி மகிழ்வோடு ஏற்றுப் பயனடையும் என்பது எனது நம்பிக்கை.

நம்மவர் அறிவு ஆல்போல் விழுது விடட்டும்!
நம்மவர் வாழ்வு ஆல்போல் தழைத்து வளரட்டும்!!
ஆசிரியர் மாம்பழத்தின் "ஆலம் விழுதுகள்"
அகிலமெங்கும் பரவிப் பயன் தரட்டும்!!!

டாக்டர் சண் நாகேந்திரா

**Bayonne**
**New Jersey**
**05.09.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக நாட்டியப் பேரொளி**
**திருமதி. பத்மினி இராமச்சந்திரன்**

# வாழ்த்துரை

"ஆலம் விழுதுகள்" என்ற நூலின் வெளியீட்டு விழாவிலே தலைமை தாங்கிச் சிறப்பிக்க தம்பி மாம்பழம் (தேவதாசன்) என்னை அழைத்ததையிட்டுப் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். அவரது தமிழ்ப் பற்றையும், கலைப் பற்றையும், பேச்சுத் திறனையும் பல வருடங்களுக்கு முன்னரே நான் அறிவேன். தற்போது எழுத்துலகிலும் அவர் புகுந்து தமிழர் வாழ்வில் ஒளி சிந்துவார் என்பதில் சந்தேகமே இல்லை.

அவரது மனைவி மதிவதனி பரதநாட்டியக் கலை பயிற்றும் ஒரு சிறந்த ஆசிரியை. அவர் எனக்கு ஒரு மாணவி மட்டுமன்று ஒரு மகளும் போன்றவர். அவர்கள் இருவரது தமிழ்ப் பணியும், கலைப் பணியும் சிறக்க என் நெஞ்சினிக்க வாழ்த்துகிறேன்.

புலம் பெயர்ந்து உலகெங்கும் வாழும் தமிழ் இனம் தனது மொழியை, பண்பாட்டை, கலாச்சாரத்தை மறந்துவிடாது ஆல்போல் தழைத்து உலகெங்கும் விழுதுவிட்டு செழித்து வளர எல்லாம் வல்லவனை வேண்டுகிறேன்.

பத்மினி

**Hillsdale**
**New Jersey**
**19.08.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

**சொல்லைப் புயலாக மாற்று!**
**சூடில்லாத தமிழன்**
**உடலில் சூடேற்று!**

என்றார் தமிழீழ விடுதலைக் கவிஞர் காசி ஆனந்தன். அவரைப் போலவே சொல்லைப் புயலாக்கி அதைப் புத்தக வடிவிலே கொணர்ந்திருக்கிறார் ஆலம் விழுதுகளின் ஆசிரியர். குளிர் தேசங்களில் கொடுகி வாழும் எங்களைத் தன்னுடைய கனல் வரிகளால் தொட்டெழுப்புகிறார்.

வேலை, வெல்(F)பெயார், வேடிக்கை வினோதங்கள், வீணுக்கு அடிபட்டுச் சாதல், தொலைபேசியூடாக சொல்கின்ற வம்புகள், கணங்களைக் கணக்கிட்டு பணம் தேடல்... இவையன்றி எம்மவர்க்கு வேறு சிந்தனையும் உண்டோ என்று பல நாட்கள் நொந்ததுண்டு. ஆனால் மண்ணையும், எம் மக்களையும் நேசிக்கிற மனிதர்களும் நம்மிடையே வாழ்வதனை "ஆலம் விழுதுகள்" மூலம் அறிந்து கொண்டேன்.

ஆசிரியர் தன்னுரையிலேயே நூலின் நோக்கத்தை அதனுடைய இலக்கை அடையாளப்படுத்தி விடுகிறார். "இந்நூலைப் படிப்போரின் நெஞ்சினிக்க வேண்டுமென்ற நோக்குடன் நான் இதை எழுதவில்லை. நம்மவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் வாழ்வினிக்க வேண்டுமென்பதே இந்நூலின் குறிக்கோள்."

"ஆலம் விழுதுகள்" நாங்கள் அழுத கதை சொல்கிறது. பகைவனைத் தொழுத கதை சொல்கிறது. உலகெங்கும் படர்ந்திருக்கும் தமிழ் விழுதுகளின் வேதனையைச் சொல்கிறது. விழித்தெழச் சொல்கிறது. களத்திலே குண்டு தாங்கி விழுந்து எங்கள் இதயங்களிலெல்லாம் எழுந்துவிட்ட வீரர் பற்றிச் சொல்கிறது. கற்களால் மட்டுமா தீயைப் பிரசவிக்க இயலும்..? சொற்களாலும் சுடரேற்ற முடியுமென்று நூலாசிரியர் நிரூபித்திருக்கிறார். இது மேலோட்டமாய்ப் பார்த்தால் நீதி நூல் போலத்தானிருக்கும். ஊன்றிக் கவனித்தால் உணர்வுள்ள ஒரு தமிழனுடைய நெருப்புவரிகளெனத் தெரிய வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குட்டக் குட்டக் குனியும் குருடர் கும்பலா தமிழினம்? மூக்கை மூடினால் வாயைத் திறக்க அறியாத முட்டாள் இனமா இது...? ஆணவத்திற்கும் அதர்மத்திற்கும் அடிபணியும் கோழைகளின் கூட்டமா இது? அரசியல் கோமாளிகளின் ஏமாற்று வார்த்தைகளை இனியும் நம்பும் ஏமாளிகளின் குலமா இது...?" என்று குமுறுகிறார்.

இந்தப் புத்தகத்தின் இன்னொரு சிறப்பம்சம் யாதெனில், நூலகம் சென்று பல நூல்களைப் புரட்டி நல்லறிஞர்கள் பலருடைய மேற்கோள்கள், மேன்மை மிகு கவிதைகள் இவை குறித்து ஏதும் அறிய மாட்டாமல் வாழ்வின் தளைகளுக்குள் கட்டுண்டு கிடப்பவர்க்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம். படித்து முடித்ததும் பல நூல்களை ஒருசேரக் கற்றது போல ஒரு பிரமிப்பு. அட....! அறிவதற்கு இன்னும் ஆயிரம் உண்டு எனும் ஆச்சரியம். ஆங்காங்கே சொல்லிப் போகும் நல்லறிஞர் வார்த்தைகளுடன் கூடவே நடக்கிறது மனம்.

இது தவிர ஒரு கவிஞனால் மட்டுமே கவனிக்கப்படல் சாத்தியமான இயற்கையின் அதிசயங்களைச் சொல்லி விழியகல வைக்கிறார். வாசித்துப் போன வழியிலே நான் நேசித்த வரிகள் இவை. "கரை புரண்டு ஓடுகின்ற காட்டாறு தனது பாதையிலுள்ள பாரிய மரத்தையும் வேருடன் சாய்த்து அடித்துச் செல்கிறது. ஆனால் ஆங்கே துள்ளி விளையாடும் சின்ன மீன் ஒன்று அந்த ஆற்று வெள்ளத்திலும் எதிர் நீச்சல் அடித்து விடுகிறது. வீறு கொண்டு வீசும் புயற்காற்று பாரிய விமானங்களையே தாக்கி வீழ்த்தி விடுகிறது. ஆனால்... பட்டுப் போன்ற சின்னஞ்சிறிய சிட்டுக்குருவி அதற்கு ஈடுகொடுத்து அப்புயற் காற்றிலும் பறந்து விடுகிறது."

ஒரு எழுத்தாளன் என்பவன் சமூகப்பொறுப்போடு சிந்திக்க வேண்டும். எழுத்து என்பது வெறும் கற்பனை கலந்த விற்பனைச் சரக்கல்ல என்று உணர்ந்திருத்தல் வேண்டும். ஆலம் விழுதுகளின் ஆசிரியர் சமூகப் பொறுப்போடு சிந்தித்திருக்கிறார். தமிழர்களுடைய ஒற்றுமை இன்மையைச் சுட்டிக்காட்டும் அவர், "ஒரு குடும்ப உணர்வை இவர்களுக்கு எப்படி ஊட்டுவது.... எவ்வாறு இவர்களை இவ்வுணர்வால் இணைப்பது என்று ஏங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நடுநிலை என்பதன் உண்மையான அர்த்தத்தை உணராமல் உளறுகின்றவர்களின் மேல் சாட்டையடிகளென வந்து விழுகின்றன வார்த்தைகள். "சிங்கத்தின் வாயிலே தன்னைப் பெற்றவளைக் கண்ட மகன் நடுநிலை பேணவெனச் செயலற்றிருப்பானா? பொய்மை வாய்மையை விழுங்குமிடத்திலே, அநீதி நீதியை நசுக்கும் பொழுதிலே நல்லதை அல்லது வெல்லும் நிலையிலே, புன்செயல் புண்ணியத்தைக் கொல்லும் வேளையிலே கைகட்டி வாய் பொத்தி நிற்பதுதான் நடுநிலையா?" என்கிற தார்மீகக் கோபம் நியாயமானது.

எமது மண்ணிலே நடந்து கொண்டிருக்கிற சமரானது, நீதிக்கும், அநீதிக்கும் இடையிலான சமர். சத்தியத்துக்கும், சாத்தானுக்கும் இடையிலான சமர். அதை உணராத கூட்டம் ஒன்று அந்த மண்ணிலே மட்டுமல்ல; இங்கேயும் இருக்கிறது. இனவெறி கொண்ட அராஜக அரசையும், தர்மத்தைக் காக்க ஆயுதம் ஏந்தியவர்களையும் ஒரே தராசில் வைத்து எடை பார்க்கும் இவர்களை எண்ணிச் சாடுகின்ற வரிகள் சத்தியத்தின் குரலாக ஒலிக்கின்றன.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களைப் பற்றிப் பேசும்போது ஒரு பரவசம், பெருமிதம் பேனாவுக்குள் மையாகப் புகுந்து கொண்டதை நூலெங்ஙணும் காணக் கூடியதாக உள்ளது. நன்றியினால் கண்கள் பனிக்க எழுதியிருப்பதை உணர முடிகிறது.

**"உருப்படா திருந்த தமிழன் நெஞ்சில்**
**நெருப்பெழ வைத்த நெஞ்சவன் நெஞ்சே"**

என்று விம்முதலோடு பாடினார் உணர்ச்சிக் கவிஞர். அந்த வீரத்தின்பால், இலட்சியப்பற்றின்பால், செயலாற்றலின்பால் ஆசிரியர் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பதை இந்த ஆலம் விழுதுகளின் ஆரம்பத்திலிருந்து நிறைவுவரை காண முடிகிறது.

ஒரு இனமானது, ஒடுக்க ஒடுக்க எவ்வாறு கிளர்ந்தெழும் என்பதை நூலாசிரியர் தன்னுடைய வார்த்தைகளில் "ஒரு ரப்பர் பந்தை எவ்வளவு பலத்துடன் நிலத்தில் ஓங்கி அறைகின்றோமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு வேகத்துடன் அது வான்நோக்கி மேலேழுந்து செல்லுகிறது." என்கிறார். இந்த வரிகளை வாசித்தபோது பாலஸ்தீனியக் கவிஞன் ஒருவனின் கவிதை வரிகள் ஞாபகத்தில் வந்தன.

> **"அவர்களெனை இருண்ட அறையில் பூட்டினார்கள்**
> **என் இதயம் ஆயிரம் சூர்ய விளக்காய் ஒளிர்ந்தது**
> **அவர்களென் எண்ணை சுவரில் எழுதினர்**
> **சுவர் பசும்புல் நிலமாய்த் தன்னை மாற்றிக் கொண்டது."**

நாட்டுப்பற்று ஒவ்வொரு தமிழனின் மனத்திலும் ஊற்றெடுக்க வேண்டுமென வலியுறுத்தவதோடு, அதற்கு தாய்மண்ணை ஒரு புனிதமான இடத்திலே வைத்து, கடவுளை எவ்வாறு வணங்குகிறோமோ அவ்வாறு வணங்க வேண்டும் என்கிறார்.

புலம்பெயர் வாழ்வின் பல முகங்களை ஆலம் விழுதுகளில் காணமுடிகிறது. ஆனால்...திருமண பந்தம் குறித்த இவரது ஒரு கருத்தானது, முன்னுக்குப் பின் முரணாய் அமைந்து தெளிவற்றிருக்கிறது. "கணவனோ மனைவியோ ஒருவர் ஒருவரில் குற்றம் குறைகளைக் கண்ட இடத்தில் திருமண உறவை முறிப்பதுதான் வழியென்று நினைப்பது தவறு." என்று கூறும் அவர் இன்னோரிடத்திலே "திருமண ஒப்பந்தம் தீப்பந்தமாகி விட்டால், உறவே அற்றுவிட்ட நிலையில் திருமண உடன்படிக்கையை இருவரில் ஒருவர் முறித்துவிட்ட நிலையில், ஒருவருக்கு ஒருமுறை வாழ்க்கைப்பட்ட காரணத்தால் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் கவலையிலும், கண்ணீரிலும், தனிமையிலும் கழிய வேண்டுமா?" என்று முரண்படுவது குழப்பத்தைத் தருகிறது. நான் ஆய்ந்துணர்ந்ததில் தவறா அன்றேல் ஆசிரியரின் தவறா என்று சிந்தித்தேன். இன்னும் விடையைச் சந்திக்கவில்லை.

தமிழ்க் குழந்தைகள் தாய்மொழியாகிய தமிழை அறியா திருப்பது தவறு என்று வலியுறுத்தும்போது ஒரு விடயம் மனதை உறுத்துகிறது. ஆறு ஓடும் திசையில்தானே துரும்பும் பயணப் படும்..? அறிவுறுத்த வேண்டிய பெற்றோர்களே அந்நிய மொழி மோகத்தில் அமிழ்ந்திருக்கும்போது குழந்தைகளில் என்ன தவறு...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலம் விழுதுகளின் ஒரு கருத்தோடு நான் மிகவும் உடன்பாடு உடையவள். தமிழ்ப்பெற்றோர்களிடத்தில் தனியானதொரு குணாதிசயம் உண்டு. அதாவது, தங்களுடைய விருப்பங்களைப் பிள்ளைகளில் திணிப்பது. பிள்ளைகளுடைய திறமைகளைக் கருத்திற் கொள்ளாது வெறும் கௌரவத்திற்காக அதைப் பாழ் செய்வது. கணணித்துறையிலே ஆர்வமுள்ள ஒரு பிள்ளையை கறுப்புக் கோட்டுக்குள் நுழைத்து வக்கீலாக்குவதிலும், இசையை நேசிக்கும் பிள்ளையின் இனிய கனவைக் கலைத்து கட்டிடக் கலைக்குள் புகும்படி கட்டாயப் படுத்துவதும் அறியாமையன்றி வேறென்ன? பெற்றோர்களே! நீங்கள் ஆலம் விழுதுகளை வாசித்து மனமாற்றம் கண்ட பின்தான் உங்கள் பிள்ளைகள் உங்களை நேசித்தல் தொடங்கும்.

மேலும், மதம் என்பதன் உண்மையான அர்த்தம் புரியாது மதம் பிடித்தலைபவர்களின் மேல் சொற்களெனும் கற்கள் விழுகின்றன. அவர் கூறுகிறார். "நாம் பின்பற்றும் மறையைப் பற்றிப் பெருமைப்படுவது தவறல்ல அதை மற்றவர்கள் மேல் திணிப்பதே தவறு என்கிறேன்." அந்த மாபெரும் தவறை மதத்தின் பெயராலே நிறையப்பேர் நிகழ்த்திக் கொண்டிருக் கிறார்கள். முன்பெல்லாம் ஊரிலே சோப்பு, மீன், பிஸ்கட் பொட்டலங்கள், தும்பு மிட்டாய் இவைகளை விற்றவென வீடுவரை வியாபாரிகள் வருவர். இப்போதோ மதவியாபாரிகள் மலிந்து விட்டார்கள். "ஊசி வாங்கலையோ ஊசி" என்று உரக்கக் கூவி விற்பதைப் போல மேடைகளிலும், வானொலிகளிலும், பத்திரிகைகளிலும் கூவி மதம் என்னும் சொல்லின் மகத்துவத்தைப் பாழ் செய்கிறார்கள். அந்த வியாபாரிகளுக்கு "ஆலம் விழுதுகள்" அடித்த அடி உண்மையானவர்க்கு உவப்பானதே.

மருந்தைக் கூட இனிப்பாக்கி குழந்தைகளைக் குடிக்கச் செய்வதுபோல கட்டுரை என்ற கடின வடிவத்தினை குட்டிக்கதைகளால் இலகுவாக்கி அளித்திருப்பது பாராட்டுதற் குரியது. அத்தோடு ஒரு மக்கள் தலைவனின் பண்புகள் இன்ன இன்ன என வகுத்து அதற்கு உதாரணமாய் தேசியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரைக் காட்டியிருப்பது எந்தவொரு தேசபக்தனின் நெஞ்சையும் நெகிழச் செய்து விடும். மேலும் புலம்பெயர்ந்த நாடுகளின் போகங்களில் மூழ்கி எமது மண்ணையும் மக்களையும் மறந்து விடலாகாது என நூலின் பல இடங்களிலும் வற்புறுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. கவிஞர் வைரமுத்துவின் வார்த்தைகளில் சொல்வதானால்...

**என் கிளைகள்**
**வெளியே விரிந்து விட்டாலும்**
**என் வேர்கள் வசிப்பது**
**இங்கே தான்!**
**இங்கே தான்!**

எங்கள் கால்களின் கீழ் பனித்துகள்கள். ஆனாலும் அந்தப் புழுதித் தரைகளே எமக்குப் புனிதமானவை. மேப்பிள் மரநிழல் இதமானதே. ஆனாலும் அந்தப் பூவரசுகளின் கிளைகளில் அல்லவா மனக்குயில்கள் அமர்ந்து பாடிக் கொண்டிருக்கின்றன.

"ஆலம் விழுதுகள்" எத்தனை அர்த்தம் பொதிந்த பெயர். அதன் உள்ளடக்கமும் உயர்ந்ததே. ஆனால்... கணங்களைக் கணக்கிட்டபடி ஓடிக்கொண்டிருக்கும் எம்மவரால் நின்று வாசிக்க முடியுமா? இயந்திர இரைச்சலுக்கு செவிகளை அடகு வைத்து விட்டிருப்பவர்களால் இந்த இனிய பாடலை ரசிக்க முடியுமா? கணக்குப் புத்தகங்களை மட்டுமே வாசிக்கிற பரிதாப மனிதர்களை இந்த நூல் சென்றடைவது சாத்தியமா? தெரியவில்லை. ஆனால்...ஒன்று மட்டும் தெரிகிறது இந்தப் புத்தகம் இப்போது அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும். இந்நூல், புலம் பெயர்ந்த நாடுகளில் சரிந்து போய்க் கொண்டிருக்கும் எங்கள் பண்பாட்டுக் கோபுரத்தைத் தாங்கிப் பிடிக்கிற கைகளில் ஒன்றாய் கணக்கிடப்பட வேண்டியது.

என்னை ஒரு பொருட்டென மதித்து எழுதப் பணித்தவர்க்கு எனது நன்றிகள்.

கலைவாணி இராஜகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஈழத்தில் இனவெறி பிடித்த சிங்கள அடக்குமுறை அரசின் தமிழின அழிப்பைத் தடுப்பதில் நம் கவனம் செலுத்தப்படும் வேளை, நாம் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழின அழிப்பு ஒன்று நடைபெறுவதை நம்மில் பலர் காணத் தவறிவிடுகிறோம். அதன் கனாகனத்தை அறியாத காரணத்தால், அதைத் தடுத்து நிறுத்தவேண்டியதன் தேவையை உணராது கண்டும் காணாததுபோல் இருந்து விடுகிறோம். ஆங்கே சிங்கள அரசு திட்டமிட்டு தமிழின அழிப்பில் ஈடுபட, புலம் பெயர்ந்த தமிழர்களோ தமது தனித்தன்மையை இழந்து தம்மையே அழித்துக்கொண்டிருக்கின்றனர். தொன்மை மிக்க "அமுது" என்ற பொருள் கொண்ட தம்மினிய தமிழ்மொழியை தம் பிள்ளைகளுக்கு ஊட்ட மறந்து, தமது பண்பாட்டைத் துறந்து ஈழம் வாழ் உடன் பிறப்புகளின் நினைப்பொழிந்து வாழ்வதால் புலம் பெயர்ந்த தமிழினித்தில் ஒரு பகுதி படிப்படியாக மறைந்துகொண்டு போகின்றது. அந்த உடன் பிறப்புகளைத் தட்டி எழுப்பி, நிலைமையை விளக்கி தமிழருக்கேயுரிய தனித்தன்மையை இழந்து விடாது இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ வைப்பதே இந்நூலின் நோக்கம். இன்று நாம் தூங்கினால் நாளை ஏங்கவேண்டி நேரிடும்!

இந்நூலை எழுதி முடித்துவிட்டு அதன் கைப்பிரதிகளை, பல்வேறு நிலைகளிலுள்ள ஒரு சில அன்பர்களிடம் அவர்கள் கருத்தை அறிந்து கொள்ளும் நோக்குடன் படிக்கும்படி கொடுத்தேன். பலரும் பாராட்டி ஊக்கம் கொடுத்தனர். ஒருசில அன்பர்களோ நான் புலிகளுக்குச் சார்பாக நின்று எழுதுவதைத் தவிர்த்துக் கொண்டால் அனைவருடைய ஆதரவையும் பெற முடியும் என்றும், இந்நூலில் அடங்கியுள்ள கருத்துக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டியவை என்பதால் எவர் பக்கமும் சாராது நடுநிலை நின்று எழுதுவது நன்று என்றும் தமது கருத்தைத் தெரிவித்தனர். அனைவரின் கருத்துக்களையும் நன்றி உணர்வுடன் ஏற்றுச் சிந்தையில் எடைபோட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சிங்கத்தில் வாயிலே தன்னைப் பெற்றவளைக்கண்ட மகன் நடுநிலை பேணவெனச் செயலற்றிருப்பானா? பொய்மை வாய்மையை விழுங்குமிடத்திலே, அநீதி நீதியை நசுக்கும் பொழுதிலே, நல்லதை அல்லது வெல்லும் நிலையிலே, புன்செயல் புண்ணியத்தைக் கொல்லும் வேளையிலே கைகட்டி வாய் பொத்தி நிற்பதுதான் நடுநிலையா? பூனை கண்மூடி மூலையில் படுத்துவிட்டால் பூவுலகம் முழுவதும் காரிருள் படர்ந்திடுமா?"** இப்படிப்பட்ட கேள்விக் கணைகள் என் எண்ணத்தில் வீழ்ந்து தெறித்தன. **"சத்தியத்தின் சாட்சியாக நிற்பதுதான் நடுநிலை, நம் உடன் பிறப்புகளின் உரிமைக்குக் குரல்கொடுத்து விளங்குவதே நடுநிலை. நல்லதை என்றும் போற்றி அல்லதை என்றும் தூற்றுவதே நடுநிலை. நீதியின் பின் துணிவோடு அணிசேருவதே நடுநிலை"** இப்படிப் பிறந்தன பதில்கள். எனவே அணிசேராக் கொள்கை தமிழர் பிரச்சனைக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்பது எனது கருத்து.

இந்நூலைப் படிப்போரின் நெஞ்சினிக்க வேண்டுமென்ற நோக்குடன் நான் இதை எழுதவில்லை. நம்மவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் வாழ்வினிக்க வேண்டுமென்பதே இந்நூலின் குறிக்கோள். என்னினம் எங்கோ, அங்கே என் மனமும் இருக்கும்.

படியுங்கள்! பயனடையுங்கள்!!

தேவதாசன்
(மாம்பழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எனைப்படைத்து காலமெல்லாம் என் கரம்பற்றி பாசத்துடன் வழிநடத்தும் **என் தெய்வத்திருத் தாய்க்கும்**

நாளும் பொழுதும் குன்றாத அன்போடு அடியானைத் தாங்கி, தொல்லை விலக்கி வழிகாட்டும் என் குருநாதன் **சுவாமி யோகானந்தா** அவர்கட்கும்

பாலோடு தமிழுணர்வை எனக்கூட்டி, தாலாட்டிலே தண் தமிழழகு காட்டி, கொள்கைப் பந்தலுக்குக் கொடிக் கம்பமாக நிற்கச் சொல்லிக் கொடுத்த **என் அன்புமிகு அன்னை இராசரத்தினம்** அவர்கட்கும்

இந்நூல் உருவாக உந்து கோலாக நின்று, நான் மனந் தளர்ந்து நின்ற வேளை "என்னால் முடியும்" என்ற நம்பிக்கையை எனக்கூட்டி, ஊக்குவித்த **எனதருமை மனைவி மதிவதனி** அவர்கட்கும்

இந்நூலை அணிசெய்ய அழகிய அணிந்துரையை அன்புடன் தந்துதவி, என் அண்ணன் இல்லாக் குறைபோக்க வந்த ஒரு அண்ணனாக, நல்ல ஒரு குடும்ப நண்பனாகக் குறிப்பறிந்து எனக்குதவும் **கலாநிதி. நாகேந்திரா** அவர்கட்கும்

இந்நூல் வெளியீட்டு விழாவைச் சிறப்பிக்கச் சிரமங்களைப் பாராது அன்புடன் வருகை தந்து தன் நெஞ்சினிக்க வாழ்த்துரை ஒன்றை நல்கி, அளவிலாப் பெருமை சேர்த்த **நாட்டியப் பேரொளி திருமதி. பத்மினி ராமச்சந்திரன்** அவர்கட்கும்

திரைக்குப்பின் மறைந்து நின்று எச்சொல்லும் உரைத்திடாது அளப்பரிய உதவி ஈந்த பேரன்புமிக்க என்றன் **உறவினர், அன்பர், நண்பர் யாவர்க்கும் நன்றி! நன்றி!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## ஆலம் விழுதுகள்

**ஆலம் விழுதுகளே! தமிழ் ஆலம் விழுதுகளே!!**
**காலத்தினால் சாகாத தமிழ்க் கொடியின் கொழுந்துகளே,**
**ஞாலம் முழுதும் நம் உரிமைகோரி முழங்கும் சங்குகளே,**
**காலவழிவந்த நம் தனிப்பெரும் பண்பாட்டின்,**
**மாண்பு கூறும் தூதர்களே,**
**பாலம் அமைத்து, நமை இணைத்து**
**நம்மவர்க்குத் தோள் கொடுக்க,**
**கோல் எடுத்தேன், கரம் குவித்தேன் உரிமையுடன் எழுதுகிறேன்.**

புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் குடியேறி, உலக-ளாவப் பரவி வாழும் அன்புத் தமிழ் நெஞ்சங்களே, தமிழ்த்தாயில் என் உடன் பிறப்புக்களே, உங்களை ஒருசிலர் விடுதலைப்போர் என்ற காட்டாற்றில் அடிபட்டு வேரறுந்து வீழ்ந்துபட்ட ஒரு மரமா கக் காணலாம். நானோ உங்களை ஆயிரம் விழுதுகள் விட்டு உலகளாவச் செழித்து வளரும் ஒரு ஆலமரமாகக் காண்கிறேன். ஈழத்து மண்ணில் வேரூன்றி நிற்கும் இந்த ஆலமரம் நாடுகள் அனைத்திலும் கிளைவிட்டுத் தழைத்து நிற்க, அக்கிளைகளில் தோன்றி அவைகளைத் தாங்கி உறுதுணையாக, அதன் பலமாக நிற்பது அதன் விழுதுகளாய் விளங்கும் நீங்களே. அதனால்தான் ஆலம் விழுதுகளே! என உங்களை விழித்தேன். சிலர் உங்களை ஈழப்போர் என்ற புயலில் சிக்கி சிதறிப்போய்விட்ட ஒரு கொடியகக் காணலாம். நானோ உங்களை உலகனைத்தும் படர்ந்து பாராளப்போகின்ற பசுந்தமிழ்க் கொடியின் கொழுந்துகளாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்றேன். அதனாற்றான் தமிழ்க் கொடியின் கொழுந்துகளே என அழைத் தேன். வேறுசிலர் உங்களை நாடற்ற அகதிகளாக, வீடற்ற அனாதைகளாக யாரும் கேட்பாரற்ற பரதேசிகளாகக் கருதலாம். நானோ உங்களை நம் ஈழத் திருநாட்டின் உரிமைக் காக உலக அரங்கில் முழங்கும் சங்குகளாகக் காண்கிறேன்.

தமிழ் இனம் ஒரு தேசிய இனம், தமிழினத்திற்கு காலவழிவந்த ஒரு தாயகமாக ஈழத்திருநாடு உண்டு. தமிழினம் ஆண்ட ஓர் இனம், அது மீண்டும் ஆளும் உரிமை கொண்ட இனம், அந்த உரிமை எந்த வல்லரசோ, வேறு எந்த நாடோ போடும் பிச்சையல்ல என எட்டுத் திக்கும் கொட்டும் முரசு நீங்கள். தமிழினம், முதுமையினால் அழியாத தனிச் சிறப்பு வாய்ந்த மூத்த மொழி ஒன்றை, காலவழி வந்த ஒரு கலாச்சாரத்தை, பொருள் பொதிந்த பண்பாட்டை, தனித் தன்மை மிளிரும் பழக்க வழக்கங்களைக் கொண்ட ஓர் இனமென்று பார் முழுதும் எடுத்தோதும் உரிமைக் குரல் நீங்கள். 1977ல் நடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் கேட்டு நின்ற தம் உரிமைச் சொத்தாம் தமிழ் ஈழத்தை வழிநடத்த ஒரு தேசியத் தலைமை உண்டு. அந்தத் தலைமை தமிழ் ஈழத்தைத் தன்னலம் காரணமாகவோ, அன்றேல் கொள்கைப் பிடிப்பும் நெஞ்சில் துணிவும் அற்றதாலோ, சிங்கள அரசுக்குத் தாரைவார்த்து, அவ்வரசுக்கு அடிவருடும் தமிழ் கட்சிகளோ, வேறு எந்தக் குழுக்களோ அல்ல. ஆனால் தமிழீழ மண் காக்க, தமிழர் துயர் போக்க, தமிழர் உரிமையை வென்றெடுக்க, தம் தினவெடுத்த தோள்களிலே தமிழ் வீரம் தாங்கி நின்று தம் உயிரைத் துச்சமென மதித்து, தம் வியர்வையையும் குருதியையும் சிந்திப் போராடும் புலிகளிடம்தான் அத்தேசியத் தலைமை உண்டு என்று அனைத்துலகிற்கும் எடுத்தோதும் தூதர்கள் நீங்கள். அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். பண்பும், தியாகமும், ஒழுக்கமும் மிக்க விடுதலை வீரர்கள். தமிழ் மண்ணின் காவல் தெய்வங்கள் என்ற பெருமிதம் கலந்த நன்றி உணர்வோடு நாற்றிசையும் முழங்கும் நாதசுரங்கள் நீங்கள். எனவே ஈழவிடுதலைப் போரிலே உங்கள் பணியோ மிகமிகப் பெரியது. உங்கள் பொறுப்பும், கடமையும் அளவிடற்கரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் உயிர்க்கினிய தமிழினமே,**

நமது இனம் வலிமைமிக்க ஓர் இனம். அது வெட்ட **வெட்டத் தழைக்கும் ஓர் ஆலமரம், அழிக்க அழிக்க முளைக்கும் அறுகம் புல், சுட்டுப் பொசுக்கப் பொசுக்க முசியாமல் வாழும் மூங்கில்.** அதன் வரலாறே அதற்குச் சான்று பகரும். உன் தாய்மொழியாம் தமிழ் மகளே அப்படிப்பட்டவள் தானே. அதை ஈழத்துக் கவியரசன் காசியண்ணா தனக்கே உரிய அழகிய நடையிலே:

**"கத்து கடல் பறித்தும் கல்லாதார் தீ வைத்தும்**
**குத்து வடமொழியின் கூர்ப்பட்டும் - அத்தனைக்கும்**
**வாடாத செந்தமிழின் வரலாறு......"**

என்று அதை விளக்குகிறார். இன்று அத்தனை பண்டைய மொழிகளும் இறந்துபட எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்த போதும் முதுமையையே எய்தாமல் இளமைப்பொலிவுடன் என்றும் குன்றா அழகுடன் விளங்குபவள் தமிழன்னை. அவள் வயிற்றினின்று உதித்த இனமும் தன்னைத் தானே அழித்துக்கொண்டாலொழிய வேறு எவராலும் அழிக்கப்படவே முடியாது. கரைபுரண்டு ஓடுகின்ற காட்டாறு தனது பாதையிலுள்ள பாரிய மரத்தையும் வேருடன் சாய்த்து அடித்துச் செல்லுகிறது. ஆனால் ஆங்கே துள்ளி விளையாடும் வெள்ளிபோல் மின்னும் சின்ன மீன் ஒன்று அந்த ஆற்று வெள்ளத்திலும் எதிர் நீச்சல் அடித்து விடுகிறது. வீறுகொண்டு வீசும் புயற்காற்று பாரிய விமானங்களையே தாக்கி வீழ்த்தி விடுகிறது. ஆனால் பட்டுப்போன்ற சின்னஞ்சிறிய சிட்டுக் குருவி அதற்கு ஈடுகொடுத்து அப்புயற்காற்றிலும் பறந்து விடுகிறது. அதுபோன்றுதான் ஈழத் தமிழினமும் மலை குலைந்தாலும் தன் நிலை குலையாமல் எத்தனை இடர்கள் வந்தபோதும் துணிவையே துணையாகக் கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் ஒன்றுபட்டு நின்றால் யாரும் அதை அழித்துவிட முடியாது. **"பொன்னை நெருப்பில் உருக்கினாலும், கரும்பை ஆலையில் கசக்கினாலும், பாலை அடுப்பில் காய்ச்சினாலும், சந்தணத்தை உரலில் அரைத்தாலும் அதன் குணமும் , மணமும் மாறாது"** என்கிறது நீதிவெண்பா. அதுபோன்று எத்தனை இடர்கள் வந்தபோதும், ஈழத் தமிழினமே நீ துவண்டுவிடக் கூடாது நீ கலங்கிவிடக் கூடாது. உன் குணமும், உயர் ஒழுக்கமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமும், துணிவும் பெருக வேண்டுமேயன்றி அருகிவிடக் கூடாது. ஒரு ரப்பர் பந்தை எவ்வளவு பலத்துடன் நிலத்தில் ஓங்கி அறைகின்றோமோ அவ்வளவு வேகத்துடன் அது வான் நோக்கி மேலெழுந்து செல்லுகிறது. அதுபோன்று நீயும், எவ்வளவிற்கு உன் பகைவர் உன்னை நசுக்கி ஒடுக்க முயன்றாலும் அவ்வளவிற்கு நீ மேலோங்கிச் செல்ல வேண்டும்.

உன் கடந்தகால வரலாற்றைச் சற்று திரும்பிப்பார். அடக்கு முறையாளர்கள் உன்னை, உனது மண்ணை, கண்ணொத்த உனது மொழியை, பொன்போன்ற கலாச்சாரத்தை, பொருண்மிய மேம்பாட்டை, அளப்பரிய அறிவு வளத்தை, போற்றி வளர்த்த ஆற்றல்களை, வரலாற்றை அழித்தொழிக்க எவ்வளவு முயன்றனர்! இந்த இன அழிப்புக்குத் துணைபோனது யார் என்று சிந்தித்துப்பார்; தப்பாது உண்மையைச் சந்திப்பாய். இனத்துரோகம் புரியத் துரையப்பர்கள் எத்தனைபேர்? தமிழீழம் என்ற தமிழனின் தாரக மந்திரத்தை தாரை வார்க்கும் போலித்தலைவர்கள் எத்தனை பேர்? அற்ப சலுகைகள் என்ற எச்சில் இலைக்காய் அடக்குமுறை அரசுக்குத் துணைநின்று உடன் பிறப்புகளையே காட்டிக் கொடுக்கும் முகமூடி போட்ட தலையாட்டிகள் எத்தனை பேர்? நாட்கள் எண்ணப்பட்ட பதவிகளுக்காக நாடு நாடாகச்சென்று பொய்பேசி, பெற்ற தாயையே வேசியாகக்காட்டி அவளையே விற்றுப்பிழைக்கத் தயங்காத கதிர்காமர்கள் எத்தனை பேர்? தமிழ் மக்களுக்குச் சேவை செய்யும் போர்வையிலே அரசியலில் புகுந்து சொல்லொணாத் துயரங்களுக்குத் தம்மவரை ஆளாக்கும் அவசரகாலச் சட்டங்களுக்கு வாக்களித்து தங்கள் தேவைகளைப் பேணி நிற்கும் சுயநலவாதிகள் எத்தனை பேர்? "தமிழீழம், தமிழீழம்" என்று மேடைகளிலேறி வாயினிக்கப் பேசிவிட்டு தம் வாழ்வினிக்க நாடாளுமன்ற இருக்கைகளை அழுங்குபோல் பிடித்திருக்கும் வாய்ச்சொல்வீரர்கள் எத்தனை பேர்? ஒன்றுபட்டுப் போராடத்தவறி, பிளவுபட்டு நின்ற காரணத்தால் ஈழத் தமிழகம் சந்தித்த பின்னடைவுகள் எத்தனை? **புண்ணடைந்த நெஞ்சுடனே, தக்க தலைவர்களைத் தேடியலையும் திக்கற்ற நிலையில் நின்ற தமிழினத்திற்கு மாபெரும் தலைவன் ஒருவன் கிடைத்தான். "பொங்கு தமிழர்க்கின்னல் விளைந்தால் சங்காரம் நிசம்" எனப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்க்கொடி ஏந்தி வந்தான். தடையனைத்தும் தகர்த்து மடைதிறந்த வெள்ளமெனப் படை திரட்டி வந்தான். குறைவற்ற ஆற்றலும், வீரமும், ஞானமும் நிறைவுற்று நின்றான். வையகம் வியக்க, பகைவர்கள் திகைக்க, தமிழ் நெஞ்சங்கள் களிக்க பெரும் புலியென வாய்த்தான். நம் அடிமை மனம் மடியப் பெரும் புயலென எழுந்தான்.**

குட்டக் குட்ட குனியும் குருடர் கும்பலா தமிழினம்? மூக்கை மூடினால் வாயைத் திறக்க அறியாத முட்டாள் இனமா இது? ஆணவத்திற்கும் அதர்மத்திற்கும் அடிபணியும் கோழைகளின் கூட்டமா இது? அரசியல் கோமாளிகளின் ஏமாற்று வார்த்தைகளை இனியும் நம்பும் ஏமாளிகளின் குலமா இது? நெஞ்சிலே நேர்மையுடனும், செயலிலே தூய்மையுடனும், சொல்லிலே வாய்மையுடனும் தோன்றிய தனிப்பெரும் தலைவன் பிரபாகரனைத் தொடர்ந்தது தமிழினம். உலகம் என்றுமே கண்டிராத தன்னிகரற்ற போராளி மட்டுமல்ல, சீர்குலைந்துபோன தமிழ்ச் சமுதாயத்தைச் செப்பனிடவந்த பேரொளியென்றும் கண்டது தமிழினம். **"திரி அழல் காணின் தொழுப, எரி அழல் காணின் இகழ்ப"** என்கிறது நாலடியார். விளக்கின் ஒளியைத்தான் உலகம் வணங்கும். விறகின் நெருப்பைத் தொழுது நிற்குமோ? என்பது அதன் பொருள். அதுபோன்று விளக்கின் சுடர் எது, விறகின் நெருப்பெது என்று கண்டு கொண்டது தமிழினம். தங்கள் இருண்ட வாழ்வில் நம்பிக்கை ஒளியாக அவனை எற்று இனி "யாமார்க்கும் அடிமை செய்யோம்" என உறுதி பூண்டனர்.

குண்டுகள் விழும் போர்க்களம் நோக்கி தம் இளம் கன்றுகளை அவன் பின்னே அனுப்பினர். "சென்று வா மகனே வென்று வா" என்று மட்டுமல்ல, துடைப்பம் பிடிக்கும் கையிலே துப்பாக்கியையும் பிடித்து, வளையல் ஏந்திய கையிலே வாளையும் ஏந்தி, சென்று வா மகளே, நம் தலைவனின் தடந்தோளிலே வெற்றிவாகை சூட்டி வா என்றல்லவா சொல்லித் தாய்க்குலத்தையும் போர்முனைக்கு அனுப்புகிறது இன்றைய ஈழத் தமிழகம். அவர்களும் பெண் புலிகளெனச் செருமுகத்தில் புகுந்து தாம் ஆண்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லர் என்பதை எண்பித்து வருகின்றனர். இது எந்த நாடோ, எந்த வல்லரசோ செய்யாத ஒரு புரட்சி. இன்று தமிழீழத்தில் செங்களமாடும் ஆயிரமாயிரம் புலிகளும், விழுப்புண்பட்டு தாய் மண்ணுக்காக வீழ்ந்து மடிந்த எண்ணற்ற வீரர்களும், வீராங்கனைகளும் எத்தகைய அன்பையும் நம்பிக்கையையும் அத்தலைவனிலே வைத்திருக்க வேண்டும்! அப்பப்பா, நினைத்தாலே மெய்சிலிர்க்குமே தளராத நெஞ்சுரத்துடன் தம்தானைத் தலைவன் பிரபாகரனின் பின் நின்று கோழைகளின் குண்டுவீச்சுக்கும், கூலிப்படைகளின் பீரங்கித் தாக்குதலுக்கும் எதிரியின் துப்பாக்கிச் சூடுகளுக்கும் ஈடுகொடுத்து தமிழீழம் என்ற இலட்சியத்தை நோக்கி எத்தனையோ துன்பங்களையும் துயரங்களையும் துச்சமென மதித்து, அச்சமின்றி ஏறுபோல் பீடுநடை போடுகின்ற ஈழம்வாழ் தமிழர்கள் அத்தனைபேரும் எத்துணை வீரம் படைத்தவர்களாக விளங்க வேண்டும். உயிரைவிட உயர் மானம் பெரிதென்றும், "வெற்றியன்றேல் வீர மரணம்" என்றும் வாழும் ஒவ்வொரு தமிழனும் ஒரு புலியல்லவா? **நம் தேசியத் தலைவனின் தலைமையில் தமிழனின் வரலாறு மாற்றி எழுதப்படுகிறது; வீரகாவியம் ஒன்று படைக்கப்படுகிறது. தமிழனின் பெருமைமிக்க புறநானூற்று வீரமே நாணி நிற்க அதற்கே வீரம் கற்பிக்கப்படுகிறது. புதியதோர் தமிழ் உலகம் - சாதி மத பேதமற்ற பெண்ணினத்தின் மாண்பு கூறும் பொன்னுலகம் படைக்கப்படுகிறது. கண்மூடித்தனமான பழக்கவழக்கங்கள் மண் மூடிப்புதைக்கப் படுகின்றன. சமதர்மச் சமுதாயம் ஒன்று சமைக்கப் படுகிறது. வரட்டு வேதாந்தங்கள் விரட்டியடிக்கப்படுகின்றன.**

**என் அன்புமிகு உடன் பிறப்புகளே,**

அந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட வீர மறவர்களை நம் நெஞ்சமென்ற மஞ்சத்திலிருத்தி, அன்பென்னும் மலரெடுத்து, நினைவென்ற தூபமிட்டு, நன்றி என்ற தீபம் ஏற்றித் தினமும் வணங்கி நிற்றல் போதாது; அவர்கள் வீரக் கதைகளை நெஞ்சினிக்க, வாயினிக்க மெய்சிலிர்க்கச்சொல்லி மகிழ்ந்தால் போதாது; அவர்கள் வேதனைகளில் பிறந்த சாதனைகளைக்கண்டு பெருமை கொண்டு கைதட்டி நிற்றல் போதாது; ஈழத்தில் நம்மவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படும் தாங்கொணாத் துன்பங்களைக் கேட்டு கலங்கி நிற்றல் போதாது; அங்கு பாலின்றித் தவிக்கும் பச்சிளம் பாலகர்கள், பட்டினியால் வாடும் முதியோர், நோய் தீர்க்கும் மருந்தின்றி வீணே மடிந்தொழியும் பிணியாளர், பிள்ளைகளை இழந்து துடிதுடிக்கும் தாய்க்குலம், மாங்கல்யம் பறிகொடுத்த மங்கையர், பலியான விலை மதிக்கற்கரிய ஆயிரக்கணக்கான இனிய இளம் உயிர்கள், கற்பை இராணுவ வெறியரிடம் பறிகொடுத்த பைந்தமிழ்ப் பாவையர் இப்படி வேதனையில் வாடுவோரை எண்ணி நெஞ்சம் குமுறிநிற்றல் போதாது. எங்கு நாம் வாழ்ந்தாலும் தமிழ் ஈழத்துக்காக வாழ வேண்டும். தமிழ் ஈழம் உருவாக நம் நனிபங்கைக் கொடுக்க வேண்டும். ஈழமண்ணில் பிறந்த ஒவ்வொரு உயிரும் தமிழீழத்தின் சொத்து என்பதை உணர்ந்து, தமிழீழமே நம் தாரக மந்திரமாக நாளும் பொழுதும் நம் நாவில் தவழவேண்டும்; தமிழீழமே நம் இதயத் துடிப்பாக நெஞ்சில் ஒலிக்க வேண்டும்; தமிழீழமே நம் மூச்சாக என்றும் இயங்க வேண்டும். தமிழீழ உணர்வே நம் குருதியோடு கலந்து நம் நாடி நரம்புகளிலெல்லாம் ஓடவேண்டும்.

**மௌனமாக நிற்கும் பெரும்பான்மைத் தமிழினம் தம் பக்கமென்று யாராவது தப்புக் கணக்குப் போட்டால், நாம் தம்பி பக்கமே என்று விரைவில் பாடம் புகட்டுவோம். புலம் பெயர்ந்த தமிழர் இன்று தூங்குவதுபோல் தோன்றலாம். ஆனால், அவர்கள் தூங்கும் எரிமலை. தூங்குவதுபோல் நடித்து தம் அடிவயிற்றிலே நெருப்பைக் கட்டிப் பலம் சேர்க்கும் ஒர் எரிமலை. தூங்கினோம் பலம் சேர்த்து, பொங்கி வெடித்தெழுவதற்கே என்று செயலில் காட்டுவோம். தமிழச்சியின் வயிறென்ற குகையினின்று வெளிவந்த ஒவ்வொரு உயிரும் புலியே. நாம் செயலற்றுப் பதுங்கியதுண்டு. அது பயந்ததால் அல்ல. வீரத்தோடெழுந்து வலிமை சேர்த்துப் பாய்வதற்கே என்று அனைவருக்கும் விளக்கிடுவோம். சண்டை போடும் வெள்ளாட்டுக்கடா பின்னோக்கிச் செல்வது சரண் அடையவல்ல, வேகம் கூட்டி வந்து எதிரியைச் சாய்த்திடவே. அதுபோல நாமும் பின்னடைந்ததுண்டு. அப்பின்னடைவு பலம் சேர்த்துவந்து தமிழர் பகை மாய்த்திடவே என உணர்த்திடுவோம்.**

"எங்கள் பகைவர் எங்கோ ஒழிந்தார், இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே" என்ற பாரதிதாசனின் கூற்றை மெய்ப்பிக்க என் உடன் பிறப்புக்களே எழுவீர்; நம் தானைத் தலைவனின் பின் அணி திரள்வீர்; தமிழீழம் உருவாக நும் நனி பங்கைத் தந்திடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தளரா உறுதியுடன் உண்மையின் வழி நின்று
தமிழா, தொடர்ந்திடு உன்விடுதலைப் பயணத்தை

ஆலம் விழுதுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை ஓங்காதோ
# வேற்றுமை நீங்காதோ

கனடா நாட்டின் ரொறொன்ரோ நகருக்கு எனது மனைவி மக்களுடன் நான் அடிக்கடி செல்வதுண்டு. அதற்கு முதல் காரணம் என்னைப் பெற்றெடுத்து பேணி வளர்த்த பேரன்பு அங்கு வாழ்வது. அடுத்ததாக உறவினரை, ஊரவரைக் கண்டு மகிழ்வதால் ஒரு குட்டி ஈழத்திற்குச் சென்றுவருவது போன்ற உணர்வு என்னை ஆட்கொள்வதே. அங்கு கட்டிடங்களிலோ கடைத்தெருக்களிலோ தமிழர்களைப் பார்த்துவிட்டால் என் மனைவி அடையும் மகிழ்ச்சியோ வார்த்தைகளில் அடங்காது. "இங்க பாருங்க எங்கட சனத்தை", "அங்க பாருங்க எங்கடை கடைகளை" இப்படி ஒரு குழந்தைபோல அன்பொழுக மகிழ்ச்சி பொங்கச் சொல்லிக்கொண்டே இருப்பாள். நம்மவரைப் பார்ப்பதில் அவளுக்கொரு தனி இன்பம். ஏனெனில் அவள் பிறந்து வளர்ந்தது ஒரு இனப்பற்று மிக்க குடும்பத்தில்தான். அக்குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் இன்று அமெரிக்காவில் வாழ்ந்தாலும் தமிழினத்தை மறக்கவில்லை. தமிழர் ஒருவருக்கு ஏதும் உதவி தேவையென்று அறிந்தால் இன்முகத்துடன் சிரமங்களைப் பாராது ஓடோடிச்சென்று உதவுவதைப் பார்த்தாலே மனம் குளிரும். தமிழர்க்கு தம் உள்ளத்தை மட்டுமல்ல உறைவிடத்தையும் எப்போதும் திறந்து வைத்திருப்பார்கள்.

1983ம் ஆண்டின் இனக் கலவரத்தின்பின் அகதிகளாய் வந்து சேர்ந்த எத்தனையோ இளைஞர்களுக்கு அடைக்கலம் ஈந்து எத்தனையோ மாதங்களாக அவர்களைப் பேணிக்காத்த பெருமை அக்குடும்பத்தைச் சாரும். சாதி மத பேதமின்றி வீதிகளிலோ, விமான நிலையத்திலோ வேறு எங்கோ நின்றோரை தம் வீட்டுக்கு அழைத்து வந்து புன்முறுவல் பூத்த முகத்துடன் இன்சொல் இயம்பி தமக்குள்ள அனைத்தையும் உவப்புடன் பகிர்ந்து கொண்டது யாரும் மறக்க முடியாததொன்று. பெரிய வசதிபடைத்த மாடி வீடு இருக்கவில்லை. மாபெரும் மனம் இருந்தது. ஒரே நேரத்தில் இவர்களுடன் இருபதிற்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் மாதக் கணக்காய் ஒரு குடும்பம் வாழவேண்டிய வீட்டில் வாழ்ந்தார்கள் என்றால் மிகுதியை உங்கள் கற்பனைக்கு விட்டு விடுகிறேன். இன்றும் பலருக்குத் தங்குமடம் அவர்கள் இருப்பிடம். அங்கு நிற்பதற்கு இடமிருந்தால் தங்கிச் செல்வதற்கும் வசதி உண்டு என்பது அவர்களது எண்ணம். நெடுந்தீவில் மண்வளம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனவளம் நிறைய உண்டு என்பதை அவர்கள் வாழ்வே எண்பித்து விடும். ஆழ்கடலில் அல்லலுற்று வந்தோரை முகம் மலர உளம் மகிழ வரவேற்று பகுத்துண்டு வாழ்ந்து பழகியதா இத்தகைய விருந்தோம்பலுக்குக் காரணம் என்று எண்ணத் தோன்றும். ஆர்ப்பரிக்கும் அலைகடலுக்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்டவர்கள் தம்மவரைக் கண்டதும் பஞ்சுபோன்ற நெஞ்சு கொண்டல்லவா தஞ்சமளிக்கின்றனர். அதற்குப் பெயர்தான் இனப்பற்று.

ஒருநாள் ரொறொன்ரோ நகரில் எனது நண்பர் ஒருவர் வாழும் பலமாடிக் கட்டிடம் ஒன்றிற்கு அவரைப் பார்ப்பதற்குச் சென்றோம். அங்கு எப்பக்கம் திரும்பினாலும் நம்மவரையே காண முடிந்தது. அதைப்பற்றி நாம் அவருடன் பேசிக்கொண்டிருந்த போது "நாம் இங்கு ஒருவரோடு ஒருவர் அதிகம் பழகுவதில்லை" என்றார். ஏனென்று நான் சிறிது கவலையுடன் வினவ "ஊர்ப்யெரில் சாதிச் சண்டைகளும், துப்பாக்கிச் சூடுகளும் காடைத்தனங்களும் அதிகரித்து விட்டன. நம்மவரை வரவேற்றுத் தம்மவரின் வரிப்பணத்தில் வாழவைக்கும் நாட்டுக்குச் செலுத்தும் நன்றிக்கடனா இது? போதைப் பொருள் கடத்துவதும், மதுபோதையில் வாழ்க்கை நடத்துவதும் நம்மவர்க்கு வாடிக்கையாகிவிட்டது. இப்போது சில இடங்களில் மதவெறியும் தலையெடுக்கிறது. நினைத்தாலே வெறுப்புத்தான் வரும். எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோவெனப் பயந்து ஓடும் புளியம்பழமும் போல வாழ்ந்து விட்டுப் போகிறோம்" என்று சலித்துக்கொண்டார் என் நண்பர். இதைக் கேட்டதும் நான் என் மனைவியின் பக்கம் திரும்பினேன். கவலை தோய்ந்த முகத்துடன் அவள் என்னைப் பார்த்தாள். நமது சந்திப்பை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் பயணத்தைத் தொடங்கினோம். வழமையாக கலகலவெனப் பேசிக்கொண்டிருக்கும் என் மனைவி மௌனவிரதம் பூண்டவள்போல் ஏதோ ஒன்றை இமை வெட்டாது பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாள். மனமுடைந்த நிலையில் ஏதோ ஒன்றை ஆழமாக சிந்திக்கிறாள் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. அப்போது அவள் நெஞ்சின் பழுவைக் குறைப்பதுபோல் ஒரு பெருமூச்சு எழுந்துவந்து அவளது உடலை ஆட்டி அசைத்தது. அது அடங்கியபின் அவள் என்னைப்பார்த்து "ஏனப்பா, நம் தமிழர் ஒரு குடும்ப உணர்வோடு ஒன்றுபட்டு வாழக்கூடாது?" என்று கேட்டாள். சிறிது நேரம் நான் வாயடைத்து நின்றேன். அப்போ என் மனத்திரையிலே தமிழினத்தின் சோக வரலாறு ஒரு படமாக ஓடி மறைந்தது. "இதுதான் தமிழினத்தின் சாபக்கேடம்மா, ஒற்றுமையின்மை அவர்களோடு கூடப்பிறந்த தொன்றாச்சே" என்று நான் சொன்னபோது கவலை என் நெஞ்சைக் கவ்வியது; ஏக்கம் என் குரலில் தொனித்தது. "இன்று தமிழினம் தனக்கென்று ஒரு நாடில்லாமல் வாழ்கின்றதெனில். காரணம் ஒன்றுமையின்மையே" என்று நான் கூறிவிட்டு திரும்பவும் சிந்தனையில் ஆழ்ந்தேன். என் எண்ணப் பறவை சிறகடித்து 1976ம் வருடத்துக்குப் பறந்தது.

தந்தை செல்வா தமிழீழமே தமிழனின் முடிந்த முடிபென்று ஆணித்தரமாகக் கூறியபின் எத்தனையோ நகரங்களிலும் பட்டி தொட்டிகளிலும் "தமிழீழமே தமிழனுக்கு விடிவு தரும், அவன் அடிமைத் தழைக்கு முடிவு தரும்" என்று நான் பேசிய நாட்களில் ஓர் நாள் ஒரு இளைஞன் எழுந்து "அங்கோலா நாட்டின் அலங்கோலம் கண்டபின்னும் எங்கோலம் காட்டுதற்கோ நமக்கோர் தனிநாடு"? என்று கேட்டான். எங்கோலம் என்று அவன் அன்று குறிப்பிட்டது தமிழனின் இந்த ஒற்றுமையின்மையைத் தானே என உணர்ந்து கொண்டேன். நாம் சீர்கெட்டு, சிறப்பழிந்து, சிந்தை தடுமாறி சிங்களவனுக்கு அடிமைப்பட்டது இதன் காரணமாகத்தானே என மனம் நொந்தேன். ஒரு குடும்ப உணர்வை இவர்களுக்கு எப்படி ஊட்டுவது, எவ்வாறு இவர்களை இவ்வுணர்வால் பிணைப்பது என எண்ணி ஏங்கியது என்மனம். அந்த ஏக்கம் பெற்றெடுத்த குழந்தையே இந்நூல். என் உணர்வுகளைப் புரிந்து கொண்டவள்போல் என் மனைவி என் தோளிலே சாய்ந்து விட்டாள். அவளும் ஒரு காலத்தில் "தமிழீழமே தமிழனின் இதய கீதமென்றும், அதுவே தமிழன் தன் மானத்துடன் வாழ ஒரே வழியென்றும்" மேடைகளில் மொழிந்தவள். அப்போது ஒரு கதை என் நினைவுக்கு வர "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் கதை சொல்லட்டுமா" என்றேன். தோளிலே சாயந்த வண்ணம் ஆம் என்பதுபோல் தலை அசைத்தாள் அவள். "இது தமிழரின் தொடர்கதை அம்மா" என்று தொடங்கி அவளுக்கு ஆறுதல் கூற அன்புடன் அவள் கன்னத்தைத் தடவினேன். அது கண்ணீரால் நனைந்திருந்தது. நான் திரும்பவும் கதையைத் தொடர்ந்தேன். "ஒரு காலத்தில் இந்தியாவில் தமிழ் மன்னன் ஒருவனுக்கும் மொகலாய மன்னன் ஒருவனுக்கும் சண்டை மூண்டது. இரவு வேளையில் தமிழ் வீரர்கள் பள்ளத்தாக்கிலும் முஸ்லீம் வீரர்கள் மலைமீதும் பாளையம் இறக்கி இருந்தனர். ஓர் இரவு மொகலாய மன்னன், பள்ளத்தாக்கில் தங்கியிருந்த தமிழ் வீரர்களின் பாளையத்தைப் பார்க்க மலையின் ஓரமாக வந்தான். அங்கு பல இடங்களில் நெருப்பு எரிந்துகொண்டிருப்பதைக் கண்டு பயந்து, தன் அமைச்சரைப் பார்த்து "தமிழர் படை ஏதோ திட்டம் போடுகின்றது. அது இரவோடு இரவாக நம்மைத் தாக்கக் கூடும். நமது படைவீரர்களை விளிப்போடிருக்கக் கட்டளையிடு" என்றான். அப்போ அமைச்சர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்து விட்டு "மன்னவா அஞ்ச வேண்டாம். தமிழ் வீரர்கள் தினமும் சண்டை முடிந்ததும் பிரிந்துபோய் சாதிக்கொரு அடுப்பு வைத்து சமையல் செய்கின் றனர். அதுதான் பல இடங்களில் நீங்கள் காணும் நெருப்பு. அது ஒரு நெருப்பாக ஒரே இடத்தில் என்று எரியுமோ அன்றுதான் நாம் பயப்பட வேண்டும்" என்றான்.

அக்கதையைச் சொல்லி முடித்துவிட்டு என் மனைவியின் கருத்தை அறிய அவள் பக்கம் திரும்பினேன். ஏளனச் சிரிப்பொன்று அவள் உதட்டில் நெளிந்து மறைந்தது. சிரித்தவளிடம் அழுததற்குக் காரணம் கேட்போமே என எண்ணி "ஏனம்மா அழுதீங்க" என்றேன். காரணம் ஏதுமில்லை என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு தொடர்ந்தும் மௌனமாக இருந்தாள். நான் எதிர்பார்த்தபடி சிறிது நேரத்தில் மௌனம் கலைந்தது. கோபமும் வேதனையும் கலந்த உணர்வுகளில் ஊறி வந்தன வார்த்தைகள். **"களத்து மேடையிலே கதிர்மிதிக்கும் மாடுகூட நெல்மணியைப் பிறர்க்களித்து தான் வைக்கோலை என்றாலும் தின்னும். ஆனால் வாழ்வு வழங்கும் இன்பங்கள் அனைத்தையும் துறந்து, தம்மை மறந்து அடுத்த தலைமுறைவாழ நம் குஞ்சுகள் போர்க்களத்தில் இறந்துகொண்டிருக்க, வெட்கம் மானமற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோற்றாலடித்த பிண்டங்களாய்க் காடைத்தனம் புரிந்து தமிழினத்திற்கே களங்கம் கற்பிக்கும் ஒரு சிலரை எண்ணி அழாமல் வேறு என்னதான் செய்யமுடியும்? ஒழுக்கம் குன்றாக் குணக்குன்றுகளாக, ஆங்கே நம் இளம் கன்றுகள் வீரத்திற்கும் தியாகத்திற்கும் இலக்கணம் எழுதி தமிழினத்திற்குப் பெருமை சேர்த்து வரலாறு படைத்துக்கொண்டிருக்க, இங்கு இனத்திற்கே இழுக்குத் தேடித்தந்து தமிழனைத் தலை குனிய வைத்துக் கொண்டிருக்கிறார்களே; அவர்களை நினைத்தால் வேறென்ன வாய்விட்டுச் சிரிக்கவா முடியும்? அங்கே, நம் உடன் பிறப்புகள் வானமே கூரையாக, மண்ணே மலர் மஞ்சமாக காடுகளில் கொட்டும் மழையிலும் வாட்டும் வெய்யிலிலும் வாடிக்கொண் டிருக்க, ஒரு நேரச் சாப்பாட்டுக்கே கூப்பாடு போட்டுக் கொண்டிருக்க, நோய் தீர்க்கும் மருந்தின்றி, அதன் கொடுமை தாங்க முடியாது துடிதுடித்து மரணத்தின் மடியில் சரிந்து கொண்டிருக்க இங்கு குடித்து கும்மாளம் போடுபவர்களை நினைத்தால் கைதட்டிப் பெருமைப்படவா முடியும்? அங்கு, பாலின்றித் தவிக்கும் நம் பச்சிளங்குழந்தைகள் பசிதாங்க முடியாது "அம்மா" என்று கதற, வழியேதும் அறியாது தாய்க்குலம் பதற அவர்கள் நினைப்பொழிந்து, இங்கு வீணே உண்டு களித்திருப்போரைக் கண்டால் கலங்காமல் வேறு என்ன செய்ய முடியும்? அவளின் உணர்ச்சி வசப்பட்ட பேச்சு நின்றது. புயற்காற்றுடன் பெய்த அடைமழை ஓய்ந்து அமைதி பிறந்ததைப் போலிருந்தது.

கண்ணீர் திரையிட்ட கண்களால் பின் இருக்கையில் இருந்த என் இரு கண்மணிகளையும் திரும்பிப்பார்த்தேன். அவர்கள் கவலை ஏதுமின்றி அனைத்தையும் மறந்து உறங்கிக்கொண்டிருந்தனர். "என் கண்மணிகளே கண் உறங்குங்கள்! இப்போ நன்றாக உறங்குங்கள். உங்கள் உடன் பிறப்புக்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய தொண்டு நிறைய உண்டு. உங்களுக்கு இன்று நாம் ஊட்டும் தமிழுணர்வு நாளை உங்களைப் பொங்கி எழ வைக்கும். என் புலிக்குட்டிகளே, இப்போ கண்ணுறங்குங்கள்" என வாழ்த்தியது என் மனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்தாய் பெற்றெடுத்த செல்வங்களே,**

நீங்கள் வாழும் நாட்டில் யூத மக்கள் எவ்வளவு இனப்பற்று மிக்கவர்களாக வாழ்கின்றனர் என்பதை, சற்றுக் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தம் இனத்தைச் சேர்ந்த மக்களுடன் எவ்வளவு பற்றும் பாசமும் கொண்டு விளங்குகின்றனர். ஒரு குடும்ப உணர்வோடு ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டி தம்மவரை வளர்த்து விடுகின்றனர். தாம் புகுந்த நாடுகளில் தமது அறிவையும், ஆற்றலையும் வளர்த்து, உழைப்பால் உயர்ந்து, பொருள் வளம் பெருக்கி மிகவும் பலம் மிக்க ஒரு சமூகமாக விளங்குகின்றனர். தமிழினம்போல் ஒருநாள் நாடற்றிருந்த யூத இனம் இன்று தமக்கென்று ஒரு நாட்டை அடைவதற்கு வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த யூத இன மக்கள் வழங்கிய ஆதரவும் தத்தம் நாட்டு அரசுகளின்மேல் போட்ட அரசியல் அழுத்தமுமே முக்கிய காரணங்களாகும். அவர்கள் எந்த நாட்டின் குடிமக்களாக இருந்தாலும் தாம் இஸ்ராயேல் நாட்டின் குடிமக்கள் என்ற உணர்வுடன் அந்நாட்டின் வளர்ச்சிக்காக எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தயங்காது செய்வார்கள்; அந்நாட்டின் வளர்ச்சிக்காக எத்தகைய தியாகங்களையும் செய்யப் பின்நிற்க மாட்டார்கள்; தமது வருவாயில் ஒரு பகுதியை தமது சொத்தில் ஒரு பங்கை தம்தாய் நாட்டுக்கே அளித்து விடுகின்றனர்; உலக நாடுகள் பல அந்நாட்டுடன் தமது உறவுகளைத் துண்டித்துவிட்ட நிலையிலும் அந்நாட்டுக்கு வெளியே வாழும் யூத மக்களே, பாலைவனமாக விளங்கிய அந்நாட்டை ஒரு சோலைவனமாக - வரண்ட மணல்பரப்பை ஒரு வளங்கொழிக்கும் மண்ணாக மாற்றியமைத்து எல்லாத் துறைகளிலும் வளர்ச்சிபெற்றதொன்றாக விளங்க வழிகோலினர். அண்டைய அரபு நாடுகள் அதை விழுங்கிவிடாதிருக்க அதை ஒரு இராணுவப் பலம்பொருந்திய நாடாகவும் உருவாக்கினர். அதற்குக் காரணம் இன்றும் அன்றும் யூதமக்கள் தம் மண்ணின்மேல் வைத்த பேரன்பே ஆகும். பைபிளைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை புரியும். 136வது சங்கீதத்தில் கைதிகளாய் பபிலோன் நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட யூத மக்கள், தங்கள் நாட்டுப்பற்றை உணர்ச்சி பொங்க வெளிப்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பபிலோன் ஆறுகள் அருகே அமர்ந்து, சீயோனை நினைத்த பொழுது நாங்கள் கண்ணீர் சிந்தினோம். அந்நாட்டு அலரிச் செடிகள் மீது எங்கள் யாழ்களை மாட்டி வைத்தோம். எங்களை சிறையாக்கியவர்கள் நாங்கள் பாடும்படி கேட்டார்கள். எங்களைத் துன்புறுத்தியவர்கள் மகிழ்ச்சிப்பா இசைக்கச் சொன்னார்கள். சீயோனைப்பற்றி கீதங்கள் சிலவற்றைப் பாடிக்காட்டுங்கள் என்றார்கள். ஆண்டவருடைய பாடலை அந்நிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்? யெருசலமே! நான் உன்னை மறப்பதாயிருந்தால் என் வலக்கை சூம்பிப் போவதாக. உன்னை நான் நினையாதிருந்தால் என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக" இது கிட்டத்தட்ட 3000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சங்கீதம், இதே உணர்வோடுதான் இன்றைய யூத மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் தங்கள் மண்மீது இவ்வளவு பற்றும் பாசமும் வைத்திருக்கின்றனரா? யப்பானியர்களும் மிகவும் நாட்டுப்பற்று மிக்கவர்களாக விளங்குகின்றனர். இரண்டாவது உலகப்போரின் போது பல யப்பானிய விமானங்கள் அமெரிக்கர்களால் சுட்டுவீழத்தப்பட்டன. வீழ்த்தப்பட்ட விமானங்களில் இறந்து கிடந்த விமானிகளின் ஒரு கரம் பை ஒன்றினுள் இருக்கக் கண்டனர். அப்பைக்குள் இருந்தது யப்பானிய மண். அதை இறுகப் பிடித்த வண்ணமே தம் உயிரை அவ்விமானிகள் தம் நாட்டுக்காக அர்ப்பணித்தனர். அம் மண்ணின் மேல் தாம் வைத்திருந்த அளப்பரிய அன்பை எண்பித்தனர். புலம் பெயர்ந்து வாழும் தமிழர் தாம் பிறந்த கண்ணொத்த ஈழ மண்ணின் மேல் அன்பை, பாசத்தை தம் நெஞ்சிலே வளர்க்க வேண்டும். அதை தம் பிள்ளைகளின் உள்ளத்திலும் ஊட்ட வேண்டும்.

அதற்கு நல்ல வழி ஒன்று என் மனதில் பட்டது. அதை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், புலம் பெயர்ந்து தமிழர் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் ஈழ மண்ணை விற்பனைக்கு வைக்க வேண்டும். அந்த விற்பனையால் வரும் பணம், ஈழ மண்ணில் வாடும் நம் உடன் பிறப்புகளின் துயர் துடைக்கப் பயன்பட்டால் எவ்வளவு நன்மை பயக்கும்! ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் அதைப் பணம் கொடுத்து வாங்கி, கண்ணுக்குத் தெரியும் விதத்தில் ஒரு அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடிக் கலசத்தில் இட்டு, பூசை அறையிலோ அன்றேல் ஒரு புனிதமான இடத்திலோ வைத்து காலையிலோ மாலையிலோ மலர் சாத்தி குடும்பமாக வணக்கம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யின் நம் மண்ணின் மேல் பற்று நெஞ்சில் சுரந்து வரும். ஒரு நாளில் ஒரு மணித்துளி போதுமே இதைச் செய்ய. அப்புனிதமண் அவ்வீரமண் நம் கைகளில் தவழ ஆவன செய்வார்கள் என்பது எனது நம்பிக்கை. அப்பொன்னாள் மலரும்வரை, நாம் நம் நாடிருக்கும் திக்குநோக்கி செலுத்துவோம் நம் வணக்கத்தை! வளர்ப்போம் ஈழத்திருநாட்டுப் பற்றை!!

யூத மக்கள் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் திறமையும், ஆற்றலும். இனப்பற்றும் படைத்த தன்னலமற்ற தலைவர்கள் அச்சமுதாயத்தில் தோன்றி, மக்களை ஒருங்கிணைத்து, இன உணர்வை ஊட்டி வழிநடத்திச் செல்கின்றனர். உலகின் எந்த மூலையிலும் யூத இன மக்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தாலும் ஒருமித்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கவோ உதவிக்கரம் நீட்டவோ தவறமாட்டார்கள். ஐம்பது வருடங்களுக்கு முன் ஈழத்தமிழர்கள் போல் ஒடுக்கப்பட்ட இனமாக நாடுகள் தோறும் அகதிகளாகவே விளங்கினார்கள். இன்று வல்லரசான அமெரிக்க நாடுகூட யூதமக்களை எந்த விதத்திலும் பகைத்துக்கொள்ள முடியாத நிலையில் அதை நிறுத்தியிருக்கின்றனர். அவர்கள் போட்ட கோட்டை இவ்வல்லரசு தாண்ட முடியாது நிற்பது மாத்திர மன்று தன் மனச்சாட்சியைக்கூட யூத மக்களுக்காக விற்றும் விடுகிறது. உலகிலே எட்டுக்கோடி தமிழர்கள் பல்வேறு நாடுகளில் பரந்து வாழ்கின்றனர். யூத மக்களைவிட எண்ணிக்கையில் கூடிய வர்கள் நாம். நமக்கென்று ஒருநாடுமில்லை; அதில் ஒரு நாட்டமு மில்லை. ஏதோ இமயம் வென்றோம் இலச்சினை பதித்தோம், கடல் கடந்தோம் கடாரம் வென்றோம் என்று பழம் பெருமைபேசிப் பொழுது போக்குகின்றோமே தவிர, நாளைய தமிழினம் பெருமைப் படுவதற்கென நாம் எதைச் சாதித்தோம். தமிழனுக்கென ஒரு கொடி உலக அரங்கிலோ வேறு எந்த நாட்டிலோ பறக்கின்றதா? தமிழருக்கு எங்கேயாகிலும் தீங்கு நேர்ந்ததென்றால் தமிழினம் சிறப்பாக ஏழு கோடி தமிழர் வாழும் தமிழகம் கொந்தளித்துக் குமுறி எழ வேண்டாமா? அதைக்கண்டு உலகமே நடுநடுங்க வேண்டாமா? தமிழகம் உணர்விழந்து உறங்கி விட்டதேன்? ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தில் இல்லாமை, இயலாமை, அறியாமை, தெளியாமை ஆகியவற்றின் கோரப்பிடியில் நம்மவர்கள். அதனால்தான் "மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்ற நிலைமாறி நடிகர் எவ்வழி மனிதர் அவ்வழி" என்ற அவல நிலை தமிழகத்தில் நிலவியது. மறுபுறத்தில் வளங்குறையாக் கருத்துக்களை அள்ளி வழங்கி, மக்களுக்கு விழிப்பூட்டி வழிநடத்த வேண்டிய தலைமைத்துவம் தமிழகத்தில் அற்றுப்போய் தன்னலம் என்ற குழிதோண்டி, இனநலம் என்ற இலட்சியத்தை அலங்கார வார்த்தைகள் என்ற மண்போட்டுமூடும் அலங்கோலங்களைத்தான் பார்த்தோம். தமிழகத்தின் கிழக்கு வெளுத்துவிட்டது. நீடு துயில் போக்கி இன உணர்வை ஊட்ட எழு ஞாயிறு போன்று தலைவர்கள் தோன்றி விட்டனர். விடிவெள்ளி போன்று தலைவர்கள் சுடர்வீசத் தொடங்கி விட்டனர். இசைக் குயில்கள் தேனிசை சிந்தத் தொடங்கிவிட்டன. தமிழகம் விரைவில் விழித்தெழும். இனித்தமிழினத்தின் தலை நிமிர்ந்தெழும்.

யூத மக்களிடமிருக்கும் அறிவு, ஆற்றல், கடின உழைப்பு அனைத்தும் வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழரிடமும் உண்டு. ஆனால் தன்னலமும் ஒற்றுமையின்மையும் அவர்களோடு கூடப்பிறந்து விட்டனவே! ஒரு தமிழனை வீதியிலோ வேறு எங்கோ காணும்போது தங்கள் உடன் பிறப்புகள் என்ற உணர்வு பிறப்பதில்லையே! ஏதோ அந்நியர்கள்போல் நடந்து கொள்ளுகின்றனரே! பேசத்தருணம் கிடைத்தால் "தம்பி எந்த ஊர்" என்பது முதல் கேள்வியாக இருக்கும். ஊரை அறிந்து கொண்டபின் சாதியை அறிந்துகொள்வதற்கு "அங்கு வடக்கோ தெற்கோ கிழக்கோ மேற்கோ" என்பது இரண்டாவது கேள்வியாகப் பிறக்கும். அதன்பின்தான் உறவுகளோ, தொடர்புகளோ வளர்ந்தாலென்ன விட்டாலென்ன! இதுதான் தமிழினத்தின் தலையெழுத்து. ஐயகோ! யாரிடம் சொல்லி அழுவது!! இந்நிலை மாறவேண்டும். நம்மவர் ஒருவரை ஒருவர் எங்காவது பார்க்க நேர்ந்தால் நம் உடன் பிறப்பு என்ற உணர்வு பிறக்க முகம் மலர்ந்து வாயினிக்க "வணக்கம்" என்று வாழ்த்தத் தொடங்க வேண்டும். இதைச் செய்வோமென உறுதி பூண்டு நம் ஒற்றுமையைப் பேணத் தொடங்குவோம். பலஸ்தீன நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குளர். அவர்களிடம் விளங்கும் இனப்பற்றைக் கண்டு நான் வியந்ததுண்டு. தமக்கு அறிமுகமற்ற பலஸ்தீனியரைக் கண்டால் கூட "சலாம் அலேக்கும்" "அலேக்கும் சலாம்" என்று அன்பொழுக வாழ்த்தி வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்வார்கள்.

தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டுமாயின் தமிழ்ப்பற்று தமிழ் நெஞ்சங்களை ஆட்கொள்ள வேண்டும். தமிழ்ப்பற்று என்று கூறும்போது தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க் கலாச்சாரம் அனைத்தையும் தம்முள் அடக்கும். தமிழ்ப்பற்று இருக்குமிடத்து இனப்பற்று தானாகவே வந்து குடிகொள்ளும். தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த அன்னையை அன்பு செய்யும் பிள்ளை தன் உடன் பிறப்புகளையும் அன்பு செய்யவே செய்யும். நம்மவரில் பலர் தாம் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் குடியேறிய காரணத்தால் தம்மொழியை மறந்து, தம் பண்பாட்டைத் துறந்து, தம் தமிழ்க் குலப்பெருமையையும் உணராது வாழும் பரிதாபக் காட்சியைக் காண்கிறோம். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று பாரதிதாசனுடன் குரல் எழுப்பவேண்டியவர்கள் தமிழை மறந்து நிற்கின்றனரே! "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி" மூத்த குடியில் பிறந்தோம் என்ற அருமையை அறியாது பண்டைய மொழிகள் அனைத்தும் இறந்துபட முதுமைகாணா இளையவளாம் தமிழ்மகளின் மக்கள் தாம் என்ற பெருமைதனை உணரத் தவறி நிற்கின்றனரே! அவர்களுக்குத் தமிழ்பேச வெட்கம், நெற்றியில் பொட்டு வைக்க வெட்கம், சேலை அணியவோ வேட்டி கட்டவோ வெட்கம். ஆங்கிலத்திலோ அன்றேல் தாம் புகுந்த வேறெந்த நாட்டு மொழியிலோ புலமைபெற்று அழகாகப் பேச முடிந்தால் ஏனையோரைவிட தாம் தரத்தில் உயர்ந்து விட்டது போன்ற எண்ணம் இவர்களிடம் தலைதூக்குகின்றது. வெள்ளையர்க்குரிய தெல்லாம் உயர்ந்ததென்ற அடிமை மனம் மடிய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்ப் பெருங்குடி மக்களே,**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, வெள்ளையர்கள் காட்டு மிராண்டிகளாய்த் திரிந்த காலத்தில் மாபெரும் மாடங்கள் அமைத்து, நிகரற்ற நகரங்கள் கட்டி, கவின்மிகு கலைகளை வளர்த்து, இன்பமூட்டும் இலக்கியங்கள் படைத்து, இறை உணர்வில் திளைத்து, ஒப்பற்ற ஒழுக்கத்தை ஓம்பி, உயர்ந்த வாழ்வொன்றைச் சமைத்து, வையகமே வியக்கின்ற வீரத்தைத் தாங்கி, சங்கம் கூட்டி நம் தங்கத் தமிழைப் பேணி நம் முன்னோர் வாழ்ந்தனர். இது வெறும் தற்புகழ்ச்சியல்ல; ஒரு வரலாற்று உண்மை. இவ்வுண்மையை உணராத காரணத்தாற்றான் நாமே நம் பெருமையையே கைவிட்டு வாழ்கின்றோம். எனவே சிந்தித்துச் செயலால் சீர்ப்பட தமிழ் நெஞ்சமே உன்னை அழைக்கிறேன். "குடிப்பெருமை அனைத்தும் சாய்ந்து குப்புற விழ நாம் குறைபாடுற்றோம்" என்று காசியண்ணா கூறியதில் குறையில்லையே.

தமிழகத்தில் மறைபரப்ப வந்தவர் வீரமாமுனிவர் (பெஸ்கி). அவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். நம் மொழியின் அழகைக் கண்டு வியந்தார். அதை ஐயந்திரிபறக் கற்று "தேம்பாவணி" என்ன இலக்கிய நூலைப் படைத்து தமிழ்த் தாயின் கழுத்திலே மாலையாகச் சூட்டினார். நம் பண்பாட்டின் அருமை பெருமைகளை அறிந்து நம்மவர்போல் உடுத்தி, நம்மவர்போல் வாழ்ந்தார். இன்னொரு வெளிநாட்டுத் தமிழறிஞர் போப் என்பவர் தனது கல்லறையில் "தமிழ் மாணவன்" என்று பொறிக்குமாறு வேண்டிக் கண்ணை மூடினார். இவர்களுக்கு சென்னை மரீனாக் கடற்கரையில் சிலையெடுத்தோமே ஏன் சிந்திக்கத் தவறி விட்டோம்?

தமிழ்மொழி அறிவு நம் குடும்பங்களில் அருகிவிடாதிருக்க நாம் செய்யவேண்டியதொன்று உள்ளது. தமிழை நம் வீட்டு மொழியாக்கி வேறு எந்த மொழியையும் வீட்டிலே பேசாது விட்டால் நம் மழலைச் செல்வங்களும் இலகுவில் தமிழைப் பேசப் பழகுவர். மேலும் ஒரு மணி நேரத்தை ஒரு வாரத்தில் ஒதுக்கி தமிழை எழுதப் படிக்க அவர்களுக்குக் கற்றுக் கொடுப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் மண் வணக்கமும், நம்மவரைக் காணும்போது "வணக்கம்" என்று நெஞ்சினிக்க வாழ்த்துவதும், தமிழை நம் வீட்டு மொழியாக்கி அதையே வீட்டில் பேசுவதும் வழக்கத்துக்கு வருமாயின் உறக்கத்தை ஒறுத்து இந்நூலை எழுதியதற்குக் கிடைத்த பெரும் பரிசாக இந்த உள்ளம் கருதும், என்று இந்நூலைப் படிக்கும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்திற்கும் நன்றி உணர்வோடு தெரிவிக்கிறேன்.**

1980ம் ஆண்டுகளில் தமிழீழம் காணவேண்டுமென்ற துடிப்புடன் எத்தனையோ புலம் பெயர்ந்த தமிழர்கள் தம் பொருள் வளத்தையும் நேரத்தையும் அர்ப்பணித்து ஆர்வத்துடன் உழைத்தனர். அவ்வேளை நம் இளைஞர்கள் பலகுழுக்களாகப் பிரிந்து தம்முள் சண்டையிட்டு ஒருவரை ஒருவர் கொன்றொழித்துக் கொண்டு இருந்ததைக் கண்டு ஒருசாரார் எதுவும் புரியாது மனவிரக்தியடைந்து செயலற்று ஒதுங்கியிருந்தனர். அவர்களில் நானும் ஒருவன். நமது இளைஞர்கள் நாளைய ஈழத்தின் நம்பிக்கை ஒளிகள், நல்வழிகாட்டிகள், புதிய உலகம் படைக்கும் சிற்பிகள், ஈழமண்காக்கும் வீர மறவர்கள் என்றெல்லாம் பெரிய ஒரு கனவு கண்டு, ஈழத் தமிழினம் இன்புற்றிருந்த வேளையில் துப்பாக்கிச் சத்தங்கள் அவ்வினிய கனவைக் கலைத்து நம்மைக் கலங்க வைத்தன. காரணம் என்னவெனில் நம் இளைஞர்கள் ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கப் புறப்பட்டதுதான். தமிழீழமல்ல ஒருவரை ஒருவர் கொன்றொழிப்பதே தம் இலட்சியம் என்பது போலச் செயல்பட்டனர். தமிழீழம் என்ற இனிய கனவு இனி நனவாகுமா என எண்ணி ஏங்கின தமிழ் நெஞ்சங்கள். இன்னொரு சாரார் வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு குழுக்களை ஆதரித்து நின்றனர். அக்குழுக்களில் பல சுயநலம் பேணிச் செயல் பட்டதைக் கண்டனர். **தமிழீழம் என்ற விதையை விதைத்து விடுதலை என்ற விளைவை மக்களுக்கு ஊட்ட வேண்டியவர்கள் விதை நெல்லையே விழுங்கி ஏப்பம் விட்ட காட்சியைக் கண்டனர்.** கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிட்டு தமிழீழக் கோரிக்கை யைக் கொன்றொழித்து ஓணான்கள்போல் இடத்துக் கேற்ப தம் நிறம் மாற்றி நேரத்துக்கொரு கோலம் பூண்டு வேலி பயிரை மேய்ந்த கதையாய் தலையாட்டித் தம்மவரையே காட்டிக் கொடுத்து, பகைவனுக்குத் துணைபோன காட்சிகண்டு கலங்கினர். சில தலைவர்களின் தான்தோன்றித்தனமான செயல்முறைகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு வெட்கித் தலை குனிந்தனர். "இனித் தமிழ் இனத்தை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்றாரே தந்தை செல்வா.

**ஆம் தமிழினத்தின் அழுகுரல் கேட்டு ஆண்டவனும் இரங்கினான். உயர்ந்த இலட்சியப்பற்று, மாறாத கொள்கைப் பிடிப்பு, தளராத மனவுறுதி, எவருக்கும் பணியாத ஆண்மை, மக்களை இணைத்து வழிநடத்தும் ஒப்பற்ற ஆற்றல், தமிழர் மானம் பேண நல்முடிவுகளை எடுக்கும் ஞானம், பழுதற்ற ஒழுக்கம், என்றும் நெளியாத நேர்மை, சுடர்விடும் தியாகம் ஆகிய பண்புகளும் குணநலன்களும் கொண்டு வீரமும் நெஞ்ச ஈரமும் உடைய பிரபாகரன் தமிழ்த்தாய் தவங்கிடந்து பெற்றெடுத்த தனிப்பெரும் தலைவனாகத் தோன்றினான். இத் தலைவனைக் கற்பனையில் கண்டோ என்னவோ பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனும்:**

**"என் ஐ முன் நல்லன் முன் தெவ்விர், பலர் என் ஐ**
**முன் நின்று கல் நின்றவர்" என்றார்.**

**அதன் பொருள் யாதெனில் "பகைவர்களே எம் தலைவனை எதிர்த்துப் போர் புரியாதீர்கள் - ஏனெனில் எதிர்த்து நின்றவர்கள் எல்லாம் இறந்துபட்டு நடுகல்லாக நடப்பட்டு விட்டனர்" வள்ளுவனின் வாக்குக் கேற்ப மாவீரனாய் மாற்றான் கிலிகொள்ளப் புலிப்படையுடன் வந்தான். இடிந்த கோபுரத்திற்கு மகுடமாவதைவிட மடிந்துபோவதே மேல் என மொழிந்தான். கரும்பு போன்று தமை முற்றாய்ப் பிழிந்து தரும் இரும்பு மனங்கொண்ட கரும் புலியுடன் வந்தான். நெஞ்சில் வெஞ்சினம் பொங்க நயவஞ்சகர் கூட்டத்தை விரட்டியடித்தான். தூய தங்கம் தீயிலே வெந்து ஒளி சிந்துவதுபோல காலம் என்ற தீயிலே புடம் போடப்பட்டு விடுதலைப் புலிகளே தமிழ் ஈழத்தை வென்றெடுத்து வழிநடத்த எழுந்த ஒரே ஒரு தேசியத் தலைமை என்பது அனைத்துலகிற்கும் எண்பிக்கப்பட்டது.**

இன்றும் எத்தனையோ தமிழர்கள் அவனது தலைமையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர். அவனது நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கக் கட்டுக் கதைகளைப் புனைந்து விடுகின்றனர். விடுதலைப் புலிகளை ஒரு பெரிய கொள்ளைக்கூட்டமாக உருவகப் படுத்தி, கற்பனையில் கண்ட குற்றங்களை அவர்கள் தலையில் சுமத்தி, புனிதத்தைக் கெடுத்து அவர்கள் வீர வாழ்வை இருட்டடிப்புச் செய்வதே அவர்களது நோக்கம். புறநானூற்று வீரத்தையும் விஞ்சியது அவர்களது வீரம். முந்தியதை இலக்கிய நூலில் படித்துப் பெருமைப்பட்டோம். பிந்தியது ஒரு பெரிய வீர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறாக நமது வீரர்களினதும் வீராங்கனைகளினதும் குருதி தொட்டு எழுதப்படுவதை, கண்களால் கண்டு பூரிக்கக் கொடுத்து வைத்தவர்கள் நாம். உலகின் நான்காவது பெரிய இராணுவமாகக் கருதப்பட்ட இந்திய இராணுவத்தையே நடுநடுங்க வைத்து நாடு திருப்பி அனுப்பியது அந்தப் புலிகளல்லவா. எத்தனையோ போர் முனைகளில் பெரிய போர் அனுபவங்களைப் பெற்றிருந்தும், ஆட்பலமும், ஆயுதப்பலமும் அளப்பரிய அளவில் இருந்தும் இப்புலிப்படையை இந்திய இராணுவத்தால் வெற்றிகொள்ள முடியவில்லையே. **“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்“** என்று புலவர் பாடியது இப் புலிப்படையைப் பற்றித்தானோ! ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்களை “தமிழ் முட்டாள்கள்” என்று எள்ளி நகையாடித் துன்புறுத்திய சிங்கள இராணுவம் இன்று “கொட்டியா” என்றதும் குலைநடுங்கி, ஆளைவிட்டால் போதும் என்று கதிகலங்கி ஆயுதங்களையும் போட்டு விட்டு ஓட்டமெடுக்க வைத்தது நம் புலிகளல்லவா? இது கூலிப்படையல்ல, கொள்ளையர் கூட்டமல்ல, கொள்கை வீரர் அணி. அவர் தம் வீரத் தோள்களிலே நாளும் சுமக்கும் பணி - தமிழ் மண், தமிழ் மானம் பேணும் பணி. களமாடும் இக் காளைகளினதும், கன்னியரதும் வீரத்தை செயல்திறனை உலகமே கண்டு வியந்து நிற்க, எதிரிகள் சிந்தை குலைந்து போக நம்மவரில் சிலர் அவர்களை ஏற்றிப் போற்றுவதற்குப் பதிலாக தூற்றித் திரிவதைக்காண என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தன்னைப்பற்றியே பெருமைப் படத்தெரியாத ஒரு இனமா இது? அந்த உடன் பிறப்புகளிடம் இரந்து கேட்பது ஒன்றுதான். **“நல்லது ஏதும் செய்யாவிடினும் தீமையாவது செய்யாதீர்”** என்பதே. தமிழ்த்தாயின் செல்வங்களே, இந்த வாய்ச்சொல் வீரர்களின், பொய்யர்களின் கட்டுக்கதைகளைக் கேட்டு மனம் குழம்ப வேண்டாம்.

**“எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு”**

என்கிறார் வள்ளுவனார். “கனியைக் கொண்டு மரத்தைக் கணித்துக் கொள்ளுங்கள். நற்கனி கொடுக்கும் கெட்ட மரமுமில்லை. கெட்ட கனிகொடுக்கும் நல்ல மரமுமில்லை” என்கிறார் யேசு பெருமான். வீரத்தின் விளைநிலமாம் தமிழ் ஈழத்தில் இன்று பூத்துக் குலுங்கிக்கனிதரும் அந்த ஆயிரம் ஆயிரம் வீர நெஞ்சங்களின் தியாகத்தை, செயல் திறனை, வாழ்க்கை முறையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணநலன்களை ஆராய்ந்து நீங்களே தீர்ப்பிடுங்கள். சிங்கள அரசுக்கும், துரோகக் கும்பலுக்கும் வக்காலத்து வாங்குவோரின் வார்த்தைகளால் உண்மையைக் கொல்ல முடியுமா? சத்தியத் தைச் சாகடிக்க முடியுமா?

**"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி**
**வஞ்சனை செய்வாரடி கிளியே - வாய்ச்சொல்லில் வீரரடி**
**கூட்டத்தில் கூடிநின்று கூடிப்பிதற்றலன்றி**
**நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே - நாளில் மறப்பாரடி"**

என்ற பாரதியின் பொன்மொழிகள் யாருக்குப் பொருந்தும் என்று சிந்தியுங்கள்.

இன்னுமொரு கூட்டம் மக்கள் ஈழத்தில் படும் துன்பங்களுக்கெல்லாம் புலிகளையே காரணங்காட்டிக் குறைகூறுகின்றது. தமிழீழம் கேட்டவுடன் பொங்கும் உவகையுடன் சிங்களவர் என்ன தங்கத்தட்டில் வைத்துத் தந்து விடுவர் என்றா நினைத்தோம்? எத்தகைய தியாகங்களைச் செய்ய வேண்டி வரும், எத்தனை துன்பங்களை நம் விடுதலைப் பயணத்தில் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை பல நாடுகளின் விடுதலை வரலாற்றைப் படித்தவர்கள் அறிந்திருப்பார்கள். வியட்நாம் நாடு தன் விடுதலைப் போரிலே கண்ட அழிவுகளை யார் மறக்கக் கூடும். ஆனால் அம்மக்களின் விடுதலை வேட்கையை எந்த வேதனையும் தணித்து விடவில்லை. ஈழத்திலே நம்மவர்கள் அடைந்துவரும் துன்பங்களும், இன்னல்களும் விடுதலைக்காய் நாம் கொடுத்துக்கொண்டிருக்கும் விலை. வெளிநாடுகளிலிருந்து புலிகளைத் தூற்று வோரில் பலர் தாம் வெளிநாடுகளில் வாழ்வதே புலிகள் போட்ட பிச்சை என்பதை மறந்து விட்டார்கள். எத்தனையோ தியாகங்களைப் புரிந்தவர்கள், செருமுகத்திலே எத்தனையோ வேதனைகளைச் சந்தித்தவர்கள், எத்தனையோ இழப்புகளை அடைந்தவர்கள், தொடர்ந்து விடுதலை வேண்டி நிற்க, அரசுவீசும் எச்சில் இலை பொறுக்கி, உரிமைகளை விற்று சலுகையென்ற பெயரிலே பிச்சையெடுத்து வாழப்பழகிய காரணத்தால் ஒரு சிலர் வெளிநாடுகளில் வளமாக வாழ்ந்து கொண்டு ஒரு சில இழப்புகள் காரணமாக விடுதலைப் போரையும் வீரர்களையும் வாயில் வந்தபடி தூற்றித் திரிந்து இன ஒற்றுமையைக் குலைக்கின்றனர். வேறுசிலர் தாங்கள் சார்ந்திருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களின் தலைமைத்துவம் தமிழீழத்தில் இல்லாத காரணத்தால் இவ்விடுதலைப் போரில் எவ்வித பங்களிப்பையும் கொடுக்காது இருந்து விடுகின்றனர். **நமது தேசியத் தலைவர் பிரபாகரன் தனது சொல்லாலும் செயலாலும் திரும்பத் திரும்பப் புகட்டிய பாடம், நமது தேசிய விடுதலையை விட எந்த நபரும் முக்கியம் வாய்ந்தவர்களோ பெரியவர்களோ அல்லர்** என்பதேயாகும். எமது விடுதலைப்போரில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களாகிய நாம் நம் மண்ணை மீட்கும் பணியில் நமது ஒத்துழைப்பை நல்காவிடில் இனத்துரோகம் புரிந்தவர்கள் என்ற தீராப்பழியை வாழ்நாளெல்லாம் சுமக்க வேண்டி வரும். வெளி நாடுகளில் வாழும் யூத மக்களையே திரும்பவும் உற்று நோக்குங்கள். தாம் விரும்பும் ஒரு அரசியல் கட்சி இஸ்ராயேல் நாட்டில் ஆட்சி செய்தால்தான் தமது ஆதரவும் ஒத்துழைப்பும் அந்நாட்டுக்குக் கிடைக்கும் என்று பேரம் பேசமாட்டார்கள். எக்கட்சி ஆட்சி அமைத்தாலென்ன தம் உயிர்க்கினிய அந்நாடுதான் அவர்களுக்கு எல்லாம்.

**ஈழத்தாய் ஈன்றெடுத்த செல்வங்களே,**

வேறுபட்ட சூழலிலிருந்து மாறுபட்ட பின்னணியிலிருந்து புலம் பெயர்ந்து வந்திருக்கிறோம். எனவே நம் மத்தியில் கருத்து வேறுபாடுகள் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிலவும். ஆனால் ஒரு குடும்ப உணர்வோடு எந்தத் தனிப்பட்ட ஆளினது நலனையும் விட இனத்தின் நலனையே பெரிதெனக் கருதி நமது தனிப்பட்ட கருத்துக்களை விட்டுக்கொடுப்பது பெருந்தன்மை. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பொருள் பொதிந்த கூற்றை என்றும் மறவாது, கருத்தில் வேறுபட்டாலும் நம் கடமையில் தவறிவிடாது, நமது பங்கை இவ் விடுதலைப் பயணத்தில் ஆற்றுவோம். அன்றேல் நம் மத்தியில் நிலவும் பிளவுகளும் பிரிவுகளும் எதிரியின் கையையே ஓங்கச் செய்து விடும். ஈழத்தில் நடந்த நிகழ்வுகள் பல இக்கூற்றை மெய்ப்பிக்கவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கு நம் விடுதலை வீரர்கள் ஆயுதம் தாங்கிப் போராடுகின்றனர். நாமும் இங்கு சில ஆயுதங்களைத் தாங்கி, தமிழ்த் தேசியத்தை எதிர்ப்போரை சந்திக்க வேண்டிய கட்டத்திலுள்ளோம். நம் தங்கத் தமிழீழத்திற்கு எதிராக இயங்கும் அரசியல்வாதிகளோ, கலைஞர்களோ, எழுத்தாளர்களோ, சமூகத் தலைவர்களோ, தொழிலதிபர்களோ, வர்த்தக நிலையங்களோ அன்றேல் ஆதரவு அளிக்காத எவரோ, அனைவரும் புறக்கணிக்கப்படவேண்டும். தமிழீழத்திற்கு ஆதரவு தராத எவருக்கும் நம் ஆதரவு கிட்டாது என்பது சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாக விளக்கப்பட வேண்டும். தகுதியுடைய ஒவ்வொரு ஈழத் தமிழனும் தான் வாழும் நாட்டில் குடியுரிமை பெறுவதன் மூலம் வாக்காளர் பட்டியலில் தனது பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அப்போது சில அழுத்தங்களை அரசியலில் போட முடியும். நம் உரிமைக்குரலும் பிறர் காதுகளில் விழத்தொடங்கும். இந்த ஆயுதங்களை மிகச் சாதுரியமாக செயற்றிறனோடு பயன்படுத்தும் இனம் யூத இனம். "சிறீலங்காப் பொருட்களைப் புறக்கணிப்போம்" என்ற இருபத்தினான்கு மணிநேர வானொலிக்கு இவ்விடத்தில் நெஞ்சினிக்க நன்றிகூறி வாயினிக்க வாழ்த்துகிறோம்.**

இன்னும் எங்கள் ஒருமித்த உணர்வை வெறும் வார்த்தையினால் மட்டுமன்றி வாழ்க்கை முறையாலும் வெளிப்படுத்த வேண்டும். ஈழ மண்ணில் வாழும், இல்லை அங்கு வாடும் நம் உடன் பிறப்புகளை நாளும் பொழுதும் நினைத்து நம்மை ஒறுத்து நம் தியாகத்தின் காணிக்கைகளை அவர்களின் பாதங்களில் பாசத்துடன் படைக்க வேண்டும். புலம் பெயர்ந்தாலும் உங்கள் உடன் பிறப்புகள் உங்களை மறக்கவில்லை என்ற செய்தி அவர்கள் செவிகளில் விழ வேண்டும். நம்மில் பலர் புகைக்கிறோம். அதனால் உடல் நலம் கெடுகிறது; பணம் கரைகிறது. மதுவை அருந்துகிறோம் மதிகெட்டு மானத்தைப் பறிகொடுக்கிறோம். குடிப்பழக்கம் நம் குடியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுகிறது. விழாக்கள், ஆடம்பரக் கொண்டாட்டங்களைக் குறைத்து, தேவையற்ற விதத்தில் பணத்தை விரயமாக்காது, சேமித்த பணத்தை நம்பெருங்குடி மக்கள் குடியும் குடித்தனமுமாக விளங்கி, நம் தமிழ்க்குல விளக்கு ஆயிரம் திரிகளோடு அணையாத தீபமாகச் சுடர்விட்டெரிய அனுப்பி வைப்போம். தியாகத்தில் மிளிர்வதுதான் அன்பு; அந்த அன்பில் மலர்வதுதான் ஒருமித்த உணர்வு. அந்த ஒருமித்த உணர்வு நம் உள்ளங்கள் அனைத்தையும் பிணைக்கட்டும். ஈழம் வாழ் மக்களுடன் நம்மை இணைக்கட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை
ஏதுமின்றி
ஒற்றுமையைப்
பேணி வாழ்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை ஒரு நன்முறையா?

**மூத்த குடியில் பூத்த மென் மலர்களே,**

இவ்விடத்தில் இன்னொரு முக்கிய கருத்தை உங்கள் சிந்தனைக்கு விருந்தாகப் படைப்பது என் தலையாய கடமை. தமிழ் ஈழ விடுதலையை, தமிழர் ஒற்றுமையை, தமிழுணர்வை நான் வலியுறுத்தி எழுதுவதனால் சிங்கள இனத்தவர் மட்டில் பகைமை உணர்வோ வெறுப்புணர்வோ நம் நெஞ்சத்தில் குடி புகக்கூடாது. **நமது போராட்டம் அதர்மத்துக்கும், அடக்கு முறைக்கும் எதிரானதேயன்றி சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. அது சிங்கள மக்களுக்கு எதிரானதென்று யாரேனும் கருதினால், பாதை தவறிவிட்டோம் என்பது பொருள். அத்தகைய கீழ்த்தரமான உணர்வுகள் நமது ஆன்மீகத்தை மட்டுமன்றி மனிதத்தையே அழித்துவிடும். வன்முறை ஓர் நன்முறையாக நம் கண்ணில் படக்கூடாது. நமது உரிமைகளை வென்றெடுக்க அரசின் வன்செயலோடு கூடிய அடக்குமுறையை மடக்கி ஒடுக்க, நம் மக்களை மனித மாண்புடன் இம் மண்ணில் வாழவைக்க அரசின் இன ஒழிப்பை அழிக்க வேறுவழிகள் கை கொடுக்காததினால் வன்முறையைத் தற்பாதுகாப்புக்காக விருப்பின்றி நாடினோமேயன்றி அதிலுள்ள கவர்ச்சியாலல்ல. நம் இளம் தலைமுறையினர் வன்முறை விரும்பிகளாக ஆகிவிடக் கூடாது. எங்கு வன்முறை கோலோச்சுகிறதோ அங்கு மனிதம் அவமதிக்கப்பட்டு அழிக்கப்படுகிறது. வன்முறை வன்முறையை வளர்க்குமேயன்றி அதைப் பன்முறை தொடர் கதையாக்கு மேயன்றி அதைக் குறைக்காது. ஒவ்வொரு மனித உயிரும் விலைமதிக்கற்கரியது என்பதை உணர்ந்து மனித மாண்பிற்கு மதிப்பளித்து வாழப் பழகின் நம் மனிதத்தையே நாம் பேணி வளர்க்கிறோம். நம் நெஞ்சில் தஞ்சம் புகுந்திருக்கும் வன்முறைப்பற்று, வெறுப்புணர்வு, மனக் கசப்பு, பயம் ஆகியவற்றை அங்கிருந்து விரட்டியடித்து அன்பையும் உண்மையையும் அங்கு குடிபுகுத்தினால் அமைதி பிறக்கும், மகிழ்ச்சி சுரக்கும், தெய்வீகம் தழைக்கும், அருள் பொங்கும்.**

"கரிப்பு மிக்க கடலை அடுத்தும் சுவைமிக்க நன்னீர் ஊற்று சுரக்கும், இனிய மலையை அடுத்தும் உவர்ப்பு மிக்க நீர் தோன்றலாம்" என்கிறது நாலடியார். அதுபோன்று எத்தனையோ நன்மனம் படைத்த சிங்கள மக்களும் உளர். தீய மனம் கொண்ட தமிழர்களும் உளர். எனவே எவரையும் வெறுப்பது கூடாது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை நமது சிந்தைக்கு ஒளியூட்டும் ஒன்று. ஒரு வெள்ளைக்காரன் அவரை விருந்துக்காகத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு அழைத்திருந்தான். அதை ஏற்று காந்தி அவன் வீட்டுக்குச் சென்று விருந்து அருந்தினார். இதை அறிந்த சிலர் அவரது சொல் ஒன்று செயல் ஒன்றாக விளங்குகின்றது; வெள்ளையரை எதிர்க்கச் சொல்லிவிட்டு அவர்களை நம் விரோதி என்றுவிட்டு, இப்போ அங்கே விருந்துண்ணப்போய் விட்டாரே; இது நேர்மையற்ற செயல் என்று குற்றம் சுமத்தினார்கள். அப்போ அந்த மகாத்மா "நான் வெள்ளையரை பகைக்கும்படி, வெறுக்கும்படி என்றும் கூறியதில்லை. அப்படி வெறுக்கவும் கூடாது. ஆங்கிலேயர் செய்யும் அநீதியை வெறுக்கிறோமே தவிர ஆங்கிலேயரை அல்ல" என்றார். இது நமக்கோர் நல்ல படிப்பினையாக விளங்கவேண்டும்.

மண், மதம், மொழி ஆகியவை ஆண்டவனால் நமக்கு வழங்கப்பட்டவை. அவற்றை நன்றி உணர்வோடு போற்றி பேணி வளர்ப்பது நமது கடமை. ஒரு மனிதன் நாடுவிட்டு நாடு மாறலாம்; பல்வேறு மொழிகளைப் பேசலாம்; பல்வேறு மதங்களைப் பின்பற்றலாம். எனவே மொழியோ, மண்ணோ, மதமோ மனிதனுக்காக விளங்குகின்றதே தவிர மனிதன் அவற்றிற்காக என்ற எண்ணம் மடியவேண்டும். அத்தகைய தப்பெண்ணங்கள் தாம் இனவெறியை, நாட்டு வெறியை, மதவெறியை மக்களுக்கு ஊட்டுகின்றன. பற்று வேறு, வெறி வேறு. அவற்றின்மீது பற்று இருப்பது நன்று ஆனால் வெறிகொண்டு மதி இழந்து செயல்படுவது நன்று அன்று. அவ்வெறிதான் மற்றவரின் மனிதத்தை மதிக்காது உரிமைகளைப் பறித்து அமைதியைக் கெடுத்து அழிவைக் கொடுக்கிறது. அவ்வெறிதான் வன்செயலை ஊக்குவித்து வன்முறையை வளர்க்கிறது. வரலாற்று ஏட்டிலே எத்தனையோ போர்களைப் பார்க்கிறோம். மதவெறியின் காரணமாக நடந்த போர்களில் ஒன்று சிலுவைப்போர். எத்தனை பெரும் போர்கள் நாட்டுப் பற்று என்ற போர்வையில் மண்வெறி காரணமாக நடந்தேறி அளப்பரிய அழிவுகளைத் தந்தன. கிற்லரின் யூத இன ஒழிப்பு, இனப்பற்றின் காரணமாக வரலாற்றில் இடம்பெறவில்லை. ஆரிய இனவெறியின் காரணமாகவே கோடிக் கணக்கான யூதர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அப்போ உலகின் மனிதமே புனிதமிழந்து எவ்வளவு கீழ் நிலைக்கு இறங்க முடியுமோ அவ்வளவு இறங்கியது. காரணம் உலகம் மௌனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டு வேடிக்கை பார்த்ததும், யூத மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து, அந்த அநீதியை, அக்கிரமத்தைக் கண்டிக்காததும், இன அழிவு நடந்தபோது அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காது சண்டை முடிந்தபின் வீதியிலே சண்டித்தனம் காட்டுபவன்போல், அனைத்தும் நடந்தேறியபின் கண்டனக்குரல் எழுப்பியதுமே.

1997ல் நான் மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் என்ற இடத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவேளை மன்னார் இராணுவத்திற்குப் பொறுப்பாக இருந்த கேணல் பெர்னான்டோ என்பவர் தன்னை இராணுவத் தளத்தில் வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பியிருந்தார். அவரை முன்பு ஒரு தமிழரின் வீட்டிலே சந்தித்து அறிமுகம் செய்துகொண்டது நினைவிலிருந்தது. அவர் ஒரு நல்ல பண்பாளர். எத்தனையோ தமிழர்களால் நன்கு மதிக்கப்பட்டவர். அவருக்குக் கீழிருந்த இராணுவம் என் மட்டில் நல்லெண்ணம் கொண்டிராத காரணத்தால் தொல்லைகள் தரத் தொடங்கியது. காவல்துறையும் எனது செயல்முறையைக் கண்காணித்துக் கொண்டிருந்த நாட்கள் அவை. இளந் தலைமுறைக்கு விழிப்பூட்டி, அவர்களை ஒன்று திரட்டி இளைஞர் இயக்கங்களை அமைத்துச் செயற்படுத்தியதும், மேடைகளில் ஓயாது "தமிழீழம்" என்று பேசித் திரிந்ததும், ஊர் ஊராகத் தமிழீழத்தைப் பற்றிய கருத்தரங்குகளில் உரையாடியதும், இளைஞர், இளம் பெண்களை பண்ணைகள் அமைத்து காடுகளில் இருத்தியதும், ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகளைக் காட்டு நிலத்தில் குடியேற்றியதும் என் மட்டில் அவர்களுக்குச் சந்தேகத்தை வளர்த்தது. என்னுடன் இருந்த காரணத்தால் ஒரு சில இளைஞர்கள் அடி உதைகளால் துன்புறுத்தப்பட்ட காலம் அது. என்னை ஏன் அழைத்தார்களோ எனச் சிந்தித்தபடி சென்றேன். இராணுவ உயர் அதிகாரிகள் வாழும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். புன்னகை சிந்தி வரவேற்றனர். ஆனால் உடனடியாகவே என்னை மனம் மாற்றும் வேலை தொடங்கியது. என் போன்றவர்கள் இன ஒற்றுமையைப் பேணி வளர்ப்பதற்குப் பதிலாக ஏன் இன வெறியை தமிழர் நெஞ்சுகளிலே சிறப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் வளர்க்கிறோம் என்பதுதான் முதற் கேள்வி. நான் சிரித்துவிட்டு "அடிப்பவனை அல்ல அழுபவனையே குற்றவாளியாகக் கருதுகிறீர்கள். தமிழீழம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பது இனவெறி என்கின்றீர்கள். அது தவறான எண்ணம். சிங்கள மக்களுக்கு எதிராக நாம் இயங்கவில்லை. ஒடுக்கப்பட்ட நம் மக்களின் உரிமைக்காகவே நாம் குரல் கொடுக்கிறோம். சிறீலங்காவும், தமிழ் ஈழமும் இருநாடுகளாய் விளங்குவதே இத்தீவில் அமைதி நிலவி, நல்லுறவு வளர்வதற்கு ஒரே வழி" என்றுவிட்டு பாகிஸ்தானையும், வங்காள தேசத்தையும் உதாரணமாகக் காட்டினேன். அவர்கள் அது நடக்காது என்பது போலத் தலையை அசைத்துவிட்டு ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தனர். இந்நிகழ்ச்சியை எழுதுவதற்குக் காரணம் ஒரு நியாயமான இனப்பற்றே இனவெறியாக மற்றவராற் கருதப்படலாம் என்று விளக்குவதற்காகவே. எனவே எதை எதற்காகச் செய்கிறோம் என ஆராய்ந்து நமது கடமையை நாம் ஆற்றுவோம்.

நமது தேசியத் தலைவனை நன்கு கூர்ந்து நோக்குங்கள். களமாடும்போது உயிரைப் பறிப்பதில் கூற்றுவனைப்போல் ஆற்றல் மிக்கவன். அதனால் மகிழவும் மாட்டான், மனச்செருக்குக் கொள்ளவும் மாட்டான். தனது போர் அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிரானதேயன்றி சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்பதை சிங்களப்போர்க் கைதிகளை கருணையுள்ளத்துடன் நடத்தும் விதத்தினால் எண்பிக்கிறான். எந்தச் சிங்களப் போர்க்கைதியும், தான் விடுதலை அடைந்தபின் அவனைப் புகழ்ந்தே பேசியிருப்பது எதை எண்பிக்கிறது? அதனாற்றான் முன்னொரு இடத்தில் வீரமும், **நெஞ்ச ஈரமும்** கொண்ட தலைவன் எனக் குறிப்பிட்டேன். எனவே பெருமையுடன் தலைநிமிர்த்தி அவன் பின்னே நம் விடுதலைப் பயணத்தைத் தொடர்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை நீங்கி
நன்முறை
ஓங்கட்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணங் கமழும் திருமணங்கள்

**என் அன்புத் தமிழ் நெஞ்சங்களே!**

ஒற்றுமையைப் பற்றி உங்களுடன் உரையாடிக் கொண்டிருந்த நான் திடீரென குடும்ப வாழ்வைப் பற்றி பேசுவதன் நோக்கம் என்னவென நீங்கள் சிந்திக்கலாம். புலம் பெயர்ந்த தமிழராகிய நாம் ஒரு பலம் பொருந்திய சமூகமாக அனைத்துலகிலும் விளங்கவேண்டுமாயின் குடும்பங்கள் பலம் மிக்கனவாக அமையவேண்டும். ஏனெனில், ஒரு சமுதாயத்தின் அன்றேல் நாட்டின் அடித்தளமாக, ஆணிவேராக விளங்குவன குடும்பங்களே. ஒரு சமூகத்தின் தரத்தைக் கணிக்கும் அளவுகோலும் அவைகளே. ஒரு சமுதாயத்தின் வாழ்வோ, தாழ்வோ, எழுச்சியோ, வீழ்ச்சியோ, ஏற்றமோ, ஏமாற்றமோ அதில் வாழும் குடும்பங்களையே சாரும். எனவே திருமண வாழ்வைப்பற்றிச் சிறிது ஆழமாகச் சிந்திப்பது இவ்விடத்தில் மிகச் சாலப் பொருந்தும். திருமண உறவை மிகவும் புனிதமான தொன்றாகக் கருதி இறக்கும்வரை நிலைக்க வேண்டிய உறவு என்று அதைப் பேணிக்காத்த பெருமை நம் பண்பாட்டையே சாரும். தாலிகட்டி, அம்மி மிதித்து, அருந்ததி காட்டி நெருப்பையே சாட்சியாக வைத்து இப்பேர்ப்பட்ட சடங்குகளின் வழியாக நிலையான திருமண உறவை, அது "ஆயிரம் காலத்துப் பயிர்" என்று சொல்லி வளர்த்தது நம் பண்பாடு.

இரு மலர்களை ஒன்றாய்ப் பிணைக்கும் நார்போல இரு உள்ளங்களைத் திருமணத்தில் ஒன்றாய்ப் பிணைப்பது அன்பே. திருமணவாழ்வில் அப்புனிதமான உறவை ஏற்படுத்துவதும் அன்பேதான். அன்பற்ற நிலையில் திருமணவாழ்வே பொருளற்றுப் போய்விடும். எத்தனையோ தமிழ்த் திருமணங்களைப் பார்க்கும்போது நாம் கவலையடையாது இருக்க முடிவதில்லை. அன்புக்கு அன்பு என்று இணைய வேண்டிய நல்ல வாழ்வுகள் பட்டத்திற்குத் திருமணம், பதவிக்குத் திருமணம், பணத்திற்குத் திருமணம், அழகிற்குத் திருமணம், வரட்டுக் கௌரவத்திற்குத் திருமணம் என்று விலைபோகும் அவல நிலையைக் கவலை பொங்கப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்புக்கு அன்பு" என்ற மணங் கமழ வேண்டிய திருமணங்கள் இன்று மேல்நாடு செல்வதற்கு நுழைவுச் சீட்டுக்களாகவும் பயன் படுத்தப்படுவதைப் பார்க்கும்போது பரிதாபப்பட வேண்டியுளதே. மாறாத, தன்னலமற்ற அன்பின் அடிப்படையில் திருமணம் அமையாவிடில் அது வீழ்ந்துபடும். அழகோ, பணமோ, பட்டமோ, பதவியோ கூடாதென்று கூறவரவில்லை. ஆனால் அழிந்து போகும் அழகிலும், கரைந்து போகும் காசிலும், பறிபோகும் பதவிகளிலும், பொருளற்ற போலிக் கௌரவத்திலும் மாத்திரம் கட்டி எழுப்பப்பட்ட திருமண உறவுகள் நிலைத்து நிற்கா. நிலை நின்றாலும் மகிழ்ச்சி நிறைந்தவையாக அமையா. இதன் காரணமாக இன்று நாம் அறிந்த எத்தனையோ குடும்பங்கள் அமைதி குன்றி மகிழ்ச்சியின்றி வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ குடும்பங்களில் ஒற்றுமை குலைந்து வேற்றுமை மலிந்து உறவுகள் நலிந்து பிளவுபட்டு நிற்பதற்கும் அதுவே காரணம். நம் இளந் தலைமுறையினரில் சிலர் வெறும் கவர்ச்சியைக் காதலெனத் தப்பாக எடைபோட்டு மண வாழ்க்கையில் இறங்குகின்றனர். அழகு என்பது மாறும் தன்மை படைத்தது. எனவே, வெறும் அழகைக் கண்டதால் பிறக்கும் கவர்ச்சியும் மாறும் தன்மை கொண்டதே. கவர்ச்சி வேறு, உண்மையான தன்னலமற்ற அன்பு வேறு என்று பகுத்துணரப் பலர் தவறி விடுகின்றனர். விளக்கில் விழும் விட்டில் பூச்சியும் கவர்ச்சியின் காரணமாகத்தானே விழுந்து மடிகிறது. ஆம் அன்பென்றால் என்னவென்று சரிவர அறியாது சுயநலம் பேணி நிற்கும் இவ்வுலகில், திருமணத்திற்குமுன் அதைப்பற்றிய சரியான அறிவைப் பெற்றுக்கொள்வது அவசியம். அன்புக்குத் தம் வாழ்வால் இலக்கணம் கூறி, தியாகமே உருவாக விளங்கும் நம் பெற்றோரின் மடியிலிருந்து அவர்கள் வாழ்க்கையென்ற பள்ளியில் நாம் அன்பைக்கற்கவில்லையா? கற்றதற்கேற்ப நிற்கவேண்டு மல்லவா?

**வாயினிக்கப் பேசுவதிலன்று, பிறரின் வாழ்வு இனிக்கத் தன்னையே தியாக தீபமாக எரித்துவிடுவதில்தான் உண்மை அன்பு துலங்கும். தனது சுய விருப்பங்களைத் துறந்து, தன்னை மறந்து, பிறர்க்கென வாழ்வதில்தான் அது அடங்கும். பிறரிடமிருந்து எதையும் எடுப்பதிலல்ல, கொடுத்து வாழ்வதில் தான் அது சிறக்கும்.** இக் கருத்தைத்தான் ஒருவன் கவிதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் தருகிறான்.

**"அன்பையே உவந்தளித்து துன்பமே நிறைந்த வாழ்வை**
**இன்பமாய் வாழ்ந்திடவே என்னையே கொடுத்து விட்டேன்.**
**என்னையே நான் மறந்து அவளையே தினம் நினைந்து**
**பொன்னாகப் போற்றினேனே அன்பிற்கே பாடம் சொன்னேன்"**

என்று. திருமணச் சடங்கை சற்று உன்னிப்பாகக் கவனித்தால் இவ் உண்மை விளங்கும். அன்பென்ற தடாகத்தில் மலர்ந்த தம் இதயக் கமலங்களை, ஒருவருக்கொருவர் காணிக்கையாக்குவதை உணர்த்த மலர் மாலை சூட்டுகின்றோம். தன்னை அழித்து ஒளி வழங்கும் கற்பூரம்போல் தனக்கு இறந்து மற்றவருக்காக வாழ்வோமென விளக்க ஒளியேற்றி ஆண்டவனிடம் ஒப்படைத்து, "மணவாழ்க்கை எனும் விளக்கை எதுவும் அணைத்து விடாதபடி உன்கையில் அடைக்கலம் தந்தோம்; காத்தருள்வாய்" என வேண்டுகிறோம்.

**திருமண வாழ்வில் அன்பு மலர்ந்து மணங்கமழ வேண்டுமெனில் கடலிலே சங்கமமாகும் இருநதிகள் போல, இரு உள்ளங்களும் இறைவனில் சங்கமமாக வேண்டும். இல்லறம் ஒரு நல்லறமாகத் துலங்க வேண்டுமெனில், திருமண வாழ்வில் இறையருள் நிறைவாகக் கிடைக்க வேண்டும். தெய்வத்தின் சந்நிதியில் அவன் பாதத்தில் அமர்ந்து, அவனது அருளின் துணைபெற்றால் மட்டுமே மணவாழ்க்கையை வாழ்வாங்கு வாழ முடியும். திருமண வாழ்க்கைப் பாதையிலே இன்பம் வரும், துன்பம் வரும், வறுமை வரும், செழுமை வரும், ஏற்றம் வரும், ஏமாற்றம் வரும். இறைவனின் கரம்பற்றி அன்பில் இணைந்து இருவரும் கை கோர்த்து நடந்தால் வெற்றியைத் தப்பாது சந்திக்கலாம்.**

வெளிநாடுகளில் வாழும் நம் இளம் தலைமுறையினர் தாம் ஒருவருக்கு வாழ்க்கைப்படுமுன் சிந்திக்க வேண்டியவை பல உள்ளன. ஒருவர் ஒருவரை மதித்து, அப்புனிதமான வாழ்வில் தம்மை முற்றாக அன்புடன் அர்ப்பணிக்கத் தயங்கினால் மண வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே கூடாது. நன்கு சிந்தித்து ஆராய்ந்து மற்றவரை அறிந்து அதில் இறங்குவதுதான் எத்தனையோ மணமுறிவுகளை அதனால் ஏற்படும் மனஉடைவு களைத் தடுப்பதற்கு ஏற்ற வழி. .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற கூற்று நாம் நம் சமுதாயத்தில் கேட்கும் ஒன்று. பெண்கள் ஆண்களின் தயவில் தங்கியிருந்த காரணத்தால், இரண்டாந்தர மனிதப் பிறவிகளாகக் கணிக்கப்பட்ட காலத்தில், பெண்ணின் பெருமையை உணராது பெண்களைக் கண்ணெனப் பேணிய நம் பண்பாட்டை அறியாத காரணத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூற்று அது. ஆண்மகன் எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம், மனைவியை எப்படியும் நடத்தலாம் என்ற மன நிலையைக் கொடுத்து பெண்ணினத்தை ஒரு அடிவருடும் அடிமைகளின் கூட்டமாக, ஏவலுக்குக் காத்திருக்கும் வேலையாட்களாக, காமவெறி தீர்க்கும் கட்டில் பதுமைகளாக வைத்திருக்க வழி கோலியது. அது ஆணினம் பெண்ணினத்தைவிட மாண்பில் சிறிது மேலோங்கியது, பெண்ணினம் ஆணினத்துக்காகவே படைக்கப் பட்டது என்ற தவறான எண்ணங்களில் உருவான தொன்று. தம்பீ, தூக்கம் கலைந்து எழுந்துவிடு! காலம் மாறிவிட்டது. சூழலோ புதியது. எனவே உன் சிந்தனையில் ஓர் திருப்பம் ஏற்பட வேண்டும். பெண்ணின் அடிமை மனம் மடிந்து விடிவு ஏற்பட்ட காலம் இது. பெண்ணும் ஆணுக்குச் சரி ஒத்தவள் என்ற எண்ணம் தலைதூக்கிவிட்ட நேரம் இது. உன் தங்கத் தமிழீழத்தை உன் மனக்கண்ணால் ஏறெடுத்துப் பார். உலகின் எந்த நாட்டிலும் இல்லாத விதத்தில் பெண்களின் சமத்துவம் பேணப்பட்டு, செருமுகத்திலும் பெரும் புரட்சி ஒன்று நம் தேசியத் தலைவனின் கீழ் நடந்து கொண்டிருக்கிறது. பெண்கள் பலமும், நெஞ்சுரமும், செயற்றிறனும் குறைந்தவர்கள் என்ற எண்ணம் வளர்ந்த நாடுகளில் இராணுவ சிந்தனையில் கோலோச்சுகின்ற வேளையில், தமிழீழ மண்ணில் அந்த வீரத்தின் விளைநிலத்தில் முளைத்த பெண்ணினம், அது தப்பெண்ணமென்று தன் வீரம் செறிந்த வாழ்வால் எண்பித்து வருகிறது. தம்பீ, பெண்கள் நாட்டை ஆளும் நிலையில் வீட்டில் உன் ஆட்சிதான் என்ற மனநிலை மாறவேண்டும். கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் அவர்கள் பெரும் பொறுப்புகளை வகித்து சமுதாயத்தில் எல்லா இடங்களிலும் தலைமைத்துவத்தை ஏற்று நிற்கும்போது, நீ மட்டும் ஒரு பெண்ணின் உரிமை நீ போடும் பிச்சையென்றோ அல்லது நீ இரங்கி அவளுக்கு வழங்கும் சலுகையென்றோ எண்ணிவிடாதே. அது கடவுளால் அவளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட பிறப்புரிமை என்பதை உணரத் தவறாதே. ஒரு பெண்ணை உனக்குச் சரி ஒத்தவளாக மதித்து அவளை ஆண்டவன் தந்த அருட் கொடையாகக் கருத மறுத்தால் மணவாழ்வில் புகுந்து விடாதே. ஏனெனில் அனைவரது மகிழ்ச்சியையும் கொன்றொழிந்து விடுவாய்.

**"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**

**மாதவம் செய்திட வேண்டுமம்மா"** என்ற கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் கூற்று உனக்கு எதை உணர்த்துகிறது! ஒரு பெண்ணின் மாண்பையும் மகத்துவத்தையும் அது எடுத்தோதவில்லையா? பெண்ணின் மாண்பு என்பது ஒரு மேல் நாட்டுச் சிந்தனையோ கண்டுபிடிப்போ அன்று. அது நம் பண்பாடே நமக்குப் புகட்டிய பாடம். ஒரு பெண்ணை இல்லத் தரசியாக, அகத்தாள் அதாவது இல்லத்தையும், உள்ளத்தையும் ஆள்பவளாகக் கருதிப் போற்றியது நம் இனமல்லவா?

இன்னுமொரு உண்மையை நாம் உணரத் தவறிவிடக் கூடாது. தமிழீழத்திற்கு வெளியே சிறப்பாக மேல் நாடுகளில் வாழும் இளம் உள்ளங்கள், தாம் வாழும் சமுதாயத்தின் சிந்தனையாலும் வாழ்க்கை முறையாலும் பாதிக்கப்படுகின்றன. அங்கே 55 வீதத்திற்கும் அதிகமான திருமணங்கள் மணமுறிவில் முடிவடைகின்றன. நம்மவர்கள் ஈழத்தில் வாழ்ந்தபோது நமது சமுதாய அமைப்பு வேலிபோலிருந்து திருமண வாழ்விற்குக் காவல்புரிந்து அவைகளைக் கட்டிக் காத்தது. அதனால் எத்தனையோ திருமணங்கள் தரம் குறைந்து நின்றபோதும் தடம் புரளவில்லை. அத்தகைய தமிழ்ச் சமுதாயத்தின் உயர் கருத்துக்களோ, உதவிகளோ நம்மவர்க்கு வெளிநாட்டில் கை கொடுக்கப் போவதில்லை. எனவே புலம்பெயர்ந்து வாழும் இளந் தலைமுறையின் திருமணங்கள் அன்பில் மலர்ந்து இந்த நாற்றமெடுத்த சமுதாயத்திலும் நறுமணங்கமழ்ந்து இறுதிவரை நிலைக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்பது நமது தலையாய கடன்.

பிள்ளைச் செல்வத்தைத் தமிழினத்திற்கு அள்ளிக் கொடுத்த தாய் தந்தையரே, ஈழவிடுதலைப்போர் என்ற புயற்காற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசத் தொடங்கியதும் தாய்க்கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் வைத்துக் காப்பதுபோல் எல்லையில்லாத தொல்லைகளின் மத்தியில் உங்கள் குஞ்சுகளுடன் பாதுகாப்புத் தேடிப் புலம் பெயர்ந்தீர்கள். இவர்களின் வளமான வாழ்வு ஒரு பலமான திருமண வாழ்வில்தான் தங்கி உள்ளது என்பதை உணரத் தவறாதீர்கள். பட்டங்கள், பதவிகள், அளப்பரிய செல்வங்கள் அனைத்தும் இருந்து பயன் என்ன, இல்லத்தில் மகிழ்ச்சி மங்கையவள் பாதச் சிலம்பொலியாம் சிரிப்பொலி கேட்காவிடில்! அந்த மகிழ்ச்சி நிறைவான ஒரு திருமணவாழ்வில் தான் நீங்கள் பெற்றெடுத்த செல்வங்கட்குக் கிட்டும் என்பதை மறவாதீர்கள். சில பெற்றோர் வரட்டுக் கௌரவத்தின் காரணமாக தம் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட சில குடும்பங்களில் திருமணம் செய்து வைப்பதுண்டு. மாப்பிள்ளையாகவோ, மருமகளாகவோ வருவோரின் குணநலன்களை நன்கு ஆராய்ந்து அறியாமல், அமையவேண்டிய பொருத்தங்களை கருத்திலே கொள்ளாமல், பெரிய குடும்பங்களில் தம் பிள்ளைகள் சேர்ந்துவிட்டால் போதும் அதனால் தம் குடும்ப கௌரவம் மேலோங்குமென்று தப்புக் கணக்குப் போட்டதன் விளைவாக, எத்தனையோ இளம் உள்ளங்களின் வாழ்க்கை கெட்டழிந்து போனது. பேராசிரியரின் குடும்பம், செல்வந்தனின் குடும்பம் என்று குடும்பப் பெருமைபேசி குறைகளை அறிந்திருந்தும் அவைகளுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொண்டதனால் தாம் பெற்றெடுத்த செல்வங்களை குடிகாரருக்கும், மனநோயாளருக்கும், வீணருக்கும், ஒழுக்கம் கெட்டவர்களுக்கும் வாழ்க்கைப்படுத்திப் படுகுழியில் வீழ்த்திய வரலாறும், அதனால் தாமும் கண்ணீர் வடித்து நிற்பதும் நாம் அறிந்ததே. சாதி, மதம், வர்க்கம் என்பவற்றைக் காரணம் காட்டி, தம் மக்களின் காதலைச் சாகடித்து அதனால் அவர்கள் வாழ்க்கையையே நரகமாக்கி மகிழ்ச்சியையே சாகடித்த பெற்றோர்கள் எத்தனை பேர்? எனவே வரட்டுக் கௌரவங்களை விரட்டிவிட்டு நம் மக்களின் நல்வாழ்வையும் மகிழ்ச்சியையும் கருத்தில் கொண்டே நாம் திருமணத்தைப்பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டும்.

கணவனோ, மனைவியோ ஒருவர் ஒருவரில் குற்றங்குறை களைக் கண்ட இடத்தில் திருமண உறவை முறிப்பதுதான் வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்று நினைப்பது தவறு. குற்றங்குறைகளற்ற மனிதப் பிறவிகளை எங்கும் காணமுடியாது. குறை நிறைகளோடு ஒருவர் ஒருவரை உளமார ஏற்று அன்பு செய்வதுதானே உண்மைத் திருமண வாழ்வு. அழுக்குப் படிந்த சிப்பியில்தானே அழகு முத்து உருவாகின்றது. நாற்றமெடுக்கும் சேற்றிலேதானே செந்தாமரை வளர்கின்றது. கன்னங்கரிய குயிலினின்று பிறப்பதுதானே காது இனிக்கும் பாடல். இவ்வுண்மையைத்தான் நீதிநூலில் வேதநாயகர் விளக்குகிறார்:

**"பிழையிலான் கடவுளன்றி மக்களில்தப்**
**பிலாதார் பிறருமுண்டோ?**
**மழையினுமே அசனியுண்டு மதிக்கும் ஓர்**
**மறுவுண்டு மலர்க்குமுள்ளாம்**
**கழையினுமே சக்கையுண்டு கனியினும் தோல்**
**கொட்டையுண்டு கதிக்குங் காம**
**விழைவினான் மறம்புரிதல் நரர்க் கியல்பு**
**ஆதலின் அவரை வெறுக்கொண்ணாதே**

ஆகவே கணவனும் மனைவியும் நாளாந்தம் தம் பிழைகளைக் களைந்து புனிதம் அடைவதற்கு ஒருவருக்கொருவர் பரிவுடனும் பாசத்துடனும் உதவிக்கரம் நீட்டுவதே மணவாழ்வின் குறிக்கோள்களில் ஒன்று. ஒரு அறிஞன் கூறியது இங்கே நினைவுக்கு வருகிறது. "மனிதன் தவறும்போது மிருகமாகிறான்; குற்றங்களை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும்போது மனிதனாகிறான்; குற்றங்களைத் திருத்தும்போது புனிதனாகிறான்; குற்றங்களை மன்னிக்கும் போது தெய்வமாகிறான்" என்பதுதான். எத்துணை உயர்ந்த உண்மைகளைக் கருத்தாங்கி நிற்கும் வார்த்தைகள் இவை. நற்குணம் ஏதுமற்ற எந்த மனிதனும் இவ்வுலகில் இல்லை. அது போல எந்த நல்ல மனிதனிலும் குற்றங்குறைகள் இல்லாமலும் இல்லை. நம்மில் பலர் குற்றங்குறைகளை மட்டும் காணும் கண் படைத்தவர்களாக உள்ளனர். அவர்கள் அழுக்கடைந்த சிப்பியைக் காண்பார்களே தவிர அழகு முத்தை அறியார்கள். நாற்றமெடுக்கும் சேற்றைப்பற்றி முறைப்படுவார்களேயன்றி செந்தாமரை அவர்கள் சிந்தையில் தோன்றாது. குயிலின் கன்னங்கரிய தோற்றத்தைப் பற்றிக் குறைகூறுவார்களே ஒளிய அதன் இனிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை அவர் செவியில் விழாது. பால்நிலவில் படிந்துவிட்ட நிழல்பற்றி முறைப்படுவார்களேயன்றி அதன் அழகைப் போற்றார்கள். வளைந்த முட்களை ரோசாச் செடியில் பார்ப்பார்களே தவிர அம்மலரின் வனப்பை ரசிக்கமாட்டார்கள். ஆம் இத்தகைய மனப்போக்கு மணவாழ்வின் மகிழ்ச்சியைக் கெடுத்து தளர்ச்சியைக் கொடுத்துவிடும். ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும் அவன் கொண்ட மனம் போல் தான் அமையும். ஒவ்வொருவரது வாழ்வும் அவரவர் மனம் போல்தான் விளங்கும். "மனம்போல வாழ்வு" என்று பெரியோர் கூறவில்லையா? ஒருவர் குற்றம் புரிந்த இடத்து தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டு "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுவிட்டால் என்ன குறைந்துவிடப் போகின்றது? எங்கள் மனிதத் தன்மையையும் பெரும் குணத்தையும் அது வெளிப்படுத்துமேயொழிய நமது தரத்தைக் கொஞ்சமேனும் குறைத்துவிடாது. மேலும் நம் தவற்றினால் புண்பட்டுப் போனோரின் உள்ளத்துக்கு எவ்வளவு ஆறுதலை அது அளிக்கும். எனவே பெரு மனத்தோடு "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லப் பழகுவோம். நம் செயலால் அன்றேல் சொல்லால் புண்பட்டுப் போய்விட்ட உள்ளங்களில் பால்போல் அவ் வார்த்தைளை வார்ப்போம்.

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் பாராட்டிப் பேச மெச்சி மகிழத் தயங்கக்கூடாது. ஒருவர் மட்டில் மற்றவர் அடையும் பெருமையை புகழுரைகள் கூறி வெளிப்படுத்தத் தயங்கக்கூடாது. பழைய சேலை கிழிவதுபோல் எப்போதும் முறுமுறுத்துக் குறைபிடித்துக் கொண்டிருந்தால் மன விரக்திதான் பிறக்கும். மாறாக நற்குணங்களைக் கண்டு அவர்களை உச்சிமேல் வைத்து மெச்சினால் மன மகிழ்ச்சி உண்டாகும். இதயத்தில் தெம்பு குடிகொள்ளும். இது இருவருக்கிடையே நல்லுறவு வளர்வதற்கு மிகமிகத் தேவையான தொன்று. உயிருடன் இருக்கும்போது புகழ் உரைகள் வழங்காது இறந்தபின் சொல்லி அழுவதால், கல்லறையில் கண்ணீர் வடிப்பதால் பயன் என்ன? அவர்கள் உயிருடன் வாழும்போதே பாராட்டிப் பேணி நின்று அன்பை அவர் நெஞ்சில் தேன்போல் வார்த்து அதைப் பூரிக்க வைப்போம். நான் நன்றாக அறிந்த ஒருவர் தன் மனைவியின் அருமை பெருமைகளை அவள் அழகை, கவிதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவிலே எழுதிப் படிப்பார். அதற்கு ஒரு உதாரணத்தைத் தருகிறேன்.

**"இன்ப நதி ஊற்றெடுக்கும் இமயமலை நீதானம்மா**
**அன்பு வெள்ளம் பாய்ந்துவரும் கங்கைநதி நீதானம்மா**
**என்வாழ்வில் ஒளி சிந்தும் பால்நிலவு நீதானம்மா**
**பொன்னுலகம் காணும்வரை என்னுலகம் நீதானம்மா."**

அவர் மனைவியும் "புலவரே புழுகியது போதும்" என்று கிண்டல் செய்துவிட்டு நாணத்தினால் முகம் சிவக்கப் பூரித்து நிற்பாள். இத்தகைய புகழுரைகள் ஓர் உள்ளத்தில் பாய்ச்சும் உவகை வெள்ளம் அளவிடற்கரியது. இன்னும் தன் வீட்டுத் தோட்டத்தில் மலரும் ரோசா மலர் ஒன்றை எடுத்து வந்தோ, தன் வீட்டிலுள்ள சாடிகளில் மலரும் முல்லை மலரையோ, மல்லிகை மொட்டையோ பறித்து வந்தோ அவள் தலையில் வைத்து அன்புடன் அழகு பார்ப்பார். அவளது மனம் மகிழ்வதைக் கண்டு அவரது முகமும் மலர்ந்துவிடும். தமிழ் நாட்டில் நகரத்திலோ, நாட்டுப் புறத்திலோ வேலை முடிந்து ஆடவர் வீடுதிரும்பும்போது பூக் கடையில் தரித்து தம் மனைவியர் தலையில் கூட மலர்மாலை வாங்கி வருவது வழக்கம். இது ஓர் வாழ்க்கைக் கலை. இதைப் படிக்காத பாமர மக்கள் கூட நன்கு கற்று வைத்திருக்கின்றனர். இது நாளாந்தம் கணவன் மனைவிக்கிடையே அன்பை வளர்த்துவிடும். காதலர்கள்தான் திருமணத்திற்கு முன் இப்படி அன்பை வெளிப்படுத்துவது என்று எண்ணுவது தவறு. கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதும் காதலர்களாக விளங்குவதே திருமணவாழ்வின் வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக விளங்கும். கணவனின் விருப்பத்தை மனைவி தனதாக்கி, அவனது வேண்டுகோளை ஆணையாக ஏற்றுநின்றது அந்தக்காலம். அதனால் பிரச்சினைகளோ, பிளவுகளோ குடும்பங்களில் குறைவாகவே தோன்றின. இக்காலத்து மனைவியரோ தம் விருப்பங்கள், கொள்கைகள், கருத்துக்கள் மதிக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். இன்றைய உலகில் நமது குடும்பங்களில் ஒற்றுமை நிலவவேண்டுமெனில் இருவரும் கலந்துரையாடுவதன் மூலம் தம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். திருமணத்தில் இரு சிந்திக்கும் உள்ளங்கள் இணைவதால், கட்டாயம் அங்கு கருத்து வேறுபாடுகள் நிலவும். கணவனுக்கும் மனைவிக்குமிடையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்திலும் கருத்து ஒற்றுமையிருக்கும் என எதிர்பார்ப்பது தவறு. ஒற்றுமை என்பது இருவரும் ஒரே விதத்தில் சிந்தித்து ஒரே கருத்தைக் கொண்டிருப்பதிலன்று. மாறாக, கருத்தில் வேறுபட்டாலும் ஒருவர் கருத்துக்கு மற்றவர் மதிப்பளிப்பதன் மூலம் வேற்றுமையிலும் ஒற்றுமை காணலாம். கருத்தைப் பகிர்ந்து கொள்வதென்பது ஒருவர் கருத்தை மற்றவர்மேல் திணிப்பதோ அன்றேல் ஒருவர் தன் நிலையை விளக்கும்போது, அல்லது கருத்தைப் பரிமாறிக்கொள்ளும்போது, மற்றவர் அதைச் சரியென ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதோ அன்று. மாறாகத் தனது நிலையை விளக்குவதே அதன் குறிக்கோளாக இருக்க வேண்டும். மற்றவர் தன் கருத்துடன் ஒத்துவராவிடில் அவரது நிலையை மதிப்பதன் வழியாக, தனது அன்பையும் பெரு மனத்தையும் வெளிப்படுத்த முடியும். இதனால் ஒற்றுமை வளர்ந்தோங்கும். ஒவ்வொரு மனிதனும் ஓர் தனிப்படைப்பு. ஒவ்வொருவருக்கும் தனக்கேயுரிய தனிப்பண்புகளும் குணநலன்களும் உண்டு. உண்மை அன்பு குடிகொள்ளும் உள்ளம் அவற்றைக்கண்டு மதிப்பளித்து நிற்கும். ஆனால் சுயநலம் வாழும் நெஞ்சோ மற்றவரை எப்படியேனும் தன் நிலைக்கு மாற்ற முயலும். இதனால் மனக்கசப்பும், போட்டி மனப்பான்மையும், சண்டை சச்சரவும்தான் தலைதூக்கும். இருவரும் ஊளையிடும் குள்ளநரிகள்போல் கத்துவதில்தான் காலம் கழியும். இதுவெறுப்பையும் விரக்தியையும் வாழ்வில் ஏற்படுத்திவிடும்.

ஒவ்வொரு மனித உள்ளமும் புரிவதற்கு அரிதான ஒரு புதிர். எனவே, ஒவ்வொரு உள்ளத்தையும் புரிந்து கொள்வது மிகவும் கடினமானது. கலந்துரையாடும்போது ஒரு உள்ளம் தனது சிந்தையில் வாழும் எண்ணங்களை மௌனம் என்ற தடை அகற்றி வார்த்தை என்ற தேர் ஏற்றி மற்றவர் முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. அந்த எண்ணங்களை நிர்வாணமாகவல்ல ஆனால் எதிர்பார்ப்புகளோ, ஏமாற்றங்களோ, மகிழ்ச்சியோ, மனமடிவோ, பயமோ, துயரோ இப்படிப்பல உள்ள உணர்வுகளால் உடுத்தித்தான் தருகிறது. அப்போது தன் சிந்தையை, இதயத்தை ஏன் தன்னையே திறந்து மற்றவரின் மனக்கண்முன் பார்வைக்கு வைக்கிறது. அது ஒரு உள்ளத்திற்கு இன்னொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் அளிக்கும் அரும்பெரும் கொடை. கலந்துரையாடும் போது ஒருவர் சொல்வதை மற்றவர் காதுகொடுத்துக் கேட்டல் மட்டும் போதாது நமது சிந்தையையும், உணர்வுகளையும் துணைக்கழைத்து நம் காதுகளோடு இணைக்க வேண்டும். எந்த ஒரு தீர்ப்பும் இடாமல் அவரது கவலைகள், ஏக்கங்கள், திட்டங்கள் உள்ளத்து உணர்வுகள் என்பன எப்படிப்பட்டவை என்று கூர்ந்து கவனிக்க வேண்டும். அதன் வழியாக ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டு அன்புடன் வாழ முடியும். ஒருவர் பேசும்போது அவரை எப்படி மடக்குவது என்று சிந்திக்காது அவரது இடத்தில் நம்மை வைத்து அவரது உணர்வால் நம்மை மூடி அவரது கருத்துக்களைக் கவனமாகக் கேட்கும் போதுதான் நாம் ஓரளவுக்கேனும் அவரைப் புரிந்து கொள்ள முடியும். நேர்மையுடனும், கருணையுடனும் இதய சுத்தியுடனும் கலந்துரையாடும்போதுதான் அது பயன் தரும் ஒன்றாக விளங்கும்.

நாம் கேட்பதைவிட பேசுவதையே விரும்புகிறோம். இது பொதுவாக நம் எல்லோரிலும் உள்ள ஒரு குறை. மனிதனைப் படைத்த கடவுள் அவனுக்கு இரு காதுகளையும், இரு கண்களையும் கொடுத்தார். ஆனால் ஒரு வாயுடன் மட்டும்தான் அவனைப் படைத்தார். இரு காதுகளையும் கதவுகளின்றிப் படைத்தவர் வாய்க்கு இரு பலத்த கதவுகளைப்போட்டு பிறரின் கருத்துகளுக்கு அவர்களின் அழுகுரலுக்கு உன் காதுகளை எப்போதும் திறந்து வைத்துக்கொள். உன்வாய் எப்போதும் மூடி இருக்கட்டும். பயனுள்ளவை, நன்மையானவை ஏதும் சொல்ல இருந்தால் மட்டும் திறந்துகொள். மற்றவரின் தேவைகளுக்கு உன் கண்கள் திறந்திருக்கட்டும். தீமையானவற்றைக் கண்டால் அவற்றை மூடிக்கொள் என்று இரு சிறிய கதவுகளையும் கொடுத்தார். இப்படியே மனிதனின் உடலமைப்பின் வழியாக படைத்தவன் பாடம் புகட்டினான். அப்பாடத்தை நன்கு பயின்றவர் வெகுசிலரே. வள்ளுவரும் "யாகாவாராயினும் நாகாக்க" என்றார். கேட்கத் தெரிவது ஒரு கலை. அக்கலையைப் பயில்வதற்கு எவ்வளவோ மனக்கட்டுப்பாடும் பெரிய மனமும் வேண்டும். "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்" என்று நம் முன்னோர் அறியாமலா சொல்லிச் சென்றனர். ஒரு மேனாட்டு அறிஞன் கூறினான் "நீ சொன்ன வார்த்தைக்கு நீ அடிமை, நீ சொல்லாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை உனக்கடிமை" என்று. எவரது கருத்துக்களையும் தேவையற்றது என எண்ணாமல், அனவரது கருத்துகளும் மதிப்பளிக்கும் பரந்து விரிந்த மனத்தை நம்முள் உருவாக்க வேண்டும். இன்னொரு அறிஞன் கூறினான் "எவரது கருத்தையும் பயனற்றது என எண்ணாதே, ஏனெனில் பழுதடைந்து நின்றுவிட்ட ஒரு கடிகாரம் கூட ஒருநாளில் இருதடவைகள் சரியான நேரத்தைக் காட்டும்" என்ற. கணவனும் மனைவியும் இக்கேட்கும் கலையைப் பயின்றிருந்தால் எத்தனையோ பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்; ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவும் முடியும்.

இரு காதுகளை மனிதனுக்குக் கொடுத்ததுபோல் கடவுள் இரு வாய்களை அவனுக்குக் கொடுத்திருந்தால் உலகின் நிலை எப்படியிருந்திருக்கும் என நான் கற்பனை செய்து பார்த்தேன். வாய்கள் இரண்டும் மனிதனின் கன்னங்களிலிருந்தன. மனிதனின் தோற்றமே காணச் சகிக்காது பய உணர்வைத் தந்தது. உலக நிலை ஒரு கலக நிலையாக என் மனக்கண் முன் காட்சி தந்தது. கூச்சல் தாங்காது மனிதனின் கைகள் இரண்டும் கதவுகளாய் அவனது காதுகளிலிருந்தன. உலகம் முழுவதும் மனநோயாளர் விடுதிபோல் தோன்றியது. இது உலகமோ நரகமோவெனக் கலங்கி மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர். நான் பைத்தியக்காரன் போல் விலா நோகச் சிரித்து விட்டேன். நல்ல காலம் ஒருவரும் என்னைப் பார்க்கவில்லை. நீங்களும் உங்கள் கற்பனைச் சிறகடித்துப் பறந்து பாருங்களேன். ஓர் குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் அவரவர்க்கே உரிய ஒரு தனி இடம் உண்டு. கணவனும், மனைவியும் தமக்கே உரிய இடத்திலிருந்து தமது உரிமைகளை மட்டும் கோரி நிற்காமல் ஒரு கணவனுக்கும் தந்தைக்கும் உள்ள கடமைகளையும் ஒரு மனைவிக்கும் தாய்க்கும் உள்ள கடமைகளையும் குறைவற நிறைவேற்றினால் அமைதி அங்கு நிலவும். "பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா" "யாரும் இருக்கமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது இதில் அர்த்தம் உள்ளது" இப்பாடல் இவ்விடத்தில் எவ்வளவு பொருத்தமாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சமுதாயத்தில் இளம் குடும்பங்கள் பிரிவதற்குக் காரணமாக இருக்கும் இன்னொன்று அவர்கள் பிறந்த வீடுகளின் தலையீடுகள். இரு உள்ளங்கள் ஒன்றை ஒன்று புரிந்து கொள்ளும் காலம் திருமண வாழ்வின் தொடக்கம். ஒருவர் ஒருவருடன் அன்பில் இணைந்து வாழ, பழகிக்கொள்ளும் நேரம் இது. பிரச்சினைகள் சில உருவாகலாம். எவரும் தலையிடாமல் அவர்களே அவற்றிற்குத் தீர்வைக்காண விட்டுவிட வேண்டும். நடக்கத்தொடங்கும் குழந்தை எப்படித் திரும்பவும் திரும்பவும் விழுந்து எழுந்து நடக்கக் கற்றுக்கொள்ளுமோ அப்படியே இளம் குடும்பங்களும் தங்கள் தவறுகள் மூலம் திருமண வாழ்க்கை என்ற கலையைப் பயின்று கொள்ளுகின்றன. இத்தருணத்தில் மாமன் மாமி உறவினரின் தலையீடுகள் தலையிடியைத்தான் கொடுக்கும். இன்னும் தாய் தந்தையர் தங்கள் பிரச்சினை களோடு இளம் குடும்பத்தவரை தொடர்புபடுத்துவதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். எனவே மற்றெவரும் எந்தக் கருத்தையும் வழங்காமல் அவர்கள் வாழ்வில் தலையிடாமல் ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இதுவே அவர்களுக்குச் செய்யக் கூடிய பெரிய உதவியாக இருக்கும்.

திருமணத்தில் ஒருவர் ஒருவருக்கு வாழ்கைப்பட்டால் அவ்வுறவு சாகும்வரை நிலைக்க வேண்டிய உறவு என்று எண்ணுவது மிகவும் சரியானது. ஆனால் திருமண ஒப்பந்தம் தீப்பந்தமாகி உறவே அற்றுவிட்ட நிலையில், திருமண உடன்படிக்கையை இருவரில் ஒருவர் முறித்துவிட்ட நிலையில், ஒருவருக்கு ஒருமுறை வாழ்க்கைப்பட்ட காரணத்தால் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் கவலையிலும், கண்ணீரிலும், தனிமையிலும் கழிய வேண்டுமா? அழுகையையும் ஆறாத்துயரையும் அணைத்து நிற்க வேண்டுமா? திருமண வாழ்வில் அன்பைப் புகுத்த முடியாத நிலையில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தால் அவ்வாழ்வைத் துறந்து புது வாழ்வொன்றைத் தொடங்கி மகிழ்வுடன் வாழ்வது சாலச் சிறந்ததல்லவா? நாம் அனைவரும் கட்டாயம் சிந்திக்க வேண்டியதொன்று. திறந்த மனத்துடன் பரந்து விரிந்த உள்ளத்துடன் சிந்தித்தால் உண்மையைச் சந்திக்க முடியும். ஒரு கொடியில் ஒருமுறைதான் மலரும் பூப்போல, ஒரு மனதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறைதான் திருமண உறவும் மலரவேண்டுமென்று விரும்புவது நல்லது. அதை நடைமுறைப்படுத்த அனைத்து வழிகளையும் கையாளவேண்டும். முடியாத நிலையில் முதல் திருமணத்தில் மலராத உறவு அடுத்த திருமணத்தில் ஏன் மலரக்கூடாது? எத்தனையோ மனிதரின் வாழ்க்கையில் அது நடந்திருக்கிறதே. திருமண உறவை நம்மவர் யாராவது முறித்துவிட்டு விவாகரத்துப் பெற்றுக்கொண்டால் போதும் அவர்களைக் குறைவாக எடைபோட்டு ஒரு செல்லாக்காசுபோல் மதித்து தரம் குறைந்தவர்களாகக் கணிப்பது நமது சமுதாயத்தில் ஒரு குருட்டு வழக்கம். எத்தனையோ அன்பும் பண்பும் மிக்க நல்ல உள்ளங்கள் தாங்கள் எந்தத் தவறும் இழைக்காமல் தாம் எத்தனையோ ஆண்டுகளாக எவ்வளவோ முயன்றும் தம் திருமணவாழ்வை மகிழ்வுடன் பொருளுள்ளதாக வாழ முடியாத நிலையில் தங்கள் திருமணத்தை ரத்துச் செய்து கொண்டால் அவர்கள் எவ்விதத்தில் ஏனையோரைவிட குறைந்தவர்களாகிவிட முடியும்? அவர்கள் அந்த முடிவை சமுதாயத்தில் எடுப்பதற்கு எவ்வளவு நெஞ்சுரம் வேண்டும்.

**ஆவியின்றி உடலில்லை, உடலின்றி ஆவியில்லை**
**அதுபோல பத்தா**
**தேவி எனும் இருவர் சேர்ந்து ஒருருவர்ஞ் செழுமலரும்**
**தேனும் போல**
**மேவியவர் இருவருமே நள்ளாது முரண் செய்யில்**
**விளங்கும் மெய்யும்**
**சீவனும் ஒன்றோடொன்று போராடி அழிந்தொழிக்குஞ்**
**செப்புங்காலே**

என்கிறார் வேதநாயகர். அதன் பொருள் என்னவெனில் "உயிரின்றி உடலில்லை அதுபோல கணவன் மனைவி என்ற இருவரும் சேர்ந்து மலரும் தேனும்போல ஒரு உருவே. இருவருக்கும் ஒற்றுமையில்லையென்றால் அது உயிருக்கும் உடலுக்கும் ஏற்பட்ட போராட்டமேயன்றி வேறில்லை".

நம் சமுதாயத்தில் ஒருசிலர் ஒருமுறை வாழ்க்கைப் பட்டவர்கள் அதிலும் சிறப்பாகப் பெண்கள், இன்னொரு திருமணத்தை நினைத்துப் பார்க்கவே கூடாது என்ற சிந்தனைக் குருட்டாட்டத்தில் வாழுகின்றனர். இந்த வரட்டு வேதாந்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரட்டியடிக்கப்பட்டு மாண்ட கொள்கைகள் மண்மூடிப் புதைக்கப்பட வேண்டும். பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோலல்லவா இக்கதை! முன்பே நொந்துபட்ட நெஞ்சமொன்று அதன் எஞ்சிய காலத்தையும் தனிமையில் செலவிட வேண்டும் என்று நினைப்பதை வேறு எப்படிச் சொல்வது?

நமது சமுதாயத்தில் திருமண முறிவு பெற்ற இளைஞர்களோ, இளம் பெண்களோ போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் என்ற எண்ணத்துடன் எவருடைய கூற்றுக்கும் அஞ்சாது தமது நெஞ்சுக்கு எது ஏற்றதாய்ப் பட்டதோ அதைச் செய்யவேண்டும். அன்றேல் கழுதை வாங்கச் சென்ற தந்தையினதும் மகனினதும் கதையாகத்தான் உங்கள் வாழ்க்கைக் கதையும் முடிந்து விடும். பிறரது கருத்துக்களுக்குச் செவிமடுத்து அதை ஆராய்வது நன்று. ஆனால் பிறரை மகிழ்விக்க உங்கள் கொள்கைகளையோ வாழ்க்கையையோ பலிக்களம் அனுப்பக்கூடாது. ஒருவர் என்றோ ஒருநாள் எடுத்த பிழையான முடிவுக்காக எஞ்சிய வாழ்நாளைத் தனிமையில் வாழவேண்டியதில்லையே. எனவே நாம் நம் கடந்த காலத் தவறுகளை எண்ணி வருந்திக்கொண்டிராது அவற்றை நம் நாளைய வெற்றிக்குப் படிக்கல்லாக்கி ஒரு புதுவாழ்வைத் தொடங்கி இறைவனின் கரம் பற்றி நடப்போம். விவாகரத்துப் பெற்ற பெண்களும், தம் கணவர்களால் கைவிடப்பட்டவர்களுமே நமது சமூகத்தின் புளித்துப்போன சில கருத்துக்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். நமது தங்கம் நிகர் நங்கையர் பலர் இப்படி நம் சமுதாயத்தில் ஓர் இருண்ட மூலையில் கூட்டி ஒதுக்கிவிடப்படுகின்றனர்.

**நம் சமுதாயத்தின் இளம் சிங்கங்களே, வீர நெஞ்சங்களே, அறியாமையை சுட்டுப் பொசுக்கும் புரட்சித் தீக்கம்பங்களே, நம் மங்கையர்க்கு மறுவாழ்வளிக்கத் தயங்காதீர்கள். துன்பம் என்ற தீயிலே சுடப்பட்டு ஒளிவீசும் தரங்குறையாத தங்கக் கட்டிகள் அவர்கள். முன்பு ஒருமுறை வாழ்க்கைப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக நம் கண்ணொத்த பெண்களைக் கழித்து விடாதீர்கள், அவர்களுக்குத் துணிந்து வாழ்வு கொடுங்கள். அவர்கள் தனிமை மறைந்து வாழ்வில் இனியாவது இனிமை நிறையட்டும். அவர்கள் வாழ்க்கைத் தோட்டத்திலே அமைதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ற தென்றல் வீச, உவகை வெள்ளம் துள்ளிவர, அன்பு என்ற பூக்கள் பூத்துக் குலுங்கட்டும்.**

நமது இளைஞர்களில் சிலர் தாம் வாழும் நாடுகளில் வேறு இனத்துப் பெண்களுடன் காதலையும் தொடர்புகளையும் வளர்த்துக்கொண்டு, ஒழுக்க சீலர்கள்போல் நடித்து, பெற்றோரை மகிழ்விக்க, ஈழத்துப் பெண்களையும் மணந்து அவர்களை இங்கே கொணர்ந்து தம் உண்மைக் கோலத்தைக் காட்டி, காலமெல்லாம் கண்ணீர் வடிக்க வைத்த கதைகள் எத்தனை? பெண்பாவம் பொல்லாதது. கண்ணகி வடித்த கண்ணீர் மதுரை மாநகரையே எரிக்கவில்லையா? இத்தகைய துரோகச் செயல்களைத் தயவு செய்து உங்கள்மேல் இரங்கியாவது நிறுத்திக்கொள்ளுங்கள்.

புலம் பெயர்ந்த நம் இளம் தலைமுறையினரில் சிலர் வேறு இனத்தவர்களைத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். மனித குலம் ஒன்று, காதல் என்பது அதன் பொதுச்சொத்து என்று ஒருநாள் நடை முறைக்கு ஒத்துவராத தத்துவம் பேசியவன் நான். பலருடைய பட்டறிவுக்கு எட்டியதைக் கூறுகிறேன். தயவு செய்து செவிமடுப்பீர். குறையற்ற நிறைவான மணவாழ்க்கைக்கு கணவன் மனைவிக்கிடையே பொதுவான கருத்துக்கள், கொள்கைகள் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்வதற்குப் பொதுவான ஒரு பண்பாட்டுப் பின்னணி இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும், வாழ்க்கை முறையும், பழக்க வழக்கங்களும் அவனுக்கே உரித்தான கலாச்சாரத்தினின்றும் பண்பாட்டினின்றும் பிறப்பன என்பதை அறிந்திருந்தால், எத்தனையோ பேர் அத்தகைய கலப்புத் திருமணங்களில் இறங்கியிருக்கவும் மாட்டார்கள். உளம் உடைந்து கண்ணீர் சிந்தியிருக்கவும் மாட்டார்கள். ஆடை மாற்றுவதுபோல் அடிக்கடி ஆளைமாற்றக்கூடிய, உடுப்புக் களைவதுபோல் உறவுகளை இலகுவில் களைந்துவிடக்கூடிய பழக்க வழக்கங்களையும் சிந்தனையையும் கொண்டோருடன் நம்மவர் ஏற்படுத்தும் திருமண வாழ்க்கை எங்கே வந்து முடியும் என்பதைச் சற்று சிந்திப்பது மிகவும் பயன்தரும் ஒன்று. ஏனைய இனத்தவரைக் குறைத்துப் பேசுவது எனது நோக்கமல்ல. இத்தகைய திருமணங்கள் பொதுவில் நம்மவர்க்குப் பொருந்தாது என்றுதான் கூறுகிறேன். அவர்க ளது திருமணங்களிலே 55 வீதம் மணமுறிவில் முடிவடைந்தால் நம்மவர் அவர்களோடு செய்யும் திருமணங்களில் 90 வீதம் தோல்வியி லேயே முடியும் என்பது சிந்தித்தால் புரியும். யாரோ ஒருவன் சொன்னது போல் "நான் சொல்லுறத சொல்லிப்பிட்டன், நீங்க செஞ்சிறத செஞ்சுக்குங்க"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணம் அன்பிலே
நறுமணம் கமழவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் கெடுக்கும் சீதனம்

**என் இனிய தமிழினமே,**

திருமணத்தைப்பற்றி இவ்வளவு நேரமும் உரையாடிய நான் தமிழ் சமூகத்தைச் சீர்கெடுத்து அங்கே எத்தனையோ வாழ்வுகளை விழுங்கி ஏப்பம்விட்ட சீதனக் கொடுமைபற்றி எழுதாமலிருக்க முடியாது. சீதனம் என்பது இன்றிருக்கும் நிலையில் பெண்ணினத்துக்கு இழுக்குத்தரும் ஒன்று. பெண்ணினத்தின் பெருமையைப் பேணாத மாண்பை மதிக்காத சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு வழமைதான் சீதனம் என்பது. நான்கு பெண்களைப் பெற்றுவிட்டால் பெருமைப்படுவதற்குப் பதிலாக ஒரு தந்தையைத் தலையிலே கை வைத்து நிற்க வைக்கிறதே ஒரு வழமை! "பாவம் எப்படித்தான் நாலு குமரையும் கரை சேர்க்கப்போகிறானோ" என்று பரிதாபத்தோடு அவனைச் சமுதாயம் பார்க்கும் நிலைக்குத் தள்ளுகிறதே ஓர் வழமை! தவம் கிடந்து, வரம் கேட்டு நற்பெண்களைப் பெற்றெடுக்க வேண்டிய பெற்றோரை "முற்பிறப்பில் என்ன பாவம் செய்தனரோ இப்பிறப்பில் இத்தனை பெண்களையும் பெற்றெடுக்க" என்று சமுதாயம் கேட்க வைக்கிறதே ஒரு வழமை! இது மடமை என்பதைப் பெண்ணினம் உணரவேண்டும். சீதனம் வழங்க வசதியற்ற காரணத்தால் திருமணமே ஆகாமல் இருந்துவிட்ட பொன்போன்ற பெண்மணிகள் எத்தனை பேர்? அதே காரணத்தால் ஏதோ எப்படியும் திருமணம் நடந்து விடவேண்டும் என்ற நிலையில் குட்டைப் பிடித்த சொறிநாய்கள் போல் சமுதாயத்தில் சுற்றியலையும் ஒழுக்கம் கெட்ட ஆண்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் திலகங்கள் எத்தனை பேர்? சீதனக் கொடுமையினால் கெட்டழிந்த குடும்பங்கள் எத்தனை? கடன் பழுவால் நசுங்குண்டுபோன வாழ்வுகள் எத்தனை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணினமே பொங்கி எழு. சினங்கொண்டு சிலம்புடன் சென்ற கண்ணகிபோல் கையிலே செருப்பு எடுத்துச்செல். கேட்டானா உன்னிடம் சீதனம்? மூஞ்சியில் இறுக்கிவிடு கழுதைக்கு. இந்நிலையை மாற்றுவதற்கு வழிதான் என்ன? பெண்குலமே, நீ உணர்வு பெற்று, தன்மானத்தோடு ஒன்று பட்டு, வசதியிருந்தாலென்ன இல்லாவிடில் என்ன சீதனம் கொடுத்து திருமணம் செய்வதில்லை என்று உறுதி பூண்டால் உன் சமத்துவத்தை நிலைநாட்டமுடியும். சீதனப் பேயை நம் சமூகத்திலிருந்து விரட்டி அடிக்க முடியும். வசதிபடைத்த பெண்ணினமே, சீதனம் கொடுத்து திருமணம் செய்து உனக்குக் களங்கம் கற்பிக்காதே. வீட்டில் வேண்டாத குப்பையா நீ சீதனம் என்ற கூலிகொடுத்து அவர்கள் உன்னை வாழ்க்கைப்படுத்த? நம் பெண்கள் என்ன உதவாச் சரக்குகள், செல்லாக் காசுகள் என்ற எண்ணமா அவர்களுக்கு!

ஆகா! இன்னுமொரு விந்தையான செயல் என்ன தெரியுமா? கெட்ட கேடு போதாதென்று சீதனம் என்று குரங்குக்கு "நன்கொடை" என்றொரு வாலையும் கட்டி அழகாக "டொனேசன்" என்று பெயரையும் சூட்டி தரகர் என்ற கோமாளியையும் கேலிக் கூத்தொன்று ஆட அனுப்பிவைக்கின்றனரே மாப்பிளை வீட்டார். பெண்ணினமே! சீதனம் கேட்டுவரும் தரகருக்கு சும்மா ஒரு "டொனேசன்" கொடுத்தனுப்ப துடைப்பம் ஒன்று எடுத்துவை வீட்டு வாசல் படிக்கருகில். முட்டாள்கள் கூட்டத்தில் பலவகை உண்டு. ஒன்று வழிகட்டிய முட்டாள் கூட்டம். இதில் படித்துப் பட்டம் பெற்று பெரும் பதவிகள் வகிக்கும் முட்டாள்கள்தான் உறுப்பினர்கள். சீதனம் என்பது தன்னை வசதிபடைத்த பெண்ணுக்கு பணத்திற்காகவோ பொருள் பண்டத்திற்காகவோ, சொத்துக்காகவோ விற்பது என்பதை உணராது தனது தகுதிக்குக் கிடைத்த பரிசாக நினைப்பவனை முட்டாளென்று அழையாது வேறு எப்படி அழைப்பது? ஒருநாள் ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டை மூண்டது. தனது தாய் தந்தையரைப் பழித்துரைத்த கணவனைப்பார்த்து "வாயை மூடும் அவங்கட காசிலைதான் உம்மை நான் வாங்கினனான். உம்முடைய தங்கையின் கலியாணமும் அவங்கட காசிலைதான் நடந்தது மறந்திடாதேயும்" என்று சொன்னாள் மனைவி. ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமே உண்மையை உணர்ந்துகொள். தனது திறமையில், தகுதியில், ஆற்றலில் ஒரு ஆண்மகன் நம்பிக்கை கொண்டிருந்தால் ஏன் மாமன் வீட்டுச் சொத்துக்கு அவன் ஆசைப்பட வேண்டும். அடுத்ததாக படிக்காத வடிகட்டாத முட்டாள்களும் நம் சமூகத்தில் நிறைந்திருக்கின்றனர். சீதனம் என்பது ஒரு ஆணின் வேட்டைப்பரிசென எண்ணி வேறு எந்தத் தகுதியுமின்றி மீசை முளைத்த ஒரே காரணத்தால் அதில் தனக்கும் பங்கு கேட்பவனை வேறெப்படி அழைப்பது!

அதே நேரத்தில் எத்தனை மானம் மிக்க இளைஞர்கள், சீர்திருத்தச் செம்மல்கள், புரட்சி வீரர்கள் நமது சமூகத்தில் தோன்றி, சீதனம் வேண்டாமென்று அதை வாங்க மறுத்து பெண்ணினத்தை மதித்து பெருமையுடன் திருமணம் செய்து கொள்வதைப் பார்க்கும்போது உள்ளம் மகிழ்ச்சி கொண்டு பெருமிதத்தால் துள்ளுகிறது. அவ்வுத்தம உள்ளங்களுக்கு நமது அன்பும் நன்றியும் கலந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும். அப்படிப்பட்ட ஆண்சிங்கத்திற்குப் பக்கத்தில் ஒரு பெண் எந்த இடத்திலும் பெருமையுடன் நடந்து செல்ல முடியும்.

பெற்றோர் தமக்கிருக்கும் சொத்தை தமக்குப்பின் தம் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வதில் குறையேதுமில்லை. ஆனால் பெண்ணின் பெற்றோர் தலையில் மட்டும் அதைக் கடமையாகச் சுமத்திவிடக் கூடாது.

**தமிழ்ப் பெண்ணினம் என்று விழிப்படைந்து தனது பெருமையைப் பேணுமோ, அந்நாளே அது உண்மையில் விடுதலை அடைந்த நாள். மலரப்போகும் தமிழீழத்தில் சீதனம் வாங்கும் வழமை சட்ட விரோதமானதென்று விடுதலைப் புலிகள் இயற்றும் சட்டம், பெண்புலிகளின் குருதிகொண்டு எழுதப்படுகிறது. பெண்ணுலகின் மாண்பு கூறும் பொன்னுலகம் படைக்கப்படுகிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ல மொழியோ இது வெல்லமே தோற்று விடும்
# மெல்ல நடந்து வரும் அழகு மயில் வெட்கி விடும்

**என் அன்புத் தமிழ்ச் செல்வங்களே,**

நம் அன்பில் உருவெடுத்து, அழகு தங்க, அருள் பொங்க, நம்வாழ்வில் வந்து, நாம் பெற்றெடுத்த செல்வங்கள் தந்த இன்பத்தை என்னவென்று சொல்வது! உள்ளத்தை அள்ளும் கொள்ளைத் தமிழாலும் ஆகாதே. அவர்கள் நம் பாலைவன வாழ்வில் நாம் கண்ட சோலைவனங்கள், நம் இருண்ட வாழ்வில் முளைத்த விடிவெள்ளிகள், நம் வரண்ட வாழ்க்கைப் பாழ்வெளியில் பாய்ந்துவந்த தேனாறுகள். இதனாற்றான் வள்ளுவரும் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்..." என்று கூறினார். என்றும் குன்றாப் புன்முறுவல் பூத்த அவர்களது மலர் முகத்தைக் கண்டு மெய்மறந்து நின்ற பொழுதுகள் எத்தனை? அவர்களது சிங்காரச் சிரிப்பில் சங்கீதம் கேட்ட நாட்கள் எத்தனை? மலருக்கு மலர்தாவி தேனுண்ணும் வண்டுகள் போல் அவர்களது முத்துச்சிப்பிக் கன்னத்திலே முத்தமழை பொழிந்து அவர்கள் தந்த இன்பத்தேனை தணியாத தாகத்தோடு அள்ளிப்பருகிய நேரங்கள் எத்தனை? அவர்கள் தம் தளிர்க்கரங்களால் நம்மைத் தழுவியபோது தத்தித் தத்தி தளர்நடை போட்டபோது, மடிமீதிருந்து மைனாபோல் மழலை பேசியபோது நாம் அடைந்த சுகமோ ஈடு இணையற்றது. அவர்களே இன்றும், அன்றும், என்றும் நமது வாழ்வாக, நமது உலகமாக, சுருங்கக் கூறின் நமக்கு எல்லாமாக விளங்குகின்றனர். "கத்து கடல் முத்தோ இது கடவுள் தந்த சொத்தோ" என்றல்லவா வியந்து கொள்கின்றோம். தன் மகள் தந்த இன்பத்தை ஓர் கவிஞன் கவிதையிலே விளக்குகிறான்:

**"அரும்பாக எழுந்து வந்து இதயத்தில் மலர்ந்து நின்றாய்**
**கரும்பாகத் தழைத்து ஆங்கே இனிமையைப் பிழிந்து தந்தாய்**
**விருப்போடு இசைபாடும் வண்டாகப் பறந்து வந்தாய்**
**மருதம்போல் என் மனதை மகளே நீ மாற்றிவிட்டாய்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அப்பா என அழைத்தாய் அப்பப்பா! என்ன இன்பம்**
**செப்புதற்கோ வார்த்தையில்லை அப்பனவன் தந்த வரம்**
**தப்பாமல் தந்திடுவேன் ஒப்பில்லா அன்புதனை**
**எப்போதும் நெஞ்சமதில் குடிகொள்வாய் என்னவளே!"**

ஒரு குழந்தை என்பது திருமணவாழ்வில் இருவருக்குக் கடவுளால் வழங்கப்படும் விலைமதிக்கற்கரிய ஒரு கொடை. பிள்ளைகள் கடவுளின் சொத்து. அவர்களை உருவாக்கி வளர்த்து ஆளாக்கி விடும் பொறுப்பை இறைவன் பெற்றோரின் கையிலே கொடுத்திருக்கிறார். நம் குழந்தைகள் இளம் செடியைப்போல அன்பு என்ற நீர்வார்த்து ஒழுக்கம் என்ற உரம் இட்டு, அறிவு என்ற வேலிகட்டி வளர்க்கப்பட்டால் வானளாவ உயர்ந்த மனிதர்களாக விளங்கி நற்கனிகளை நல்குவார்கள். மண்வளம் எப்படி ஒரு செடியின் வளர்ச்சிக்கு மிகத் தேவையானதொன்றோ அப்படியே பெற்றோரின் மனவளம் அவர்களது பிள்ளைகளின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் மிக வேண்டியதொன்று. நம் மழலைச் செல்வங்கள் மட்டில் நமக்கு மாபெரும் பொறுப்பு ஒன்று உண்டு. கல்லிலே சிலையைச் செதுக்குகிறான் சிற்பி; சொல்லிலே வண்ணமிக்க எண்ணங்களை வடிக்கிறான் கவிஞன்; ஒலியிலே இசையை அமைக்கிறான் இசைஞன்; ஓலையிலே சித்திரம் வரைகிறான் ஓவியன். இவர்கள் எப்பேர்ப்பட்ட சிறந்த கலைஞர்களாயினும் இவர்களின் பணியை விட பெற்றோரின் பணி உயர்ந்தது. ஏனெனில் அவர்களுடைய பணி கல்லிலோ சொல்லிலோ அல்ல ஒலியிலோ ஓலையிலோ அல்ல ஆனால் மனித வாழ்வில் இறை உருவை வடிப்பதிலே அது அடங்கும். எனவே இறை அருளிலும் இறை உணர்விலும் பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும். அப்பிஞ்சு நெஞ்சங்களில் இறைவனைக் குடியிருத்தி அந்தத் தெய்வத்தைச் சுற்றியே அவர்களது வாழ்க்கை கட்டி எழுப்பப்பட்டால் அவை உயர்ந்த வாழ்வுகளாக விளங்குமென்பதில் சந்தேகம் இல்லை. தமிழ் ஈழத்துப் புலவர் சுவாமி விபுலானந்தர் இதை அழகாக விளக்குகிறார்:

**"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது".**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளையின் வாழ்க்கை பெற்றோரது வாழ்வின் எதிரொலி என்று துணிந்து கூறலாம். பெற்றோரின் மடியிலும் கையிலுமிருந்தே ஒன்றுமறியாத குழந்தை அனைத்தையும் பயில்கின்றது. எனவே பெற்றோரின் மடியே பிள்ளைகளின் முதற்பள்ளி என்று சொன்னால் அது மிகையாகாது. அது அங்கிருந்து பெற்றோரின் வார்த்தைகளையும் வாழ்க்கையையும் கூர்ந்து கவனிக்கிறது. தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்தையும், தான் பார்க்கும் கேட்கும் அனைத்தையும் தன் சிந்தையிலே பதித்துக் கொள்ளுகிறது. "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை" என்றும் "தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி" என்றும் நம் முன்னோர்கள் அறியாமலா சொல்லிப்போனார்கள். பெற்றோர் தம் வாழ்க்கையை தன்னலமற்ற தியாகம் மிளிரும் அன்பிலே நடத்தி, நினைத்ததைச் சொல்லியும் சொன்னதைச் செய்யும் நேர்மையிலும், நெஞ்சு பழுதற்ற ஒழுக்கத்திலும், பண்பிலும் வாழ்ந்து காட்டினால் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கைப் பள்ளியிலே சிறந்த ஆசிரியர்களாக விளங்க முடியும். பெற்றோர் தாம் நம்பாததைப் பிள்ளைகளுக்கு உணர்த்த முற்படக்கூடாது. தம் வாழ்வில் கடைப்பிடித்தொழு காததை பிள்ளைகளுக்குப் பயிற்றக் கூடாது. அவர்களது வார்த்தை வேறு வாழ்க்கை வேறாக விளங்கினால் பிள்ளைகளின் நன்மதிப்பை இழந்து விடுவார்கள். ஆகவே, பிள்ளைகள் தம் பெற்றோரைப் பற்றிப் பெருமைப்படும் அளவுக்கு நம் வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டும். பணம் இருந்தென்ன, பட்டங்கள் இருந்தென்ன, பதவிகள் இருந்தென்ன, நற்குணங்களை நாம் கொண்டிராவிடில். வாழ்க்கை வசதிகள் அற்றிருந்தாலும், வறுமையில் வாடினாலும், புண்ணியம் மிக்க கண்ணியவான்கள் என்று சமூகம் கணிக்கும் அளவுக்கு நம் வாழ்க்கை விளங்கினால் நம் பிள்ளைகள் அடையும் மகிழ்ச்சியும் பெருமையும் அளவிடற்கரியது. அதுமட்டுமன்று அவர்களும் சமுதாயத்தில் ஒழுக்க சீலர்களாய் ஒளி சிந்தும் விளக்குகளாய் விளங்குவர். இதனாற்றான் வள்ளுவரும்,

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்"** என்றார்

அதன் பொருள் யாதெனில் "ஒருவர் தக்க பண்புடையவர் அன்றேல் அல்லாதவர் என்பதை அவருடைய மக்களின் பண்பைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே எளிதில் அறிந்து கொள்ளலாம்" என்பதே.

**வேறொரு நாட்டில் பிறிதொரு சூழலில் நம் பிள்ளைகள் தங்கள் தனித்தன்மையை இழந்து விடாமல் வளர்த்தெடுப்பது மிகவும் கடினமானதொன்று. உங்கள் பிள்ளைகள் பிறந்த இனம், பேசும் மொழி, பின்பற்றும் மதம் அனைத்தும் அவர்களுக்கு அருட்கொடையாக இப்பிறவியில் அன்புமிகு ஆண்டவனால் வழங்கப்பட்டவை. எனவே அவை மட்டில் பற்றும், பெருமையும் கொண்டு அவற்றை நன்றியுணர்வுடன் பேணி நிற்கப் பயிற்றுவது பெற்றோராகிய நமது கடமை. அவர்கள் இறைவனின் மக்கள் என்ற உணர்வுடன், தமிழ்த்தாயின் மக்கள் என்ற பெருமையுடன், நம் பண்பாட்டைத் தழுவி, தம் தனித்தன்மையை இழந்து போகாமல் வாழப்பழக்குவதற்காகவே தம் மக்களை இறைவன் நம்மக்களாக நம் கையில் தந்திருக்கின்றார். அது மிகவும் பொறுப்புவாய்ந்த ஒரு பணி.**

ஒருநாள் எனது தமிழ் நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு அவரது பதினான்கு வயது நிரம்பிய மகன் தொலைக்காட்சியில் ஏதோ நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தமிழ் பேச அறிந்திருப்பான் என்ற எண்ணத்தில் அம்மொழியில் அவனோடு பேசத் தொடங்கினேன். அவன் ஏதோ விண்வெளியிலிருந்து வந்த அந்நிய உயிரொன்றைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தான். "ஓகோ ஐயாவுக்குத் தமிழ் தெரியாது" என்று உணர்ந்து கொண்டேன். உடனே என் அலைவரிசையை மாற்றி ஆங்கில மொழியில் "தமிழ் கொஞ்சமாவது தெரியுமா" என்று கேட்டேன். இல்லை என்பது போல் தலையை அசைத்தான். அதன்பின் "இரண்டொரு சொற்கள் தெரியும்" என்றான். உடனே தந்தைக்கா மகனுக்கா என் பாராட்டுக்களைத் தெரிவிப்பது எனத் தெரியாது விழித்தேன். உன் பெற்றோரின் ஊராகிய யாழ்நகருக்குப் போக விரும்புகிறாயா" என்று நான் கேட்க "அங்கே சண்டை நடக்கின்றதே எப்படிப் போவது" என்றான். நானும் தொடர்ந்து "ஏன் சண்டை போடுகிறார்கள்" என்றேன். தனக்கு தெரியாது என்பதுபோல் தோள்பட்டைக்குள் கழுத்தைச் செருகினான். உன் உள்ளம் நெகிழ பரிவுடன் "நீ தமிழனல்லவா, தமிழ்ப் படிப்பது நல்லதல்லவா" என்று நான் சொன்னதும் அவன் சிறிதளவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்காமல்."நான் அமெரிக்கன்" என்றான். நான் சிறிது அதிர்ந்து போனதால் வேறு கேள்வியெதுவும் என்வாயை விட்டு வெளியேறவில்லை. நிலமையைப் புரிந்து கொண்ட என் நண்பர் "உன் கிற்றாரை எடுத்து வந்து இசை மீட்டிப் பாடிக்காட்டு மாமாவுக்கு" என்று மகனிடம் சொல்ல அவனும் "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்பது போலத் தன் அறைக்குள் ஓடினான். அப்போ என் நண்பனிடம் "என்னடாப்பா கொஞ்சமாவது தமிழை நீ உன் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்கவில்லையே" என்று முறைப்பட, "அவன் தமிழ் படிக்க விரும்பாதபடியால் நாம் வற்புறுத்தவில்லை" என்றுவிட்டு தனது குரலை ஆங்கில அலைவரிசைக்கு மாற்றி சமையலறையிலிருந்த மனைவியுடன் ஆங்கிலத்தில் உரையாடினார். உடனே பிரச்சினை எங்கே எனப் புரிந்து கொண்டேன். சிறுவன் தன் கிற்றாருடன் வந்து அதைமீட்டி எனக்குப் பிடித்த ஒரு பாடல் ஒன்றைப் பாடினான். அதில் அவன் பெற்றிருந்த திறமையைக் கண்டு மகிழ்ந்து அவனைப் பாராட்டினேன். அவன் பள்ளியிலும் "சிறந்த மாணவன்" என்ற விருதைப் பெற்றிருந்ததையும் அறிந்து பெருமையடைந்தேன். பெருமையுடன் கூடிய புன்சிரிப்புடன் மகனை இமைவெட்டாது பார்த்துக்கொண்டிருந்தார் தந்தை.

ஆயகலைகள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தாலும், நம் பிள்ளைகள் தம் தாய்மொழியைக் கற்கத்தவறின் ஏதோ குறையுடையவர்கள் போல, களங்கம்பட்ட பால் நிலாபோலத் தான் என் கண்ணில் படுகின்றனர். **நாம் புகுந்த நாட்டு மொழிகளைப் படிப்பது தவறு என்று நான் கூற வரவில்லை. மாறாக அம்மொழிகளில் நம்மவர்கள் பாண்டித்தியம் பெறவேண்டும். அந்தச் சிறுவனுக்கு அவனது தாய்மொழியே அந்நியப்பட்டதுதான் கவலை. அந்தப் பிஞ்சு நெஞ்சத்துக்கு யாரும் அதை ஊட்டவில்லையே என்பதுதான் வேதனை. தான் அமெரிக்கன் என்று அச்சிறுவன் பெருமைப்பட்ட வேளையில் தமிழ் அமெரிக்கன் என்றாவது பெருமைப்படவில்லையே என்பதை நினைக்கத்தான் துக்கம்.** இதைப்பற்றிய பிரச்சினை சிறுவனில் இல்லை. அங்கு பெற்றோர் ஆங்கிலம் பேசுவதே அவனில் அவன் தாய்மொழியாம் தமிழ்மொழி அந்நியப்பட்டதற்குக் காரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே என் உடன் பிறப்பே விழித்தெழு. காலம் சென்றுவிட வில்லை சிறிது பிந்திவிட்டோம்; அவ்வளவுதான். தமிழை வீட்டு மொழியாக்குவோம். வீட்டில் வேற்று மொழிபேசுவது குற்றச் செயலாகக் கருதப்பட வேண்டும். பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்பார்களே. நம் நெஞ்சில் தமிழீழப்பற்றும், தமிழ் மொழிப்பற்றும், இனப்பற்றும் இல்லாவிடில் எப்படி அதை நம் பிள்ளைகளுக்கு ஊட்ட முடியும்? எத்தனையோ பேர் தம்பிள்ளைகள் தமிழ்கற்காததற்கு நேரமின்மையைக் காரணம் காட்டுகின்றனர். அதைத்தான் நாம் நொண்டிச் சாட்டென்று அழைப்பது. கராட்டி பயில நேரமுண்டு; கன்னித் தமிழ் பயில நேரமில்லை. கிற்றார் கற்க நேரமுண்டு; நற்றமிழ் கற்க நேரமில்லை. **நம் பிள்ளைகள் இறைவன் இப்பிறப்பில் அவர்களுக்கு வழங்கிய தமிழர் என்ற தம் தனித்துவத்தை இழந்து விடின், அது ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதை நாம் உணர்ந்து ஆவன செய்யவேண்டும். நம்முள் ஒருபகுதி, நமக்குச் சொந்தமானதொன்று நமது வருங்காலத் தலைமுறையிலே தலைமறைவாகி விடுவதை பார்த்துக் கொண்டு செயலற்று இருந்து விடக்கூடாது. அவிழ்ச் சுவையன்றி தமிழ்ச்சுவை அறியாதோர் என்ற பழிப்புரையை நாம் தேடிக்கொள்ளக்கூடாது. தமிழ் தெரியாத ஒரு பிள்ளை தன் இனத்துடன் தனக்குள்ள உறவைத் துண்டித்துக்கொள்கிறது. தனது சமூகம் என்ற நிலத்திலிருந்து தனது வேரைக் கழற்றி விடுகிறது. தமிழ்மொழி அறிவு மட்டுமன்றி நம் இனத்தைப் பற்றிய அறிவு, நமது ஈழ மண்ணைப் பற்றிய வரலாறு, நமது பண்பாடு கலாச்சாரத்தைப் பற்றி, அதன் அருமை பெருமைகளைப்பற்றி எதுவுமே அறியாததாக அல்லவா வருங்காலத் தலைமுறை வளருகிறது. ஈழவிடுதலைப்போர் பற்றிய எந்தத் தெளிவும் இல்லாமலல்லவா வாழுகிறது!** எனது நண்பனின் மகனை எடுத்துக் கொண்டால் தமிழீழம் என்ற தனது பெற்றோர் பிறந்த மண்ணின் பெருமையை ஈழத்தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவன் தமிழீழத்திற்கும் சொந்தம் என்ற எண்ணத்தை எவரும் அவன் நெஞ்சில் வளர்க்கவில்லையே! நம் மண்காக்க, நம் உரிமையை வென்றெடுக்க அவனது வயதை ஒத்த உடன் பிறப்புகள் செருமுகத்திலே படைக்கும் வீரகாவியத்தைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்படவில்லையே! நமது பழம்பெரும் பொருள் பொதிந்த பண்பாட்டினை நம் தொன் மைமிக்க கலைகளின் சிறப்பியல்புகளை எடுத்தியம்பவில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புகுந்த நாட்டுக்கு என்றும் குன்றா நன்றியுடன் வாழ வேண்டுமென்பது என் கருத்து. பல்வேறு இன மக்கள் வந்து குடியேறும் நாட்டில், நாம் நமது தனித்தன்மையை இழந்து விடாது நமது அரும் பெரும் பண்பாட்டுச் செல்வத்திலிருந்து அந்நாட்டுக்கு நமது பங்களிப்பை வழங்குவது நமது கடமை. நாம் புகுந்த நாட்டை நம் கலாச்சாரத்தால் வளப்படுத்தி நமது நன்றிக் கடனைத் தீர்க்க வேண்டும். தமிழர் தாம் யார் என்பதை மறந்து, தமது தமிழர் என்ற தனித்துவத்தை இழந்துவிடின், தமிழரின் பெயரால் அவனுக்கு அடைக்கலம் தந்த நாட்டுக்கு அவனது கலாச்சாரம் எனும் களஞ்சியத்திலிருந்து அவனது நனிபங்கை வழங்குவது வேறு யார்? எப்படி ஒரு பூங்காவில் பல்வேறு இனப்பூக்களும் நிறப்பூக்களும் அதன் அழகைப் பெருக்குமோ அவ்வாறே பல்வேறு கலாச்சாரங்கள் அந்நாட்டை மென்மேலும் அழகுபடுத்தும்.

**நமது சிறுவர் சிறுமியர் தாம் புகுந்த நாடுகளில் சிறபான்மையோராக விளங்கும் காரணத்தினால், தாம் நிறத்தில் தோற்றத்தில் வேறுபட்டு விளங்குவதனால், எந்த விதத்திலும் தாழ்வு மனப்பான்மையைக் கொண்டு விளங்காமல், சுய கௌரவத்துடனும், இனத்தைப்பற்றிய பெருமையுடனும், எவருக்கும் தாம் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்ற திடமான எண்ணத்துடன் வாழ சிந்தைக்கு ஒளி ஊட்டி வழிகாட்டி நிற்பது நமது கடமை.** நமது சிறார்களில் நாம் காணும் குறை என்னவெனில் தாம் சிறுபான்மையோராகத் தம் வகுப்பறைகளில் காணப்படுவதினால் உடன் மாணவர்களோ அல்லது வேறெவரோ தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கோடு அவர்களை அனைத்திலும் பின்பற்ற முயல்வதுதான். பிறரைக் கண்ணை மூடிக்கொண்டு கண்டதிலும் பின்பற்றாமல், கூட்டத்தோடு கூடிநின்று கோவிந்தா போடாமல் தமக்கென ஒரு கொள்கையுடன், இலட்சியத்துடன், எப்படியும் வாழலாம் என்றில்லாமல், இப்படித் தான் வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழப் பயிற்ற வேண்டும். பிறரைத் திருப்திப் படுத்துவதற்கோ அன்றேல் அவரது நல்லெண்ணத்தைப் பெறுவதற்கோ எதையும் செய்யாது தனது நெஞ்சுக்குச் சரியெனப்பட்டதை, நலமெனப்பட்டதைச் செய்து தவறு எனப்பட்டதை, கெட்டதெனப்பட்டதைத் தவிர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கப் பயிற்ற வேண்டும். சாரத்தை விட்டு சக்கையை ஏந்தும் பன்னாடை போலில்லாது, தண்ணீரையும் சேற்றையும் கலக்கிக் குடிக்கும் எருமை போலில்லாது, நீரிலிருந்து பாலைப் பிரித்துண்ணும் அன்னம் போன்று பிறரிலுள்ள நல்லவற்றை எடுத்துக்கொண்டு, தீயவற்றை விலக்கிவிட அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அப்போது அவர்கள் ஒழுக்கமும், செயற்திறனும், கொள்கைப்பிடிப்பும், தன்னம்பிக்கையும் மிக்கவர்களாக குன்றின்மேலிட்ட தீபம்போல் ஒளிவீசி நம்மவர்க்குப் பெருமை சேர்ப்பர்,

**நாம் பெற்றெடுத்த செல்வங்களைச் சரிவர வளர்ப்பது ஒரு கலையென்று உளவியல் அறிஞர்கள் கூறுவார்கள். பிள்ளைகள் தாம் வளரும் காலத்தில் எதைப்பட்டறிந்து கொள்ளுகிறார்களோ அதற்கேற்பவே அவர்கள் குணநலன்களும் அமையும். எப்போதும் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் குறைகூறிக் கொண்டேயிருப்பர். எந்த ஒரு நிறைவையும் அவர்களில் காணாது வாயில் வந்தபடி வைது கொண்டிருப்பதனால் மனமடிவே ஏற்படுகிறது. அப்படி வளர்ந்த பிள்ளைகள் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாய் மற்றவர்களின் குறைகளைக் கண்டு தீர்ப்பிடுவதிலே வாழ்வைக் கழிப்பர். மாறாக, ஊக்கம் ஊட்டி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் ஏக்கம் கொண்டு வாழாது தன்னம்பிக்கையும் மனப்பலமும் கொண்டு விளங்கி வெற்றிகளையே வாழ்வில் பெற்றுக்கொள்வர். நம்மவரில் சிலர், பிள்ளைகளைத் திருத்துகிறோம், கட்டுப்பாட்டுடன் வளர்க்கிறோம் என்ற எண்ணத்தோடு "சனியனே, கழுதையே, எருமையே, மடையனே" என்று திட்டுவதிலும் அடிப்பது, குட்டுவது போன்ற வன்முறைகளைக் கையாள்வதிலும் ஈடுபடுகின்றனர். இது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியதொன்று. பிழைகள், தவறுகள் செய்து திருந்துவதன் வழியாகவே, முதிர்ச்சி பிறக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். கண்டிக்க வேண்டி நேரிடின் தவறுகளையே வெறுக்கிறோம், தவறிழைக்கும் ஆளை அல்ல என்பது தெளிவாகத் தெரியவேண்டும். ஆனால் கழுதையே, எருமையே என்று திட்டும்போது தவறுபுரிந்தவரையே வெறுப்பதைக் காட்டும். இது விரக்தியையும் மனமடிவையும் கொடுத்து தன்னம்பிக்கையைக் கொன்றுவிடும். யானைக்குப் பலம் தும்பிக்கையில் மனிதனுக்குப் பலம் நம்பிக்கையில் என்பதை மறக்க வேண்டாம். புரிந்து கொள்ளும் பரிவு மிக்க உள்ளத்துடன், தவறுவது மனித இயல்பு என்பதை உணர்த்தி அவர்களது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்குணங்களைப் புகழ்ந்து, தளர் நடைபோடும் குழந்தையின் கரம்பற்றி நடைபயிற்றும் தாய்போல் நம் செல்வங்களின் கரம்பற்றி வழிநடத்தினால் ஒளிமயமான ஒரு எதிர்காலம் அவர்களுக்குத் தப்பாமல் கிடைக்கும். திரும்பத் திரும்பத் தவறுசெய்தாலும், பொறுமையுடன் திருந்துவதற்கெடுக்கும் முயற்சியே முக்கியம் வாய்ந்தது என்பதை உணர்த்தி, ஊக்கம் அளித்தால், நம் மொட்டு கள் மலர்ந்து நாளைய சமுதாயத்தில் நறுமணம் கமழுவார்கள். தாங்கள் வளருங்காலத்தில் அன்பையோ, அரவணைப்பையோ, பாசத்தையோ, நட்புறவையோ அறியாது வளரும் பிள்ளைகள் வெறுப்பும் பகைமை உணர்வும் மிக்கவர்களாக முரட்டுக் குணத்துடன் போர்க்கோலம் பூண்டு சமூக விரோதிகளாக விளங்குவர். அன்பை, பாசத்தை, கருணையை, பரிவை நிறைய நுகர்ந்து வளர்ந்த சிறார்களோ நட்பும் நல்லுறவும் கொண்டு அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி சிந்தி குன்றின் மேலிட்ட தீபம் போலச்சுடர் வீசுவர். சகிப்புத் தன்மையற்ற பெற்றோரிடம் வளர்பவர்கள் பொறுமை அற்றவர்களாக கோப உணர்வோடு பதட்ட நிலையிலே எப்போதும் தோன்றுவர். சகிப்புத் தன்மை யுடன் வளர்க்கப்பட்ட பிள்ளைகள், பொறுமை மிக்கவர்களாக மன்னிக்கும் மனப்பக்குவத்துடன் அனைவரையும் புரிந்து வாழ்வர். புகழுரைகள் பாராட்டுகள் கேட்டு வளர்ந்தவர்கள், சுயகௌரவத் துடன் மகிழ்ச்சி மிக்கவர்களாக அனைவரையும் மெச்சி வாழ்பவர் களாக விளங்குவர். பழிப்புரை கேட்டு வளர்ந்தவர்களோ, தன்னம்பிக்கையை இழந்து வாழ்வில் தோல்வியையே தழுவுவர். நியாயத்துடன் வளர்க்கப்பட்ட உள்ளம், நீதியைக் கடைப்பிடித் தொழுகும். அப்படியன்றி அநீதியைக் கண்டு வளர்ந்தபிள்ளை, மற்றவர்களின் உரிமைகளை மதித்து நடக்காது. அன்புப் பெற்றோரே! உங்கள் பிள்ளைகளின் வாழ்வும் தாழ்வும், எழுச்சியும் வீழ்ச்சியும் உங்கள் கையிலே தங்கியுள்ளது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனிப்படைப்பு. ஒவ்வொரு மனித உயிரையும் தனிப்பட்ட ஆளுமையுடன் அதற்கே உரிய தனிப்பட்ட குணநலன் களுடன் வேறு காண்பதற்கரிய, எவரிலுமில்லாத சில சிறப்பியல் புகளுடன் இறைவன் படைத்துள்ளார். அவர்களை வளர்த்துவிடு வதற்கு நம் கையில் இறைவன் தந்தாரேயன்றி மாற்றிவிடுவதற் கல்ல. ஒவ்வொரு மனித உயிரும் உடற் தோற்றத்திலேயே வேறுபட்டு நிற்கிறது. எனவே பெற்றோர்கள் அனைத்திலும் தம்மைப்போல, தாம் விரும்புவதுபோல தம் பிள்ளைகள் வளரவேண்டுமென்று விரும்புவது தவறு. தீமையானவற்றை பிழையானவற்றைத் தவிர, வேறு எதையும் அவர்களில் மாற்றிவிடக்கூடாது. அது அவர்களுக்கே உரிய அழகுமிக்க தனித்துவத்தை அழித்துவிடும். நாமல்ல அவர்கள். அவர்கள் வேறு, நாம் வேறு. அவர்கள் விருப்பு வெறுப்பு நமது விருப்பு வெறுப்புகளை விட வேறுபட்டனவாகவே விளங்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது எண்ணங்கள், உணர்வுகள், செயல்முறைகள் நம்மிலிருந்து வேறுபட்டவையாகவே இருக்கும். அவர்களது நல்லியல்புகளைத் தயவு செய்து மாற்றாதீர்கள். நம் செல்வங்களின் திறமைகள் எவை என்பதை அறிந்து அவைகளை வளர்ப்பதற்கு உதவிக்கரம் நீட்டி நிற்பதே நம் பணி. கலைத்திறன் படைத்தோரை கலைத்துறையில் வளரவிட வேண்டும். நாம் அறிந்த எத்தனையோ பெற்றோர்கள் தம் மக்களின் திறமைகளைக் கருத்திற் கொள்ளாமல், மருத்துவத் துறையிலோ, தொழில் நுட்பத் துறையிலோ, விஞ்ஞானத் துறையிலோ, சட்டத்துறையிலோ பலவந்தமாக அவர்களுடைய விருப்பத்திற்கெதிராகத் திணித்து, அவர்களுடைய வாழ்வைப் பாழ்படுத்தி விட்டனர். அவர்களது தான்தோன்றித் தனத்தால் சிறப்பாக உருவாக வேண்டிய எத்தனையோ கலைஞர்கள், இசைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், தலைவர்கள் அழிக்கப்பட்டனர். ஒரே துறையில் இருப்பவர்களிடையே வேறுபாடுகள் நிறைய உண்டு. கவிஞனாயினும் சரி, கலைஞனாயினும் சரி, ஓவியனாயினும் சரி, இசைஞனாயினும் சரி, ஒவ்வொருவனும் தனக்கே உரித்தான சிறப்பியல்புகளுடன் விளங்குகிறான். அவர்கள் வேறுபட்டு இருப்பதில்தானே அழகும் சிறப்பும் தங்கியிருக்கிறது. தமிழிசையில் எத்தனை ராகங்கள் உண்டு. அவை அனைத்தும் இனிமையும் அழகும் கொண்டவை. ஆனால் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. பூவுலகெங்கும் பூத்துக் குலுங்கும் மலர்கள் அனைத்தும் அழகு மிக்கவை. கண்ணைக் கவரும் அவ்வண்ண மலர்கள் உருவத்திலும், நிறத்திலும் தோற்றத்திலும் வேறுபட்டே இருக்கின்றன.

நம் செல்வக் குழந்தைகளை நம்மைப்போல் வளர்க்க முற்படுவது ஒரு மரத்தின் நிழலிலே இன்னொரு மரத்தை வளர்ப்பதற்கு ஒத்திருக்கும். ஒரு மர நிழலிலே நாட்டப்பட்ட இன்னொரு மரம் ஆதவனின் வெளிச்சமின்றி நெடிய மரத்தால் நசுக்கப்பட்டு வளர்ச்சி குன்றிவிடும். ஆனால் திறந்த வெளியிலே பகலவனின் ஒளிபெற்று சுதந்திரமாக வானம் பார்த்துக் காற்று வாங்கி, மழை நீருண்டு வாழும் மரம் செழித்து வளரும். அதுபோன்றுதான் நம் ஆளுமை என்ற நிழலால் நசுக்கப்படாமல் சுதந்திரம் என்ற ஒளி பெற்று நம் உதவியென்ற நீர் பருகி வளர்ந்தார்களென்றால் வான-ளாவ உயர்ந்து பெரிய மனிதர்களாக விளங்குவர். நம் தமிழ்ச் சமூகத்தில் தனிப்பெரும் தலைவர்கள், ஆற்றல்மிக்க கலைஞர்கள், ஒப்பற்ற ஓவியர்கள், ஈடு இணையற்ற இசைஞர்கள், அகிலம் காணாத அறிஞர்கள், எழுச்சிதரும் எழுத்தாளர்கள் என்று பலர் தோன்றி அதை அழகுபடுத்துவர். அப்பப்பா! நம் குழந்தைகளின் வாழ்வில் நாம் கொண்டிருக்கும் பொறுப்போ எத்தகையது!!அன்புத் தமிழ்ப் பெற்றோரே நாளைய ஈழம் உங்களையே நம்பியிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம் ஈன்ற முத்துக்கள்
தமிழ் ஈழச் சொத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம் கண்ட மக்களோ!
# மதம் கொண்ட மாக்களோ!

**ஈழம் ஈன்ற முத்துக்களே,**

மேல்நாடுகளுக்கு வந்ததும் நம்மவரில் பலர் நம் முன்னோர்கள் தந்து சென்ற பெரும் சொத்தாம் இறை உணர்வை இழந்து வாழ்வதைப் பார்க்கும்போது நெஞ்சம் கொஞ்சம் அஞ்சுகிறது. கடவுளைச் சுற்றிக் கட்டி எழுப்பப்பட்ட கலாச்சாரம் தமிழ்க் கலாச்சாரம். ஆலயத்தைச் சுற்றி ஆண்டவனைச் சுற்றி வாழ்ந்து வளர்ந்தது தமிழ்ச் சமூகம். ஆதியும் அந்தமும் இல்லாதவனிலே அனைத்தையும் தொடங்கி அனைத்தையும் முடித்தனர் தமிழ்ப்பெருங்குடி மக்கள். தமிழ்க்கலைகள் எல்லாம் இறைவன் திருப்புகழ் பாடின. முத்தமிழும் ஆண்டவனைச் சுற்றியே வளர்ந்தது. காஞ்சிக் கைலாசநாதர் கோவில், சித்தன்ன வாசல் குகைக்கோவில் தஞ்சைப் பெருங்கோவில், இன்னும் தமிழகமெங்கும் வானளாவ எழுந்து நிற்கும் ஆயிரமாயிரம் கோவில்களும், சிற்பங்களும், ஓவியங்களும் அதற்குச் சான்று பகரும். இந்தியாவில் மிகச் சிறந்த கோவில் என்று பிரித்தானிய நாட்டின் கலைக்களஞ்சிய நூல் போற்றும் பெருமை பெற்றது தஞ்சைப் பெருங்கோவில். உலகில் கோவில் கட்டும் கலையில் ஒப்பற்றவர்கள் தமிழ் மக்களே என்று அப்பெரும் நூலின் புகழுரை யைப்பெற்றது தமிழினம். "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொல்லி வளர்க்கப்பட்டது தமிழினமல்லவா? "கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்ற பொய்யா மொழிப் புலவன் வள்ளுவனின் வாக்கு நமக்கு எதை உணர்த்துகிறது? சிந்தித்துப்பார்! வாழ்வில் எவ்வளவுதான் உயர்ந்தாலும் கடவுளை அடித்தளமாகக் கொண்டிராத வாழ்க்கை மணலின் மேல் கட்டிய வீட்டுக்கு ஒப்பாகும். அது பொருளற்றுப் பயனற்றுப் போய்விடும்; நிலைநிற்காது அழிந்து படும். இன்று நாம் புகுந்த நாடுகளில் வாழும் மக்கள் பலருள் ஒழுக்க நெறி குன்றி, கட்டுப்பாட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலை தோன்றி பொருளாதாரத்தில் வளர்ந்தாலும், அருளாதாரத்தில் தரம் குறைந்து விளங்குவதற்குக் காரணம் இறை உணர்வை இழந்ததேயாகும். திருமண வாழ்வு குலைந்து, குடும்பங்கள் சிதைந்து போனதற்கும் காரணம் இறைவனை அங்கு குடியிருக்கத் தவறியதே. இவ்வுண்மையை கவிதை நடையிலே சொன்னால்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருளான வாழ்வுதனை பொருளானதாக வாழ
அருள் வாழ்வு வேண்டுமன்றோ - மனிதா!
இறைவன் துணைவனடா"

அருள் வாழ்வை நாம் வாழ, ஆன்மீகம் தழைக்க உதவுவது மதங்கள். ஒவ்வொரு மதமும் மற்றதைப்போன்று மக்களை மீட்டு ஆண்டவனிடம் அழைத்துச் செல்லும் வல்லமை கொண்டது. மதங்கள் அனைத்தும் தம் மக்கள் நலன் கருதி ஆண்டவனால் அவர்களுக்கு அருளப்பட்டவை திறந்த மனத்துடன் பரந்து விரிந்த உள்ளத்துடன் கூர்ந்து நோக்கினால் பொதுவாக மதங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல என்ற உண்மை தெளிவாகப் புலப்படும். மதங்கள் எல்லாம் ஒரே அடிப்படை உண்மைகளையே படிப்பிக்கின்றன. அன்பு, அமைதி, கருணை, பரிவு, நேர்மை, தூய்மை போன்றவை அனைத்திற்கும் பொதுவானவை அல்லவா. உண்மை ஒன்றுதான். ஆனால் உண்மையை மனித மனம் வெவ்வேறு நிலைகளிலிருந்தோ, கோணங்களிலிருந்தோ நோக்கும் போது வெவ்வேறு விதமாகத் தோற்றமளிக்கலாம். நம் அகந்தையைக் கொன்றபின் தாழ்ச்சி நிறை உள்ளத்துடன் சிந்தித்தால் உண்மையைச் சந்திக்கலாம்.

**இந்து மதத்தில் யோகிகளும் ஞானிகளும் ஆன்மீகத்தில் இராட்சதர்களாக விளங்கி அரிய உண்மைகளை அன்றும் ஏன் இன்றும் அளித்துக்கொண்டே இருக்கின்றனர். அவ்வுண்மைகள் உலகமனைத்துக்கும் சொந்தமானவை. புத்தர் போதித்த தத்துவங்கள், நபி நாயகம் வழங்கிய நல்வழிகள் அனைத்தும் உலக மக்களின் சொத்து. "நானே வாழ்வு, நானே வழி, நானே வாய்மை" என்று கூறி அன்பையே போதித்து, அந்த அன்பாலே உள்ளங்களைக் கொள்ளை கொண்டாரே கிறீஸ்து; அவரது அரிய போதனைகள் உலகனைத்திற்கும் உரியவை. இவர்களும் வேறு இன்னும் எத்தனையோ ஆன்மீக வழிகாட்டிகளும் தந்த போதனைகள் இறைதாகம் கொண்ட இதயங்கள் அனைத்திற்கும் உரித்தானவை.**

**ஒரு சிலர் தமது மறையை ஏனைய மதங்கள் விழுங்கிவிடும். அன்றேல் அழித்துவிடுமென்று அஞ்சி அதைக் காக்கவேண்டுமென்று முழுமூச்சாய் உழைக்கின்றனர். அது தேவையற்றது. மெய் மறைகளை யாரும் அழித்துவிட முடியாது. அதைக் காப்பதற்குக் காவலர்கள் தேவையில்லை. மனிதனைக் காத்து ஈடேற்றுவதற்கே மதங்களன்றி பலமற்ற மனிதர்களால் காப்பாற்றப்பட வேண்டியவைகளல்ல மதங்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனின் இறை அனுபவமும் தனித்துவம் வாய்ந்தது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் ஒருதனிப்படைப்பு. எனவே மனிதர்கள் அனைவரும் இறைவனைப் பற்றிய ஒரே விதமான அனுபவத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள். பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர்களைப் பாருங்கள். ஒருவர் கடவுளை இளந்தென்றலிலும், மற்றவர் புயற்காற்றிலும் இன்னொருவர் இடிமுழக்கத்திலும், வேறொருவர் தாயின் கனிவுமிக்க அன்பிலும் கண்டனர். நாம் கொண்டிருக்கும் வேற்றுமையிலும் கண்ட ஒற்றுமை இறையனுபவமே எனவே மதச்சண்டைகள் நமக்குள் வேண்டாம். அதைத்தான் யேசுபெருமானும் "உங்களுக்கு எதிராக இல்லாதவன் உங்களோடு இருக்கிறான்" என்ற வார்த்தைகளால் உணர்த்தினார். நமது இறையனுபவத்தை ஒரு உதாரணத்தால் இங்கு விளக்க விரும்புகிறேன். நம் எல்லோருக்கும் விடாய் எடுக்கிறது. பலர் தண்ணீர் அருந்துகிறோம். சிலர் பழச்சாறு பருகுகின்றனர். வேறுசிலர் குளிர்பானம் குடிக்கின்றனர். இன்னும் சிலர் தேநீர் அருந்துகின்றனர். ஒரு சிலர் பால் அருந்துகின்றனர். இது எல்லோரும் தனித்துவம் மிக்கவர்கள் என்பதை எண்பிக்கிறது. இவர்கள் அனைவரிடமும் ஏன் அவை-களை அருந்தினீர்கள் என்ற கேள்வியை எழுப்பினால், தாகம் தணிப்பதற்கே என்ற பதில் கிடைக்கும். இறைதாகமும் அப்படிப்பட்டதே. இதைத் தணிப்பதற்காக ஆன்மா ஒவ்வென்றும் தான் விரும்பும் வழியைத் தேடுகின்றது. ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனையே வெவ்வேறு மறைவழியில் நாடுகிறது. அந்த ஒற்றுமையே நம் எல்லோரையும் இணைப்பதற்குப் போதுமானது. இறைவனைவிட வேறு எந்தச் சக்தி நம்மனைவரையும் இணைத்துவிட முடியும்? ஒற்றுமை என்பது அனைவரும் ஒரே விதத்தில் செயல்படுவதில் இல்லை. ஆனால், ஒரே குறிக்கோளுடன் செயல்படுவதிலேதான் அடங்கி உள்ளது. அதைவிட்டு தண்ணீர் அருந்துபவன் தண்ணீர் குடிப்பதே நன்று என்று வாதிட்டு தன் வழிக்கு அனைவரையும் கொண்டுவர முயலக்கூடாது. அது பிளவை ஏற்படுத்தி அமைதியைக் கலைத்து ஒற்றுமையை குலைத்துவிடும். அதனால்தான் சுவாமி விவேகானந்தா "துணிந்த நேர்மைமிக்க நெஞ்சுடன் வாழ். இறைவனுடன் இணைவதற்கு பக்தியுடன் எந்த வழியையும், எந்த மறையையும் பின்பற்று" என்று அறிவுரை கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் இன்னோர் இடத்தில்; "கடவுளே அனைவர்க்கும் உதவுகிறார். ....மனித மீட்புக்கு நீயோ, நானோ எந்தச் சமூகமோ அல்ல பொறுப்பாக இருப்பது. கடவுளைத் தாம் நம்புகிறோம் என்று கூறிக்கொண்டு, அதே நேரத்தில் அக்கடவுள் ஒரு குறிப்பிட்ட குழுவின் கரத்தில் மட்டும் உண்மைகள் அனைத்தையும் வைத்து அவர்களை எஞ்சிய மானிடரின் காவலர்களாக வைத்திருப்பார் என எப்படி என்னமுடியும்" என்று வினவுகிறார்.

நாம் பின்பற்றும் மறையைப் பற்றிப் பெருமைப்படுவது தவறல்ல. ஆனால் அதை மற்றவர்கள்மேல் திணிப்பதே தவறு என்று கூறுகிறேன். நியூ யோர்க் நகரின் மான்ஹற்றன் தீவு மிகவும் அழகானது. வானளாவ எழுந்து நின்று ஒளிசிந்தும் கட்டிடங்கள் அதற்கு அழகு சேர்க்கும். அங்கு செல்வதற்குச் சிலர் பாரிய, அழகிய தொழில் நுட்பத்துறையைப் பாராட்டி மனிதன் அணிவித்த மாலைகள்போல் தொங்கும் பாலங்களைப் பயன்படுத்துவர். வேறு சிலர் ஆறுகளின் கீழே ஓடும் சுரங்கப் பாதைகளைத் தேர்ந்தெடுப்பர். இன்னும் சிலர் தங்கள் உந்துவண்டிகளை படகுத்துறைகளில் விட்டுவிட்டு, படகெடுத்துச் செல்வர். அந்நகருக்குச் செல்வது முக்கியமே தவிர, எவ்வழியைக் கையாண்டால்தான் என்ன? அப்படியே இறைவனை நாம் அனைவரும் போய் அடைவதே நம்மை இணைக்கவேண்டும். எவரும் எந்த வழியையும் எடுக்கட்டுமே!

அன்புத் தமிழ் நெஞ்சமே, இவ்விடத்தில் ஒரு சுவையான மிகவும் எழுச்சியூட்டும் நிகழ்ச்சி ஒன்றை, உனது சிந்தனைக்கு விருந்தாக எழுத விழைகிறேன். இந்தியாவில் மதத்தின் பெயரால் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்துக்கொண்டிருந்த காலம். மகாத்மாகாந்தி மனமுடைந்து தனது உண்ணாநோன்பை மேற்கொண்டார். அவர் உடல் தளர்ந்து போயிருந்த வேளை, ஓர் இந்து மனிதன் அவரிடம் சென்று தான் ஒரு முஸ்லிம் குழந்தையின் தலையைக் கல்லிலே மோதிக் கொன்றுவிட்ட பாவச் செயலைக் கண்ணீர்விட்டுச் சொன்னான். அக்கொடூரச் செயலுக்கு இறைவனிடம் எப்படி மன்னிப்பைப் பெறமுடியும் என்றும் கேட்டான். அதற்குவழி தனக்குத் தெரியும் என்றுவிட்டு, காந்தி சொன்னார்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ போய் அனாதையாக இருக்கும் ஒரு முஸ்லிம்பிள்ளை ஒன்றை எடுத்து வளர்க்க வேண்டும். நீ இந்துவாக வாழ்ந்து கொண்டு அப்பிள்ளையை நல்ல ஒரு முஸ்லிமாக வளர். அப்போது இறைவனின் மன்னிப்பு உனக்குக் கிட்டும்". ஆம் மகாத்மா காந்தி எவ்வளவு மதப்பற்று உடையவராக விளங்கினார் என்றால் அனைத்து மதங்களையும் மதித்து அனைத்திலும் இறைவனைக் கண்டு அவனோடு இணைந்த உத்தமர். சுவாமி விவேகானந்தர் இன்னோர் இடத்தில் "எவருடைய விசுவாசத்தையும் குழப்பாதே. அவனிடமிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையை அழிக்காதே. அவனிடமிருப்பதைவிட நல்லதொன்றைக் கொடுக்க முடிந்தால் அவனிடமிருப்பதை அழித்துவிடாது அவனிருக்குமிடத்தில் அவனுக்குப் பின்னே நின்று உந்து சக்திபோல இன்னும் மேலே அவனைத் தள்ளிவிடு" என்கிறார். அனைத்து மறைகளின் ஒற்றுமையை எத்தனை இறையனுபவம் கொண்ட இந்துமதப் பெரியார்கள் எடுத்தோதினர். அவர்களில் ஸ்ரீ இராமக்கிருஷ்ணா வும் ஒருவர். மதங்கள் அல்ல முக்கியம் மனிதரின் ஆன்மீகமே அதைவிட முக்கியம் என்பதை வலியுறுத்தியவர்.

அம்மாச்சி என்று அன்புடன் அழைக்கப்படுபவர் இன்னொருவர். இன்றும் மனித உடலில் நம்மிடையே நடமாடும் தெய்வீக ஒளி. தன் ஒளி சிந்தும் புன்னகையால் இறையன்னை யிடம் நம் அனைவரையும் இழுத்துச் செல்லும் உத்தமி. தன் பாசந்தோய்ந்த அரவணைப்பால் நம் இறையன்னையின் அன்பையும் அருளையும் வழங்கும் தெய்வத்திருமகள். அவள் மதத்தைப் பற்றிக் கூறும் கருத்து மிகவும் பொருள் பொதிந்தது. மதம் என்பது மனிதனைக் கடவுளிடம் சுமந்து செல்லும் ஓர் படகு. படகு கடவுள் என்ற இறங்குதுறையை அடைந்ததும் அதையே அணைத்து நிற்காமல் இறைவன் என்ற அந்த அன்னையின் அன்புக் கரங்களுள் அவளது மடியில் பாய்ந்துவிட வேண்டும். எவ்வளவு அழகான விளக்கம்! மதமல்ல நமது ஆன்மீகம். இறைவனோடு நம் ஆன்மா இரண்டறக் கலப்பது அதுவே முக்கியமானது. நான்காவது வகுப்பைத் தாண்டாத அம்மாச்சியின் காலடியில் அமர்ந்து எத்தனை மேல்நாட்டுக் கலாநிதிகள் கடவுளைக் காணத் தவங்கிடக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதா அமிர்தானந்தமாயி "அம்மாச்சி"

தன் காலின் கீழ்க்கிடக்கும் மணலையே கணக்கிட முடியாத மனிதன் அனைத்தையும் கடந்தவனை முழுதாக உணர்ந்தவன் போல் அவனைப்பற்றிய அறிவிலே உரிமைகோரி வடிவமே இல்லாத ஆதியும் அந்தமும் அற்றவனை விளக்க விழைவது மடமையல்லவா? அனைத்தையும் கடந்த நித்தியமாயுள்ள சத்தியப்பொருளை நம் மனித புத்தியால் அளந்துவிடத்தான் முடியுமா? எத்தனை கலாநிதிப்பட்டங்களை இறையறிவில் பெற்றிருந்தாலென்ன, கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பதை மறந்து போகக்கூடாது. சின்னக்கரண்டி கொண்டு கடலை அளப்பது அதைவிட எளிதல்லவா? கடவுளை மனிதன் தன் பட்டறிவால் கண்டுணர முடியுமே தவிர தனது ஆன்மீக அனுபவத்தால் அறிந்து கொள்ள முடியுமே தவிர நமது புத்தியால் அளப்பது முடியாத செயல். இறைவனை வார்த்தையில் வடிப்பது அதைவிட முடியாததொன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து வேதமோ, கிறிஸ்தவ மறையோ, புத்த மதமோ, இஸ்லாமிய பாதையோ அவைகள் அனைத்தும், ஆன்மா இறைவனுடன் தனக்குள்ள ஒருமைப்பாட்டை தன் பட்டறிவால் உணர **(Self Realization)** உதவுவதையே தம் பணியாகக் கொண்டிருக்க வேண்டும். கங்கை நதி பொங்கி வரும் வங்கநாடு, தங்கம் நிகர் மைந்தர்களைத் தந்த வீடு. அவர்களில் ஆன்மீகக் கவிஞன் ரவீந்திரநாத் தாகூர், ஸ்ரீ இராமக்கிருஷ்ணா, சுவாமி யோகானந்தா முதலியோர் அதில் அடங்குவர். சுவாமி யோகானந்தா ஒரு அறிவுக்கடல். ஆநேக நூல்களைப்படைத்து நம் சிந்தைக்கு வழிகாட்டுபவர். அவர் எழுதிய "ஒரு யோகியின் சுயசரிதை" என்ற நூல் **(The Autobiography of a Yogi)** மிகவும் புகழ் பெற்றது. அவர் எனது குரு. அவரை இவ்விடத்தில் இந்நூலைப் படிப்பவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமை அடைகிறேன். அவரின் படிப்பினைகளைத் தாங்கி ஒரு சில நூல்களை நான் படைக்கும் பேறு எனக்குக் கிடைக்குமென நான் நம்புகிறேன். நம் ஆன்மா இறைவனுடன் தனக்குள்ள ஒற்றுமை யைப் பட்டறிந்து கொள்வதே நமது தலையாய கடமை என உணர்த்தியவர். அவரது வார்த்தைகளையும் நம் கிறீஸ்து பெருமானின் வார்த்தைகளை ஏந்திவருவது நாம் கீழே காணும் பாடல்.

"நீ யாரோ நான் யாரோ என்ற கதை முடிந்ததையா
நீ வேறு நான் வேறு என்ற எண்ணம் மடிந்ததையா"

நானே நீயாக
நீயே நானாக
ஒன்றாய் விளங்குவதைக்
கண்டேன் பராபரமே

நீ மலர் என்றால் நான், அதன் இதழாவேனே
நீ கடல் என்றால் நான், அதன் அலையாவேனே
நீ ஒளி என்றால் நான், அதன் கதிராவேனே
நீ இல்லை என்றால் நான், என்னதான் ஆவேனோ.

நீ மரம் என்றால் நான், அதன் கிளையாவேனே
நீ உடல் என்றால் நான், அதன் உறுப்பாவேனே
நீ நதி என்றால் நீர்க், குமிழியொன்றாவேனே
நீ இல்லை என்றால் நான், என்னதான் ஆவேனோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் இந்த ஒற்றுமை யைப்பற்றிப் பேசும் போது நாம் மனித ஆன்மாவை இறைவனுக்குச் சரியொத்த தாக்குகின்றோம் என எண்ணலாம். அது தவறு. அதற்கு என் குருநாதனே விளக்கம் தருகிறார். அலை கடலில் தவழுகிறது. கடலோடு ஒன்று பட்டது. நாம் அலைகள், கடவுளே அந்தக் கடல். அலைகள் அற்றும் கடல் விளங்கும். ஆனால் கடல் அற்று அலைகள் விளங்க முடியாதே. ஓடும் நதியிலே ஊர்கிறன நீர்க் குமிழிகள். நதியோடு ஒன்று பட்டவை அந்நீர்க் குமிழிகள். நாம் தான் நீர்க் குமிழிகள். கடவுளே அந்த நதி. நீர்க் குமிழிகள் இன்றி நதி விளங்கலாம். நதியின்றி நீர்க்குமிழி மின்னி நகர முடியாதே.



என் குருநாதன் சுவாமி. யோகானந்தா

"நானே திராட்சைச் செடி நீங்கள் அதன் கிளைகள்" என்றார் கிறீஸ்து. கிளைகளின்றி மரம் வாழும். ஆனால் மரம் இன்றி கிளைகள் வாழமுடியாதே. அதனால்தான் கடவுளுடன் ஒன்றுபடாத ஆன்மா இறந்துபடும் என்கிறார் கிறீஸ்து பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனை தன் பட்டறிவால் உணர்ந்த ஆன்மா அவனோடு கலந்து விடுமேயன்றி அவ்வனுபவத்தை வார்த்தைகளில் விளக்கிக் கொண்டிராது. சுவாமி சச்சிதானந்தா இதை அழகாக விளக்குகிறார். யேசுவைப்போல உவமைகளால் உண்மைகளை விளக்குவதில் கைதேர்ந்தவர். "கடலின் ஆழத்தை அறிந்து கொள்ள அதனுள் குதித்த ஓர் நீர்த்துளி கடலுடன் இரண்டறக் கலந்துவிடுமே தவிர திரும்பி வந்து அதைப் பற்றிய கதையைச் சொல்லாது" என்கிறார் அவர். என்று, கடவுளைப்பற்றி மனிதன் பேசத்தொடங்குகின்றானோ அன்றே சமயச் சண்டைகளும், வீண்வாதங்களும், பிரிவினைகளும் பிறந்தன.

இறைவனுடன் தனது ஒருமைப்பாட்டை உணர்ந்த ஆன்மா அனைவருடனும் ஏன் படைப்பு அனைத்தோடும் தனது ஒருமைப் பாட்டை உணர்ந்து கொள்ளும். மற்றவர்களுடன் நமக்கிருக்கும் ஒருமைப்பாட்டை நம் கண்ணிலிருந்து மறைப்பது ஆன்மீக இருள். இது அகற்றப்பட வேண்டும். இந்த உண்மையை சுவாமி சச்சிதானந்தா இன்னொரு உவமையால் விளக்குகிறார். "ஒரு ரப்பர் குமிழியினுள் இருக்கும் காற்றும் அதற்கு வெளியே உள்ள காற்றும் ஒன்றுதான். "நான்" என்ற அந்தத் தனித்துவ உணர்வுதான் நம்மைச் சுற்றியிருக்கும் ரப்பர் குமிழி. அது உடைக்கப்படும் போது நாம் படைப்புக்கள் அனைத்தோடும் இணைந்து ஒருமித்து விடுகிறோம்". என்ன அருமையான விளக்கம்!

தமிழ்ப் பெருங்குடிமக்களுக்கு இவ்விடத்தில் சுவாமி சச்சிதானந்தாவைப்பற்றி இங்கு ஒருசில வார்த்தைகள் கூறுவது மிகவும் சாலப் பொருந்தும். இவர் தமிழ் நாடு பெற்றெடுத்த தவப் புதல்வன். ஈழ மண்ணும் பல ஆண்டுகளுக்கு முன் அவர் திருப்பணியால் புனித மடைந்தது. இன்று உலகம் போற்றும் இறைவனின் மனிதனாக விளங்கும் இவர் அமெரிக்காவில் வேர்ஜீனியா மாநிலத்தில் யோகவில் என்ற மலைசூழ்ந்த சொர்க்க பூமியில் சச்சிதானந்தா ஆச்சிரமம் ஒன்று அமைத்து, தனது தியான வழியிலே எத்தனையோ உள்ளங்களுக்கு ஒளியூட்டி வழிகாட்டி நிற்கின்றார். இவர் ஓர் புகழ்பெற்ற பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவார். தாமரை மலரின் உருவிலே அவர் கட்டி எழுப்பிய உலக மதங்கள் அனைத்திற்கும் பொதுவான எழில்மிகு ஆலயம் "பாதைகள் பல உண்மை ஒன்றே" என்ற அவரது விருதுவாக்குக்கு ஒப்ப நெஞ்சை நெகிழ வைக்கும் விதத்திலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை அழகு பொங்க, இறை அருள் தங்க எழுந்து நின்று இறைபுகழ் பாடுகிறது. ஒவ்வொரு தமிழனும், எந்த மறையைத் தழுவியவனாக இருப்பினும், அப்புனிதத் தலத்தை தரிசிப்பது ஆன்மாவுக்கு நன்மை பயக்கும்.

**என் அன்புத் தமிழ்ச் செல்வங்களே,**

அண்மையில் ஒரு இளம் தமிழ்க் குடும்பத்தைக் காணும் பேறு எனக்குக் கிடைத்தது. கணவர் ஒரு கிறீஸ்தவர் மனைவியோ இந்து மதத்தைத் தழுவியவர். இருவரும் மதப்பற்று மிக்கவர்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தம்பிள்ளைகளோடு சைவக் கோவிலுக்குச் சென்று வணங்குவர். ஞாயிற்றுக் கிழமைகளில் அனைவரும் கிறீஸ்தவ கோவிலுக்குச் சென்று வழிபடுவர். அதை அறிந்தபோது அவர்கள் மட்டில் பெருமதிப்பும், பெருமிதமும் என் நெஞ்சில் உருவெடுத்தது. தமது மதக்கொள்கைகளை ஒருவர் மற்றவர்மேல் திணியாமல் ஒருவர் கருத்தை மற்றவர் மதித்து அந்த இறைவனில் இணைந்து அன்பில் பிணைந்து அக்குடும்பம் வாழ்வதைப் பார்க்கும்போது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. இது ஒருவர் மட்டில் மற்றவருக்கிருக்கும் பேரன்பையும் பெருமதிப்பையும் காட்டுவதேயல்லாமல் கொள்கைப் பற்றற்ற போக்கை அன்று. கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் என்று தம்மைக் கணிக்கும் சிலர் மத வெறியின் காரணமாக தம் கொள்கை களை பிறர்மேல் திணிப்பதைக் காணும்போது எவ்வளவு வேதனையடைகிறோம். கொள்கைப் பிடிப்பென்றால் அக்கொள் கைக் கேற்பதானும் வாழ வேண்டும் அத்துடன் பிறரையும் தங்கள் கொள்கைக்கேற்ப வாழ விடவேண்டும். அதுவே கொள்கைப்பிடிப்புக்குக் கொடி பிடிக்கும் முறை, குரல் கொடுக்கும் விதம். இது ஒரு வாழ்க்கைக் கலை. பரந்து விரிந்த உள்ளங்களே அக்கலையைப் பயில முடியும்.

எனவே அன்புத் தமிழ் நெஞ்சமே,

**நாம் மதம் கண்ட மக்கள். மதம் கொண்ட மாக்களாக விளங்காமல் அதாவது மதவெறி கொண்ட மிருகங்களாக வாழாது, மதத்தால் நாம் இனத்தைப் பிளவு படுத்தாமல் தமிழ்த்தாயின் மக்களாக ஒன்றுபட்டு இறைவனில் வாழ்வோம்.**

அன்பர்களே, நம் ஆன்மீகம் தழைக்க, அருள் வாழ்வு செழிக்க ஈகையறம் மிக மிகத் தேவையானது. அதைப்பற்றிய ஒருசில கருத்துக்களை இவ்விடத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இவை நம்மவரின் ஆன்மீக, சமூக வாழ்விற்கு மிகவும் உறுதுணையாக நிற்கக் கூடியவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேதங்கள்

என்ற பெயரில்

பேதங்கள்

நமக்குள்

வேண்டாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்து வாழ், கெடுத்து வாழாதே.

**தமிழ்த் தாயின் செல்வங்களே,**

இவ்வுலகம் என்ற ஆரங்கிலே ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு தனிப்பட்ட பாத்திரம் ஏற்று ஆண்டவனே அரங்கேற்றும் நாடகத்திலே நம் பங்களிப்பைக் கொடுக்க நாம் ஒவ்வொருவரும் அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் எதுவும் தற்செயலாக நடந்துவிடுவதில்லை. அங்கு அரங்கேறும் ஒவ்வொரு நிகழ்வும், அது பெரிதோ சிறிதோ ஆண்டவன் தீட்டிய அந்தப் பாரிய திட்டத்தினுள் அடங்கும். தமிழீழத்தில் நமது இனம் சொல்லற்கரிய சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்து அழுகையையும் ஆறாத்துயரையும் அணைத்து நிற்கும் இவ்வேளையில் நாம் புலம் பெயர்ந்த தமிழராக நமது உடன்பிறப்புகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஈழ விடுதலை என்ற ஆண்டவன் அமைத்த நாடகத்தில் வெறும் பார்வையாளர்களாக அன்று, அங்கு பங்கேற்று நடிக்கும் நடிகர்களாக வந்தோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். எந் நோக்கத்துடன் இங்கு நாம் அனுப்பப்பட்டோமோ அதை நிறைவேற்றுவதே நம் வாழ்வின் குறிக்கோளாக விளங்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் இறைவனின் திருவுளத்தை அறிந்து தனக்கு நேரிடும் ஒவ்வொரு நிகழ்விலும், தான் நாளாந்தம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனிலும், தான் பார்த்து மகிழும் பரமனின் ஒவ்வொரு படைப்பிலும், அவனைக்கண்டு அவனது சேவைக்குத் தன்னைக் கையளித்தலிலேயே வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது. ஈழத்திலே துன்புறும் நம்மவரில் வெறும் தமிழர்களை மட்டும் காணாது இறைவனையே அவர்களில் சந்தித்து அவர்களிலே ஆண்டவனுக்குத் தொண்டாற்றுவதே நமது தலையாய கடமை. அதையே சுவாமி விவேகானந்தா “மக்கள் தொண்டே இறைத்தொண்டு” என்று அழகாக விளக்கினார். தன்னில் இறைவனைக் கண்டு அவனுடன் ஒன்றுபட்ட இதயம் ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரிலும் அனைத்திலும் அவனைக் கண்டு வழிபடும். இயற்கையின் வனப்பிலே தன் கடவுளின் கை வண்ணத்தைக் காணும். தவழ்ந்துவரும் மேகங்களில், தாவிவரும் கடல் அலையில், ஆடிவரும் தென்றலதில், பாடிவரும் அருவியினில் மணங்கமழும் நறுமலரில், மனங்கவரும் மழலைதனில், கண்கவரும் விண்மீன்களில், பண்ணிசைக்கும் வண்டுகளில் பரமனைக்கண்டு பூரித்து "ஆண்டவனே உன் பெருமையும், மகிமையும் என்ன" என வியந்து அவன் புகழ்பாடி நிற்கும். ஏழையின் சிரிப்பிலே, சிறுமை செய்யும் வறுமையின் காரணமாக வாடி நிற்போரிலே, ஒட்டி உலர்ந்த கன்னங்களோடு, குழிவிழுந்த கண்களுடன், உட்புகுந்த வயிற்றுடனும் காட்சிதரும் பசித்தோரிலே, நோயின் கொடுமையிலே பஞ்சடைந்த கண்களுடன் வரண்ட நாவுடனும் நலிந்து நிற்கும் மனிதரிலே பரமனைக் காணும். ஒரு கவிஞனின் வார்த்தையில் சொன்னால்:

**"பின்னடைந்து போனவரின் புண்ணடைந்த உள்ளமதில்**
**என் இறைவன் வாழக் கண்டேன் - மகளே என்னென்று**
**சொல்வேனடி**
**வறுமைக்கு உணவாகிச் சிறுமைப்பட்டவர்கள்**
**இறைவனின் தோற்றமடி - மகளே நம் சேவை தேவையடி."**

பிறரில் இறைவனுக்குத் தொண்டு செய்யும்போது வாழ்க்கை வழிபாடாக மாறுகிறது. படைப்பனைத்திலும் பரமனைக் கண்ட புனிதன் தாயுமானவரைப் பாருங்கள். பூசைக்குப் பூப்பறிக்கச் செல்லுகிறார். அப்பூவிலே பரமனைக்கண்டு அப்பூவைப் பறிக்க மனமின்றி **"பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப் பனிமலர்**
**பறிக்க மனமும் நண்ணேன்"**
எனக்கூறித் திரும்பி விடுகிறார். ஒரு புது வழிபாட்டைத் தொடங்குகின்றார். "நெஞ்சமே கோவில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர் பூசை செய்ய வாராய் பராபரமே" என வேண்டுகிறார். தான் பார்த்த மலரில் மட்டுமன்று நடமாடும் மனிதரிலும் படைப்புக்கள் அனைத்திலும் பரமனைக் கண்டுருகினார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார். நோயினால் வருந்திப் பசியினால் இளைத்துப் போய்விட்ட மானிடப்பிறவிகளைக் கண்டபோதெல்லாம் கலங்கினார். கிறிஸ்தவ மறைநூல் கூறுவதென்ன? "தான் கண்ணால் காணும் மனிதனை அன்புசெய்யாது காணாத கடவுளை அன்பு செய்கிறேன் என்று ஒருவன் சொல்லுவானாகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பொய்யன்" என்பதே. எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகள் இவை! ஒருவனது வாழ்வின் முடிவிலே அவன் பெறும் தீர்ப்பும், மனிதனில் இறைவனைக் கண்டு அவனுக்காற்றும் சேவையிலேயே அடங்கும் என்கிறார் கிறீஸ்து பெருமான். "இச் சின்னஞ் சிறியோருக்குச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்றார் அவர்.

நம்மில் பலர் கோவில்களுக்கு அள்ளிக்கொடுக்கிறோம். ஏழைகளுக்குக் கிள்ளியும் கொடுப்பதில்லை. மணிக்கணக்காக கோவில்களில் நிற்கிறோம். மக்கள் சேவைக்கென்று ஒருசில மணித்துளிகள் கூடச் செலவிடுவதில்லை. கடவுளின் வார்த்தைக்கேற்ப வாழவேண்டுமேயன்றி காசோ, பொன்னோ கொடுத்து இறையருளைப் பெற முயல்வது தவறு. கைலஞ்சம் வாங்கிக் கடவுளுக்குப் பழக்கமில்லை. நமக்குள்ளதெல்லாம் தேவையுற்றோருக்குப் பகிர்ந்தளிக்க அவன் நமக்கு அருளியதே. இக்கருத்தை வள்ளுவனார் பின்வரும் குறளிலே விளக்குகிறார்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்த வற்றுள் எல்லாம் தலை"**

பசயால் வாடும் உயிர்களோடு உண் உணவைப் பகிர்ந்து உண். அதுவே அறங்களிலெல்லாம் உயர்ந்தது என்கிறார் அவர். நாலடியார் கூறுவதைக் கேளுங்கள்:

**"இழைத்த நாள் எல்லை இகவா, பிழைத்து ஒரீஇக்**
**கூற்றம் குதித்து உய்ந்தார் - ஈங்கு இல்லை - ஆற்றப்**
**பெரும் பொருள் வைத்தீர்! - வழங்குமின் நாளைத்**
**தழீஇம் தழீஇம் தண்ணம் படும்"**

குறிக்கப்பட்ட நாட்களுக்குமேல் எவரும் இவ்வுலகில் வாழ முடியாது. நாளை "தழீஇம், தழீஇம்" எனச் சாப்பறை ஒலிப்பதற்கு முன் பிறரோடு பகிர்ந்து வாழ்வதன் மூலம் அறத்தைச் செய்து கொள்ளுங்கள் என்பது அதன் பொருள். மறுமையில் வான்வீடு எய்துவதற்கு ஈகையறம் மிகத் தேவை என்கிறார் திருமூலர் பல இடங்களில்


**"ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின**
**கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்**
**பிழிந்தன போலத் தம் பேரிடர் ஆக்கை**
**அழிந்தன கண்டும் அறம் அறி யாரோ?"**

என்கிறார் ஓரிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புத் தமிழினமே,

நம் நிறைவிலிருந்து கொடுப்பதை விட, நமக்கென்றிருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதே ஈகையறம். நாம் முல்லைக்கு வாழ்வளிக்கத் தேர்கொடுத்தவன் பரம்பரையில் வந்தவர்கள். இல்லையென்று வந்தோர்க்கு, இல்லை என்று சொல்வது இழுக்கு என்ற கொள்கை கொண்ட கொடை வள்ளல் வழி வந்தவர்கள். எடுப்பதிலன்று கொடுப்பதிலே உயர்வு கிட்டும், நமக்கு வான்வீடு எட்டும், ஈழம் வாழ் நம் உடன் பிறப்புகளுக்கு நல் வாழ்வு வந்தடையும் என்பதை உணர்ந்து சிறுதுளி பெருவெள்ளம் என்பதைச் சிந்தையிலிருத்திச் செயற்படுவோம்.




அமெரிக்க வேர்ஜீனியா மாநிலத்தில் அமைந்திருக்கும்
அனைத்து மத ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி இறக்காதோ! நீதி பிறக்காதோ!

**என் அன்புத் தமிழ் நெஞ்சங்களே,**

நம் மக்கள் பிளவுபட்டு நமது விடுதலைப் பயணம் சில பின்னடைவுகளைச் சந்தித்தற்கு முக்கிய காலாக அமைந்தது சாதியே. வாந்தி பேதி என்பவை போன்று நம் சமூகத்தில் நிலவும் ஒரு கெட்ட வியாதி சாதி என்பது. சாதி என்ற கொடுமைபற்றி இவ்விடத்தில் நாம் சிந்திப்பது மிகவும் சாலப் பொருந்தும். **ஒவ்வொரு மனிதனும் கடவுளால் சமத்துவத்துடன் படைக்கப்பட்டவன். சமத்துவம் என்பது அவனது அடிப்படை உரிமை. அது எவராலும் பறிக்கப்படவோ அன்றேல் மாற்றி அமைக்கப்படவோ முடியாதது.** கடவுளையே அவன் "அம்மையே அப்பா" என்ற அழைக்கும் உரிமையைக் கொண்டிருக்கையில் அவனைக் குறைந்தவன், தாழ்ந்தவன், தீண்டாதவன் என்று கருதுவது பொருளற்றது மட்டுமன்று மடமையும் கூட.

சாதிவெறி என்பது ஒரு மனிதனின் ஆளுமைக்குச் செய்யும் கொடுமை வார்த்தைகளில் அடங்காது. ஒரு மனிதனின் மாண்பை அழித்து அவனது சமத்துவம் என்ற பிறப்புரிமையை பறித்து ஆண்டவன் அளித்த மதிப்பையே கெடுக்கிறது. அவனது மனிதம் படுகொலை செய்யப்படுகின்றது. நம்மில் எத்தனை பேர் பிறர் நம்மைக் குறைந்தவர்களாகக் கருதி ஒதுக்கிவிடுவதை விரும்புவர்? பிறர் அப்படி நம்மை நடத்துவதை நாம் விரும்பாவிடில் இன்னொரு மனித உயிரை நாம் ஏன் அப்படி வதைக்க வேண்டும்! ஒருவனை வீழத்திவிட்டு அவன்மேல் ஏறி நிற்கும்போதுதான் நாம் பெரியவர்களாக, உயர்ந்தவர்களாகத் தோன்றுகின்றோமா? அது நமது வளர்ச்சியில் மன முதிர்ச்சியில் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி நிற்கின்றதே. இந்நிலையில் நம்மில் ஒருசிலர் தாம் குறிப்பட்ட ஒரு சாதியில் பிறந்துவிட்டால் அது தாம் ஈட்டிய அரும்பெரும் சாதனை என்பதுபோல் பெருமையடித்துக் கொள்ளுகின்றனர். ஒரு சாதியில் பிறந்து விட்டால் அது தாம் ஈட்டிய அரும்பெரும் சாதனை என்பதுபோல் பெருமையடித்துக் கொள்ளுகின்றனர். ஒரு குடும்பத்தில் நாம் பிறக்கும்போது அது நாம் கேட்டுப் பெற்றுக்கொண்டதோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றேல் கடின உழைப்பால் அடைந்து கொண்டதோ அன்று. எனவே பெருமைப்படுவதற்கோ வெட்கப்படுவதற்கோ காரணம் ஒன்றுகூடக் காணமுடியாது. **ஒருவனுடைய குலமல்ல குணநலன்களே அவனை என்றும் உயர்ந்தவனாகவோ தாழ்ந்தவனாகவோ ஆக்க வல்லது.** பண்புமிக்க உயர்ந்த மனிதர் காற்றிலே சரசரக்கும் காவோலைபோல் சாதிப்பெருமை பேசிக்கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக அடக்கமாக இருந்து அனைவரையும் மதித்து பண்போடும் பரிவோடும் நடந்து கொள்வார்கள். எனவே வாய்ச்சொல்லளவில் குலப்பெருமை பேசிக்கொண்டிராது பண்புநிறை செயலால் ஒளி சிந்தி நிற்பதே நம்மை உயர்ந்தவர்களாக்க ஒரே ஒரு வழி.

எனக்கு நன்கு தெரிந்த ஒருவர், நன்கு படித்துப் பட்டங்கள் பெற்றவர். நம்மவர் ஒருவரைச் சந்தித்தால் அவர் என்ன சாதி என்று அறிவதே அவரது முதல்பணி. எவரையும் சாதியில் குறைந்தவர் என்று கருதிவிட்டால் அவர்களுடன் பழகாது ஒதுங்கிக் கொள்வார். ஒருநாள் சிறிது விரக்தியடைந்தவர்போல் காணப்பட்டார். அவரது மனமுடிவுக்குக் காரணம் என்னவென்று கேட்டேன். தனது வேலைத்தளத்தில் தனக்கு வரவேண்டிய பதவி உயர்வு வெள்ளையன் ஒருவனுக்குக் கிடைத்ததால் தான் அடைந்த ஏமாற்றத்தை எடுத்துச் சொன்னார். நான் பரிதாபத்தோடு அவரைப் பார்த்துக்கொண்டிருந்தேன். சிறிது நேர மௌனத்தின் பின் "நம் தோல் கறுப்பாக இருப்பதால்தானே வேலைத் தளத்தில் நம்மை வெள்ளையர்கள் மதிப்பதுமில்லை, நம்முடன் அதிகம் பழகுவதுமில்லை. நமது நாட்டில் கஞ்சியைக் குடித்தாலும் ஒரு மன்னன் போலல்லவா வாழ்ந்தோம்" என்று சொல்லிச் சலித்துக்கொண்டார். சாதிவெறிபிடித்தோரை நான் காணும்போது கர்மவினை என்று ஒன்றிருப்பின் அத்தகையோர் மறுபிறவியில் அவ்வெறியின் விளைவுகளைப் பட்டே அனுபவிப்பர் என்று எண்ணுவதுண்டு. ஆனால் சிலருக்கு இப்பிறவியிலேயே அவ்வனுபவம் கிட்டுவதைக் கண்டு இனியாவது கண் திறக்குமா என்று சிந்திப்பதுண்டு. "நமது சமுதாயத்தில் சாதியை வைத்து மனிதனைக் கணிக்க இங்கோ நிறத்தை வைத்துக் கணிக்கிறார்கள். இரண்டும் மடமைதான். இங்கு இவர்களுக்கு வெள்ளைத் தோலாவது இருக்கிறது காரணம் கூற. நம்மவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வேறுபாடு உண்டு சாதிகொண்டு மனிதனைக் கணிக்க" என்றேன் நான். ஒரு பெருமூச்சைப் பதிலாகத் தந்தவர் மௌனத்தில் ஆழந்தார். அந்த மௌனம் அவர் சிந்தைக்கு ஒளியூட்டாதோ என்று ஏங்கியது என் உள்ளம்.

நான் இளைஞனாக இருந்தபோது முதியவர் ஒருவர் சொன்ன கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது. ஒருநாள் கையிலுள்ள ஐந்து விரல்களும் தமக்குள் யார் பெரியவன் என்று சொற்போர் ஒன்றில் ஈடுபட்டனவாம். பெருவிரல் ஏனைய விரல் களைப் பார்த்து "முதலாவது இடத்தில் இறைவன் என்னை வைத்து இவ்வளவு பலத்துடன் படைத்தது போதாதா நான் பெரியவனென்று எண்பிப்பதற்கு" என்று சொல்லிவிட்டு அமர்ந்ததாம். இரண்டாவதாக, சுட்டுவிரல் அனைவரையும் அமைதிப்படுத்திவிட்டு "கொஞ்சம் சிந்தியுங்கள் நான்தான் ஆணையிடுபவன் நான் "வா" என்றால் வருகிறான் "போ" என்றால் போகிறான். நானே உலகை ஆட்டிப் படைப்பவன். எனவே நான்தான் பெரியவன்" என்றதாம். அடுத்ததாக நடுவிரல் "தயவுசெய்து எல்லோரும் எழுந்து நில்லுங்கள். நம்மில் யார் உயரத்தில் கூடியவன், யார் சிறப்பு வாய்ந்த நடு இடத்தில் வைக்கப்பட்டிருப்பவன் என்பது உங்களுக்குப் புரியும்" என்றதாம். நான்காவது விரல் எழுந்து "நீங்கள் என்னதான் சொன்னாலும் மனிதர்கள் மதிப்பது என்னைத்தான். தங்கள் திருமண மோதிரத்தை என்னில்தானே அணிகின்றனர்" என்று வாதிட்டதாம். சின்னஞ் சிறிய குட்டிவிரல் எழுந்தபோது, ஏனைய விரல்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனவாம். அப்போ அந்தக் குட்டி விரல் "நீங்கள் சிரித்தது போதும் சற்று சிந்தியுங்கள். பக்தர்கள் கடவுளின் முன் கரம் குவித்து நிற்கும்போது கடவுளுக்கு அண்மையில் இருப்பது நான்தானே. இப்போது புரிந்ததா யார் பெரியவனென்று" எனக் கேட்டதாம். என் அன்புத் தமிழ் நெஞ்சமே, இக்கதை புகட்டும் பாடம் கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விதத்தில் உயர்ந்தவன் என்பதே. ஒவ்வொரு மனிதனும் தனக்கே ஒதுக்கப்பட்ட ஒரு பணியை ஆற்ற இவ்வுலகிற்கு ஆண்டவனால் அனுப்பப்பட்டான் என்பதை உணர்ந்து அனைவரையும் மதிக்கப் பழகவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே. ஒருவன் புரியும் தொழிலை வைத்து அவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று தரம்பிரிப்பது ஒரு தகாத செயல். இதனால்தான் பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணே உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாடினார். ஒளவையாரும் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகிறார்.

**"வான் குருவியின் கூடு வல்லரக்குத் தொல் கறை யான்**
**தேன் சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம் பெரிதும்**
**வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்காண்**
**எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது"**

"விண்ணிலே பறக்கும் குருவி செய்யும் கூடு, குளவி கட்டும் அரக்குக் கூடு, கறையான் அமைக்கும் புற்று, தேனீ சமைக்கும் வீடு, சிலந்தி பின்னும் வலை ஆகியவை யாரும் செய்வதற்கரியனவாக மிக அழகும் நுட்பமும் கொண்டனவாக விளங்கும். ஆகையால் ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொருவர் வல்லவராய் இருப்பதால் யாரும் தம்மைப்பற்றிப் பெருமை கொள்ளக்கூடாது" என்பதே அப்பாடலின் பொருள்.

வெள்ளையர்கள், தொழிலால் எவரையும் உயர்ந்தவர் தாழந்தவர் என்று பிரிக்காது கடின உழைப்பிற்கே மதிப்பளிக்கின்றனர். பெரிய செல்வந்தரின் பிள்ளைகள் கூட உணவு விடுதிகளிலும், நம்மவர் தொழில் புரியத் தயங்கும் வேறு பல இடங்களிலும் பணியாற்றிப் பணந்தேடவும் உழைப்பால் உயரவும் பழக்கப்படுகின்றனர். வெள்ளையரிடம் நாம் கற்கக்கூடியவைகளில் இதுவுமொன்று. படிக்காத பாமர மக்கள் மட்டுமல்லர், படித்துப்பட்டங்கள் பெற்று பெரும் பதவிகள் வகித்து நம் சமுதாயத்தில் தலைவர்களாகத் திகழ வேண்டியவர்களுமே, இன்று சாதிமுறையைப் பேணி நிற்கின்றனர். இவர்கள் படித்தும் சிந்தையில் தெளிவு பிறக்கவில்லையே என்பதைப் பார்க்கும்போது, படித்த நூல்கள் எல்லாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பட்டங்கள் எல்லாம் எதற்கு என்று கவலை பொங்கக் கேட்க வேண்டியிருக்கிறது. சாதிமுறை ஒழிய வேண்டுமென்று வாய்வேதாந்தம் பேசும் பலர் அதைத் தம் வாழ்வில் நடைமுறைப்படுத்துகின்றாரா என்று சிந்திப்பது நல்லது. பெரிய மனிதர்களாகக் கணிக்கப்படும் பலர் எவ்வளவு சிறிய மனத்துடன் விளங்குகின்றனர். சாதி முறை என்பது நமது பண்பாட்டின் வழி வந்தது என்று சிலர் தவறாக எண்ணுவதுண்டு. நம் பண்பாட்டிற்கும் அதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சாதிமுறை வடக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதொன்று. பண்பாடு என்ற சொல்லுக்குப் பொருள் அறியாதோரே அப்படிப்பட்ட தப்பெண்ணத்தைக் கொண்டிருக்க முடியும். பண்பாடு என்ற சொல் சீருடன் ஒழுகுதல், பண்புடன் பழகுதல் என்று பொருள் படும். சாதிமுறையைப் பேணுவோர், மனிதரின் மாண்பை ஒருநேரமல்ல, வாழ்நாள் முழுவதுமே திருடிக்கொண்டு தாம் சீருடன், பண்புடன் ஒழுகுவோர் என்று எப்படி எண்ணக்கூடும்? மனிதனின் சமத்துவத்துக்குச் சமாதிகட்டி விட்டு நீதிமான்களாக நடித்துவிடக் கூடாது. "யாதுமூரே யாவரும் கேளிர்", எல்லா ஊர்களும் எனது ஊரே. எல்லோரும் என் உறவினர்களே இதுதான் தமிழ்ப்பாண்பாடு. "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" இதுதான் தமிழ் நெறி. இதுதான் அறிஞர் அண்ணா தம் இனத்துக்கு திரும்பவும் திரும்பவும் இடித்துரைத்த உண்மை.

அப்படியாயின் சாதி என்ற வியாதி எப்படி நம் சமுதாயத்தில் தோன்றியது என்று ஆராய்வது மிகவும் நன்மை பயக்கும். சுவாமி யோகானந்தா ஒருமுறை தமிழ் நாட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கு தலைவிரித்தாடும் சாதிக்கொடுமையை கண்டார். தனது "யோகியின் சுயசரிதை" என்ற புகழ்பெற்ற நூலிலே இந்தியாவில் சாதி எப்படிப் பிறந்தது என்பதைத் தெளிவாக விளக்குகிறார். பண்டைய இந்திய மக்களின் வாழ்க்கை முறைக்கு ஒரு ஒழுங்கு முறையை வகுத்துக் கொடுத்தவர் மனு எனும் பெரியார். இவர் சமுதாயத்தை நான்கு பெரும் வகுப்புகளாகப் பிரித்தார். பண்டைய இந்திய மக்களின் வாழ்க்கை முறைக்கு, ஒரு ஒழுங்கு முறையை வகுத்துக் கொடுத் தவர் இவர். இவர் சமுதாயத்தை நான்கு பெரும் வகுப்புகளாகப் பிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **சூத்திர வகுப்பு:** சமுதாயத்திற்கு தம் உடல் உழைப்பால் மட்டும் உதவக்கூடியவர்கள் இவ்வகுப்பில் சேர்க்கப்பட்டனர்.

2. **வைசிய வகுப்பு:** அறிவாற்றலும் திறமையும் கொண்டு விவசாயம், வர்த்தகம், வணிகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கி சமுதாயத்திற்குத் தொண்டு புரிபவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

3. **சக்திரிய வகுப்பு:** சமுதாயத்தில் ஆளுநர்களாக, இயக்குனர்களாக, பாதுகாப்பளிக்கும் போர் வீரர்களாக விளங்கினோர் இவ்வகுப்பில் அடங்குவர். இவர்கள் மனப் பலமும், கட்டுப்பாடும், பொறுப்புணர்வும், நற்செயலும் கொண்டு சமுதாயத்திற்குச் சேவையாற்றுபவர்கள்.

4. **பிராமணர் வகுப்பு:** சமுதாயத்தில் ஆன்மீக வாழ்வில் சிறந்து ஆன்மீகப் பணியில் ஈடுபடுவதன் மூலம் மனிதனை இறைவனோடு இணைப்பவர்கள். ஒருவனுடைய குடிப்பிறப்பல்ல ஆனால் நல்லொழுக்கமும் புனித வாழ்வுமே அவன் இவ்வகுப்பிற்குச் சேர்ந்தவனா இல்லையா என்ற தீர்ப்பை வழங்கும்.

உயர் அறிவு படைத்தோர், புண்ணியங்கள் மிக்கோர், வயதில் முதிர்ந்தோர், உறவினர் இறுதியாக செல்வமுடையோர் மதிக்கப்பட வேண்டுமென மனு சமுதாயத்திற்கு அறிவுறுத்தினார். பண்டைய இந்தியாவில் செல்வமுடையோரும் இல்லாதோருடன் பகிர்ந்து கொள்ளாத இடத்து அவர்கள் சமுதாயத்தின் கடைசிப் படியில் நிறுத்தப்பட்டனர். இதனாலேயே நம் முன்னோர்:

**"இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ளபடி"** என்று கூறிப்போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவரும்

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"** என்று அழகாகக் கூறினார். எனவே ஒருவனது பிறப்பினாலன்று ஆனால் அவனது வாழ்வின் இலட்சியத்தையோ குறிக்கோளையோ வெளிப்படுத்தும் இயற்கை ஈந்த தகமையினாலேயே அவனது சாதி நிர்ணயிக்கப் பட்டது.

**ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் பிறந்ததால் எவனும் உயர்ந்துவிடுவதோ அன்றேல் தாழ்ந்து விடுவதோ இல்லை. அந்த முட்டாள்தனமான எண்ணம் பிற்காலத்தில் அறியாமையிலிருந்து பிறந்ததுதான். அந்த எண்ணத்தின் காரணமாக கண்மூடித்தனமான வழமைகள் சமுதாயத்தில் புகுந்து, சாதியின் பெயரிலே கோடிக்கணக்கானோரைத் தீண்டாதவர்களாக்கி பல நூற்றாண்டுகளாக அவர்களின் மாண்பு அழிக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, சமத்துவம் பறிக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு, சேரிகளில் சேர்த்து ஒதுக்கப் பட்டு சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.** இந்துமதமும் அதற்குத் துணைபோனது. எத்தனையோ கோவில்களிலே ஆண்டவனை வழிபடும் உரிமையே அவர்களுக்கு இருக்கவில்லை. தீண்டாதவர்கள் என்ற பெயரைத் தாங்கி ஏனையோரின் பழிப்புரைக்கு ஆளானார்கள். இந்நிலையில் மகாத்மா காந்தி என்ற பேரொளி தோன்றி சாதிவெறி என்ற அறியாமை இருளைக் கலைக்க முயன்றது. தனது வார்த்தையாலும் வாழ்க்கையாலும் ஒளி சிந்தி ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாக பாரத நாட்டின் பட்டி தொட்டிகளெல்லாம் ஒலித்தார். தன் வாயினிக்க சமத்துவம் பேசுவதோடு நின்று விடவில்லை. அவர்கள் வாழ்வினிக்கத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார். தீண்டாதவர்கள் என்ற பெயர் சூட்டப்பட்டோரின் மாண்பை எடுத்தோத, கடவுளின் மக்கள் எனப்பொருள்பட "அரிசனம்" என அவர்களை அழைத்தார். ஏனையோரின் சிந்தைக்கு ஒளி ஊட்டியது அவரது வாழ்க்கை முறை. சேரிகளில் வாழ்ந்து அங்கு ஓர் பணியாளனாக விளங்கி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை எல்லா விதத்திலும் உயர்த்த வழி காட்டினார். அவர்கள் இழந்துவிட்ட சுயகௌரவத்தை அவர்களுக்கு ஊட்டி, அறியாமை, ஏழ்மை, மூடப்பழக்க வழக்கங்கள் சுத்தமற்ற சூழல் ஆகியவற்றை அகற்றி வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுகாண ஊக்குவித்தார். புகைவண்டியில் அவர்கள் பயணம் செய்த மூன்றாவது வகுப்பிலேயே நாடெங்கும் பயணம் செய்தார். "ஏன் முன்றாவது வகுப்பில் பயணம் செய்கிறீர்கள்" என்று யாரோ ஒருவர் கேட்டதற்கு தனக்கே உரிய நகைச் சுவையுடன் "நான்காவது வகுப்பு ஒன்றில்லையே" எனப் பதில் தந்தார். எத்தனையோ நூற்றாண்டுகளாக அரிசன மக்களுக்குத் தன் கதவுகளை மூடிய இந்து ஆலயங்களுக்குள் கடவுள் இல்லையெனக் கூறி அங்கு நுளைய மறுத்ததன் மூலம் அவர்களை வெட்கித் தலைகுனிய வைத்தார். அதனால், எத்தனையோ கோவில்களும் வீடுகளும் அவர்களுக்குத் தங்கள் வாயில்களைத் திறந்து வரவேற்றன. "நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்" என்ற வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மைகளைத் தன் சொந்த வாழ்க்கையில் கண்ட காரணத்தால், பிரித்தானியரின் கீழ் இந்தியர்கள் அடிமைப்பட்டுச் சிறுமைப் பட்டதற்கும், இந்தியர்களே கோடிக்கணக்கான அரிசன இந்தியர்களை அடிமைகளாக்கிச் சுரண்டி வாழ்ந்ததற்கும் தொடர்பைக் கண்டார். எனவே பிரித்தானியரிடமிருந்து விடுதலை காண விரும்பினால், அரிசன மக்களின் அடிமைத் தளையை அறுத்து அவர்களது உரிமைகளை வழங்கி, இந்திய மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார் இந்த இருபதாம் நூற்றாண்டு கண்ட மாபெரும் மனிதன்.

சிங்கள ஆதிக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிக்க மிகத்தேவையானதொன்று சாதி முறையை ஒழித்து தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதே. நமது தேசியத் தலைவன் படைக்கும் புதியதோர் சமுதாயத்தில் சாதிக்கே இடமில்லை. மக்கள் மனதில் சிந்தனையில் மாற்றம் ஏற்படாவிடின் சட்டம் போட்டும் பயனில்லை. இந்தியாவே இதற்குச் சான்று பகரும். அந்த மனமமாற்றத்தைக் கொண்டுவர காந்திபோன்ற கொள்கைப் பிடிப்பு மிக்க உயர்ந்த மனிதர்கள் உலகெங்கும் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றி சாதி வேற்றுமையை வேருடன் சாய்க்க காந்தியின் வழியிலே போரிடவேண்டும். **பல வருடங்களுக்கு முன் நாம் சிங்கள அரசின் ஒடுக்கு முறையையும், அது தமிழினத்திற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இழைத்த அநீதிகளையும் சுட்டிக்காட்டியபோது நமது வாயை மூடுவிக்க நமது முகத்திலே அவர்கள் தூக்கி எறிந்து, தமது செயலை நியாயப்படுத்தியது தமிழர் மத்தியில் விளங்கிய சாதிமுறையைக் கொண்டுதானே. மேலும் தமிழர்களைப் பிரிப்பதற்கும் அதைப் பயன்படுத்தவில்லையா?**

தமிழீழத்தில கிறீஸ்தவ சமூகமும் இவ்விடயத்தில் தவறு இழைக்காமலில்லை. சாதிமுறை கிறீஸ்தவத்திற்கு முரண்பட்ட தென்பதை ஆணித்தரமாக எடுத்தோதத்தவறி, அதன் தலைவர்கள் வழமையின் நிழலிலே நின்று, சாதிக்கொரு கோவில் கட்டி வேதம் வளர்த்தது நாம் அறிந்ததே. கொண்ட கொள்கைகளைவிட தாம் கண்ட எண்ணிக்கையே பெரிதென எண்ணினர். எனவே கிறீஸ்துவின் கொள்கைகளைக் கலப்படம் செய்து சந்தர்ப்பவாதம் பேசி தமது செயலை நியாயப்படுத்தினர். அம்மதத்திலே தனிப்பெரும் தலைவர்கள், சிந்தனைச் சிற்பிகள், இலட்சியவாதிகள் பலர் உள்ளனர். எப்படி அவர்கள் இன்று எல்லையில்லாத் தொல்லைகளின் மத்தியிலும் துணிந்து நின்று தமிழரின் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றனரோ, அப்படியே சமுதாயத்தில் அனவரின் சமத்துவத்துக்காகவும் இதய சுத்தியுடன் மகாத்மா காந்தியைப்போல் போராடுவார்கள் என நம்புகிறோம். அன்றேல் அவர்களது வாழ்க்கை போலியானதென நாளைய சமுதாயம் கேலிசெய்யும்.

என் அருமை உடன் பிறப்புக்களே, நாம் தமிழ்த் தாயின் மக்கள் என்ற உணர்வுடனும், இறைவனின் மக்கள் என்ற பெருமையுடனும் கரம் கோர்த்து மலரும் தமிழீழத்தை ஒன்றுபட்டு எதிர்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாளைய ஈழத்தின் நம்பிக்கை ஒளிகள்

இளமைத் துடிப்பும் கொள்கைப் பிடிப்பும் மிக்க வாலிப நெஞ்சங்களே, நம் நாளைய ஈழத்தின் நம்பிக்கை ஒளிகளே, மலர்ந்து வரும் தமிழீழத்தைத் தாங்கி நிற்கப்போகும் வச்சிரத் தூண்களே, நாறும் வெங்காயம் போல் நாற்றமெடுக்கும் இச் சமுதாயத்திலே மலர்ந்து நறுமணம் வீசப்போகும் மல்லிகை மொட்டுக்களே, இளைய தமிழினத்தின் தங்கம் நிகர் தலைவர்களே, நாளைய தமிழுலகின் சாதனையோ, வேதனையோ, இன்பமோ துன்பமோ, வளர்ச்சியோ தளர்ச்சியோ, எழுச்சியோ வீழ்ச்சியோ அனைத்தும் உங்களில்தான் தங்கியுள்ளது. உங்கள் வாழ்வு எப்படி அமையப் போகின்றதோ அப்படியே நளைய தமிழுலகும் விளங்கப் போகின்றது. புலம் பெயர்ந்த நம்மவரின் பலம் நீங்களே! நமது பெருமையும் மகிமையும், வாழ்வும் வளமும் நீங்களே!! எனவே உங்களோடு உரையாடுவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

ஈழத்தாய் ஈன்றெடுத்த முத்துக்களே, நீங்கள், வாழ்வில் அடையப்போகும் பெருமையோ சிறுமையோ உங்கள் கையில்தான் உள்ளது. நாலடியார் என்ற நூல் இக் கருத்தை அழகாக விளக்குகிறது:

**நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் தன்னை**
**நிலைகலக்கிக் கீழ் இடுவானும் - நிலையினும்**
**மேல் மேல் உயர்ந்து நிற்பானும் தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்**

அதன் பொருள் என்னவெனில்:

"உயர்ந்த நிலைக்கு உன்னை ஆளாக்குவோனும் நீதான்: இருக்கும் நிலையை இழிவு படுத்துவோனும் நீதான்; மென்மேலும் மேன்மைக்கு உயர்வோனும் நீதான்'' என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்த் தாயின் அரும் பெரும் சொத்துக்களே,**

நீங்கள் வாழ்வில் உயர்வதற்கு உந்து சக்தியாக விளங்குவது அறிவு வளமே. உங்கள் பொழுதை வீணாக்காது கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருங்கள். ஏனெனில், கல்வி அறிவே உங்களுக்கு உயர்வையும் பெருமையையும் தேடித்தர வல்லது. புறநானூறு கூறுவதுபோன்று;

**பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்**

அதாவது: ஒரு தாய் தன் வயிற்றில் பிறந்த அனைவரையும் ஒரே விதத்தில்தான் கருதுவாள். அப்படிப்பட்ட பேரன்புமிக்க தாயும் கல்விச் சிறப்பின் காரணமாக, கற்ற மகனையே பெரிதாக விரும்ப முற்படுவாள் என்கிறார் அரசர் நெடுஞ்செழியன் புறநானூற்றிலே. நான்மணி என்ற இலக்கிய நூல் **"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்"** என்கிறது. சீவக சிந்தாமணி, என்ற நூலில் இன்னுமொரு படி மேலே சென்று திருத்தக்க தேவர் **"கைப் பொருள் கொடுத்தும் கற்றல்"** அதாவது: கையிலுள்ள பொருட்கள் அனைத்தையும் கொடுத்தென்றாலும் நாம் கல்வியைக் கற்கவேண்டும் என்கிறார். கல்வியை எங்கு கற்பது? என்ற கேள்விக்கு **"பல்லவையில் நல்லவை கற்றலும்"** அதாவது பல்வேறு அவைகளுக்குச் சென்று நல்லவைகளைக் கற்கவேண்டும் என்கிறது திரிகடுகம் என்னும் நூல். புறநானூற்றில் மன்னன் நெடுஞ்செழியன் மேலும் தொடர்ந்து கல்விச் சிறப்பை விளக்குகின்றான்:

**வேற்றுமை தெரிந்த நாற் பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவன் அவன் கண் படுமே**

அதன் விளக்கம் என்னவெனில்: நான்கு வகைக் குலத்தினுள்ளும் கீழ்ப்பாலைச் சேர்ந்த ஒருவன் கல்வி கற்று உயர்ந்து விட்டால், அவனைக் கற்றோர் மேல் இனத்தானாகவே கருதிப் பேணுவர் என்பதே. இதனாலன்றோ அறிஞர்களைத் தேவர்களாகப் போற்றிக் காத்தது அன்றைய தமிழகம்! கல்வி அறிவின் பெருமையைப் பாடிப்புகழ்ந்தன பண்டைய இலக்கிய நூல்கள்.

**"தேவரே கற்றவர் கால்லாதார் தேருங்கால் பூதரே"** என்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபஞ்சமூலம்.

"**கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு**
 **புண் உடையர் கல்லா தவர்.**"

அதன் பொருள் யாதெனில், அறிவுக் கலைகளையும் உணர்ச்சி கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர்களே உண்மையான கண்களைக் கொண்டவர்கள். கல்லாதவர்களோ முகத்தில் இரண்டு புண்களையே கொண்டவர்கள் ஆவர் என்கிறார் கவிஞர் திலகம் வள்ளுவனார்.

ஈழத்தில் வாழ்ந்தபோது சிங்கள அரசின் தரங்கெட்ட தரப்படுத்துதல் முறை தமிழ் மாணவ மாணவியரின் கல்வியறிவைப் பாழ்படுத்தியது. அதற்கு ஈடு செய்யும் விதத்திலே வெளிநாடுகளில் வாழும் நீங்கள் எப்பாடு பட்டாயினும் கல்வி அறிவில் உயர்ந்து விடுங்கள். கல்வி அறிவுக்கு எல்லையே இல்லை. எனவே உங்களால் முடிந்த அளவு வாழ்நாளெல்லாம் கற்றுக்கொண்டே இருங்கள். கல்வி ஒரு பருவகாலப் பயிரல்ல. அது மனிதனின் வாழ்நாளெல்லாம் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படக் கூடியது. இதனாற்றன் வள்ளுவனார்:

"**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
 **கற்றனைத்து ஊறும் அறிவு**" என்றார்.

தொடர்ந்து தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் சுரப்பது போன்று நல்ல நூல்களை விடாது படிக்கப் படிக்க மனிதருக்கு அறிவு பெருகும் என்பதே அதன் விளக்கம். காலம் செய்த கோலத்தினால் புலம் பெயர்ந்தோம். ஆனால் நாம் புலன் பெயர்ந்தவர்கள் அல்லர். கல்வியில் புலனைச் செலுத்தாது தம் திறமைகளை வீணே சிதறடித்து, அளப்பரிய ஆற்றல்களை அழித்தொழித்து, காலத்தை விரயமாக்கி, நம் இளம் தலைமுறையினரில் சிலர் கிடைக்கும் தருணங்களைப் பயன்படுத்தாது ஊக்கம் குன்றி நிற்பதைக் கண்டு ஏக்கம் கொள்ளுகிறோம். அதை விடக் கவலை தருவது ஏதெனில், ஈழத்தில், தமது விடா முயற்சியும் கடின உழைப்பும் கொண்டு, தமிழனின் அறிவு வளர்ச்சிக்குத் தடைபோட்ட தரப்படுத்துதலையும் தாண்டி பல்கலைக் கழகத்துள் புகுந்து பட்டம் பெற்று நமக்கு பெருமை தந்தவர்களில் சிலர் இங்கு வந்ததும் தன்னம்பிக்கையை இழந்து, தாமே தமது தரத்தையும் ஆற்ற-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையும் குறைவாக எடைபோட்டு, கல்வி அறிவைத் தொடர்ந்து வளர்க்காது இருந்து விடுவதைப் பார்க்கும் போது எவ்வளவு வேதனையடைகிறோம்.

**"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருந்தக் கூலி தரும்"**

என்ற வள்ளுவனின் வாக்கை என்றும் மறந்துவிடக்கூடாது. இன்று உலகெங்கும் வாழும் யூத இனத்தவர்கள் தம் வாழ்வில் கல்விக்குக் கொடுக்கும் சிறப்பான இடத்தைப் பாருங்கள். எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அது சட்டத் துறையோ, மருத்துவத் துறையோ, தொழில் நுட்பத் துறையோ, கலைத் துறையோ அன்றேல் வேறு எதுவோ அனைத்திலும் அறிவால் வளர்ந்து, புகழீட்டிப் பொருள் சேர்த்து உயர் பதவிகளை வகிக்கின்றனர். நம்மவரால் ஏன் அதைச் சாதிக்க முடியாது? நாம் கல்வியறிவை வளர்ப்பது பட்டங்களைப் பெறுவதற்காகவோ, பதவிகளை வகிப்பதற்காகவோ, பணத்தைத் தேடுவதற்காகவோ மட்டுமன்று. நம்மைப் பண்பாளராக்கி இதயத்தையும் சிந்தையையும் தூய்மைப் படுத்தவே. அது நிறைவேறாத இடத்து, விடம் மிக்க பாம்பினுடைய தலையில் வீற்றிருக்கும் மாண்புமிக்க மாணிக்கக் கல்போன்றுதான், கயவர்கள் கற்ற கல்வியென்று நீதி வெண்பா அழகாகக் கூறுகின்றது. கல்விச் செல்வத்தை அடைந்த உள்ளம் பழுதற்றதாக வேண்டும். அறிவோ ஆலமரம் போல் விழுதுவிட்டுத் தழைக்க வேண்டும்.சோக்கிரட்டீஸ் என்ற அறிவியல் மேதை மேற்கு நாட்டு அறிவியலின் தந்தை. ஏறத் தாழ 2500 வருடங்களுக்கு முன், சீர்குலைந்து போய்விட்ட தனது சமுதாயத்தைச் செப்பனிட முனைந்தார். தன் நாட்டவரை அறி-வொளி நோக்கி அடியெடுத்து வைக்குமாறு அறைகூவல் விடுத்தார். வயதில் மூத்தோரின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை; ஏமாற்றமே கண்டார். எனவே, வாலிப உள்ளங்களை வாவென்றழைத்தார். வந்தவர்களைச் சிந்திக்கவைத்து உண்மையைச் சந்திக்க வைத்தார். எவரையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றாது எவரது கூற்றையும்,

**"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

என்ற வள்ளுவனின் வாக்குக்கொப்ப ஆய்ந்தறிந்தே ஏற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் ரீதியிலே, எதையும் ஏன்? எதற்காக? எப்படி? என்ற கேள்விக் கணைகள் கொண்டு துளைத்து சிந்தையிலே தெளிவு பெற்றுச் செயற்பட வேண்டுமென்று அறிவுரை பகன்றார். அதன் பின், அறிவியலில் கீர்த்தி பெற்றது கிரேக்க நாடு. சிந்தனையில் எழுச்சி கண்டது ஏதன்ஸ் என்ற அதன் தலை நகரம். அதன் விளைவாக பிளேற்ரோ, அரிஸ்ரோட்டில், போன்ற எத்தனையோ சிந்தனைச் சிற்பிகள் அம்மண்ணில் மலர்ந்தனர்.

**என் உயிர்க்கினிய தம்பி தங்கையரே,**

கல்வியறிவின் அவசியத்தைப்பற்றி உங்களுடன் உரையாடிய நான், இப்போ புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் மிக முக்கியமான தேவை ஒன்றைப்பற்றி உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். தமிழீழம் அதன் ஒப்பற்ற தலைவர் மேதகு. வே. பிரபாகரனின் தலை மையில் தனது விடுதலைப் பயணத்தைத் தொடரும் இவ் வேளை, புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களைத் தட்டி எழுப்பி, அவர் பின்னே அணி திரட்டி வழிநடத்துவதற்கு, தரங்குறையாத் தங்கம் நிகர் தலைவர்கள் இத் தரணி எங்கும் பொங்கி எழ வேண்டும். ''மாபெரும் தலைவர்கள் உருவாவதில்லை; அவர்கள் பிறக்கின்றனர்'' என்பார்கள். ஒரு தலைவனுக்கிருக்க வேண்டிய குணநலன்கள், சிறப் பியல்புகள் அனைத்தும் உருவெடுத்து, உயிர்பெற்று, 'பிரபாகரன்' என்ற பெயர்தாங்கி தமிழர் மத்தியில் வந்து நிற்கின்றன, என்று சொன்னால் அது மிகையாகாது. ஒரு தலைவனிடம் காணப்பட வேண்டியன அனைத்தையும் குறைவறத் தன்னகத்தே கொண்டு தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரற்ற ஒரு தனிப்பெரும் தலைவனாக விளங்குகின்றார் என்று சொன்னால், அது எள்ளளவும் பொய்யாகாது. தமிழினத்தின் தலை நிமிர்த்த வந்த மறவன்; எத்தனை எத்தனையோ தலைமுறைகளுக்குப் பின் தமிழினம் கண்ட ஒப்பற்ற அற்புத மாமனிதன்; "பன்னிரண்டு கண்ணிருந்தும் பார்க்கவில்லையே. நான் பகலிரவாய்ப் பாடுகின்றேன் கேட்கவில்லையே'' என்றாற் போல் தமிழினத்தின் புலம்பல் கேட்டு முருகக்கடவுள் எடுத்து வந்த அவதாரம் என்றெல்லாம் அழைக்கப்படுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர். அதனால் தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை, என்று யாரும் பொருள் கொள்ளக்கூடாது. ஒரு தலைவனுக் கிருக்க வேண்டிய சிறப்பியல்புகளை ஒருவரிடம் காணு மிடத்து அவரை ஊக்குவித்து, அவரது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்துவிட உதவுவது ஒரு சமூகத்தின் கடமை. அப்போது, தலைவர்களை உருவாக்கும் பயிற்சிப் பாசறையாக ஒரு சமூகம் அமைந்துவிடுகின்றது. இவ்விடத்தில் ஒரு தலைவனிடம் அமையவேண்டிய குணநலன்கள் சிறப்பியல்புகள் பற்றிச் சிந்திப்பது சாலப் பொருந்தும்

**நல்லொழுக்கம்**

ஒரு தலைவனிடம் இருக்க வேண்டியசிறப்பியல் புகளுள் அனைத்தையும் விட மிக உயர்ந்த இடத்தில் நிற்பது நல்லொழுக்கமே. பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன்:
**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்"** என்றார். அதன் பொருள் என்னவெனில் மாந்தர் அனைவக்கும் ஒழுக்கம் மேன்மை யைத் தருவதால் அதை உயிரை விட மேலாகக் கருதிக் காக்க வேண்டும்என்பதே. நல் லொழுக்கம் அனைத்து மக்களிலும் துலங்கவேண்டு மெனில் ஒரு தலைவனின் வாழ்வில் அது எவ்வளவு இன்றி யமையாத ஒன்றாக விளங்கவேண்டும் என்பது சொல்லா மலே புரியும். முதுமைக் காஞ்சி என்ற நூல், ஒழுக் கத்தைப் பற்றிக் கூறும்போது:
**"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"**
என்று அழுத்திக் கூறுகின்றது. அதாவது உலகம் வாழ் மக்களுக்கு வேண்டியது கல்வி கற்பதைவிட ஒழுக்கத் துடன் ஒழுகுவதே என்பதாகும். ஒரு தலைவன் ஒழுக்கம் குன்றாக் குணக் குன்றாக விளங்கினால் மக்களும் ஒழுக்கத்தில் உயர்ந்தே நிற்பர்.
**"சாவது எளிது அரிது சான்றாண்மை"** என்கிறது ஏலாதி என்ற நூல். சான்றாண்மை என்பதற்கு உயர் ஒழுக்கத்துடன் ஒழுகுதல் என்பது பொருள். ஒரு சில மாதங்களுக்கு முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலிருந்து வந்திருந்த ஒரு கிறீஸ்தவத் துற வியைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எமது உரையாடல் தமிழ் ஈழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. நம் மண்ணின் நிகழ்வுகள், புதினங்கள் அனைத்தையும் ஆசை தீர அள்ளிப் பருகினேன். எங்கள் புலிக்குட்டிகளைப் பற்றி அவர் கூறியது என் கண்களைக் குளமாக்கி என் இதயத்தை பெருமையால் விம்மும் எரிமலையாக்கி என் உடலையே சிலிர்க்க வைத்தது. "புலிகள்-சிறப்பாகப் பெண் புலிகள் துறவிகளாகிய நமக்கே நல்லொழுக்கத்தில் பாடம் கற்பிக்க வல்லவர்கள். எவ்வளவு கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் ஒழுகி, காலை மலர்ந்து முற்பொழுதிலேயே எவராலோ ஒடித்து விடப்பட்ட அழகிய மலர்கள் போலல்லவா இவர்களில் பலர் நமக்காய் மடிந்துவிடுகின்றனர்," என்றார். அத் தியாக தீபங்களை, என் கண்களை மூடி நெஞ்சால் தொழுதேன். அவர்களை நினைத்துப் பெருமையால் அழுத பொழுதுகளோ அதிகம். களங்கமற்ற ஒழுக்கமும், கண்ணியம் மிக்க புண்ணிய வாழ்வும் தலைமை என்ற ஊற்றிலிருந்துதானே சுரக்கவேண்டும்!!

## அறிவு வளம்

ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய இன்னொரு சிறப்பியல்பு அறிவு வளம். இது மிக மிகத் தேவையான-தொன்று. ஏனெனில், முதுமொழிக் காஞ்சி என்ற நூல் கூறுவதுபோல்:

**"அறிவு சோர்வு உடைமையின்**
**பிறிது சோர்வும் அறிப"**

எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகள் அவை. "அறிவு தளர்ந்து போகும் போது ஏனைய நலன்கள் அனைத்தும் சோர்ந்து போகும்" என்பது அதன் பொருள். உறுதிமிக்க தலைமைத்துவம் நிலைத்து நிற்க வேண்டுமாயின் அது அறிவு மிக்கதாக விளங்கவேண்டும். தலைவன் எனப் படுபவன் அறியாமை இருளிலே கிடந்தால் எப்படி ஏனையோரின் வாழ்க்கைப் பாதைக்கு ஒளி ஊட்டி வழி காட்ட முடியும்? அது குருடன் ஒருவன் வழிகாட்டுவது போலல்லவா இருக்கும். இதையே அறநெறிச்சாரம் எனும் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக விளக்குகிறது:

**"இருளே உலகத்து இயற்கை; இருள் அகற்றும்**
**கை விளக்கே கற்ற அறிவுடமை, கை விளக்கின்**
**நெய்யே தன் நெஞ்சத்து அருளுடமை......."**

என்று. என் அன்புத் தம்பி, தங்கையரே ஈழத்தின் ஈடு இணையற்ற தனிப்பெரும் தலைவனை உற்று நோக்குங்கள். கல்வி பயில எந்தப் பல்கலைக்கழகப் படியும் ஏறவில்லை. ஆனால் படிக்கத் தவறவில்லை. அவனது செயற்பாடே அதற்குச் சான்று பகரும். அதனாற்றான், அவன் ஒரு தலைசிறந்த போராளிமட்டுமன்று, தமிழினத்தின் பேரொளியென்று முன்னொருமுறை குறிப்பிட்டிருந்தேன். இயற்கையான நுண்ணறிவும் செயற்கையான நூலறிவும் அவனிடம் நிறைந்துள்ளன. இன்று எந்தப் பல்கலைக் கழகத்திலும் அரசியல் கற்பிக்கக் கூடிய ஆழ்ந்த அறிவு அவனிடம் உண்டு. போர்க் கலையை எடுத்துக் கொண்டால் கூட, வல்லரசான அமெரிக்காவின் இராணுவக் கல்லூரியின் பயிற்றுநர்களே, அவ் வீரத் திரு மகனின் காலடியில் அமர்ந்தன்றோ அக் கலையைக் கற்க வேண்டியிருக்கும். இலங்கையில் ரஜீவ் காந்தியின் இந்தியத் தூதராகப் பணியாற்றிய டிக்சிற் என்பவர் ஒரு காலத்தில் புலிகளைக் குறைவாக எடை போட்டு, எள்ளி நகையாடி, அவர்களைக் கிள்ளி எறிந்து விட முடியும், என எண்ணியவர். அண்மையில் அவர் எழுதிய ASSIGNMENT COLOMBO (கொழும்புப்பணி) என்ற நூலிலே புலிகளின் அரசியற் சாணக்கியத்தை மிகவும் புகழ்ந்து எழுதியிருப்பது எதை உணர்த்துகிறது?

## *இலட்சியப்பற்று*

தனிப் பெரும் தலைவனின் உள்ளம், உயர்ந்த இலட்சியங்கள் வாழும் இல்லம். அவனது உயர்ந்த இலட்சியங்களும், தெளிவான குறிக்கோள்களும் என்றும் மாறாத கொள்கைகளும் மக்களின் நல்வாழ்வைப் பேணுவனவாகவே அமையும். எனவேதான், அவைகள் உயர்ந்தவை எனப் போற்றப்படுகின்றன. வள்ளுவனார் தெள்ளத் தெளிவாகவும், அழகாகவும் தனக்கே உரிய கற்பனை நயத்துடன் விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கான முயலெய்த அம்பினில் யானை
**பிழைத்த வேல் ஏந்தல் இனிது**" அதாவது, காட்டு முயலைக் கொன்ற அம்பைக்கையில் தாங்குவதைவிட யானையின் மேனியில் பட்டு வீழ்ந்த அம்பைத் தாங்குவது மிகவும் பெருமை மிக்கதாகும் என்பதே, அதன் பொருள். உயர்ந்த இலட்சியங்களை இதயத்தில் தாங்கி அதை அடைய வாழ்வதே மனிதனுக்குப் பெருமை தரும், என்கிறார்.

எதையும், எவரையும் விட, வான் உயர்ந்த தன் இலட்சியங்களே, விண்போற்றும் தன் கொள்கைகளே, கண்ணொத்த குறிக்கோள்களே, இம் மண்ணில் அவனுக்குப் பெரிதாகத் தோன்றும். ஒரு இலட்சியவாதி, தன் இலட்சியங்களை அலட்சியப்படுத்தி ஒரு சந்தர்ப்பவாதியாக என்றும் மாறவே மாட்டான். தான் கொண்ட கொள்கைகளை-ஏன், தன்னையே வெறும் பணத்துக்காக, பதவிக்காக, பொருளுக்காக, மனிதரின் மலிவான மதிப்பிற்காக விற்றுவிடமாட்டான். ஏனெனில் தன்னை நம்பி வாழும் மக்களின் நல் வாழ்வை விட வேறு எதையோ எவரையோ உயர்ந்ததாக அவன் கருதான். அந்த இலட்சியங்களைப் பேணிக் காக்க, தனது குறிக்கோளை வென்றெடுக்க, தன் உடல் பொருள் ஆவி, ஏன், தனக்குள்ள அனைத்தையுமே அர்ப்பணிப்பான். என் அருமைத் தம்பி தங்கையரே, தலைமைத்துவத்தைப் பயில நமக்கு முன் நடமாடும் மாபெரும் பாட நூல் நம் தலைவன் பிரபாகரனே. உலகில் வேறு எங்கும் எந்த நூலகத்துள்ளும் நுழைந்து தேடியலைய வேண்டிய தேவை நமக்கில்லை. அவனது இலட்சியம் தமிழீழம் ஒன்றே; தன் மக்களின் விடுதலை ஒன்றே; தன் உயிர்க்கினிய தமிழினத்தின் தன் மானத்தோடு கூடிய நல்வாழ்வே. அதற்காக அவன் சந்தித்து விட்ட சோதனைகளும் வேதனைகளும் வார்த்தைகளில் அடங்கா. அவன் செய்த தியாகங்களை வரலாறு மறுக்காது மட்டுமல்ல, மறக்கவும் மாட்டாது. அவன் தனது வார்த்தையாலும் வாழ்க்கையாலும் தமிழீழமே தமிழினத்தின் தாரக மந்திரமென்று திரும்பத் திரும்ப உணர்த்தினான். தமிழீழம் என்ற இலட்சியத்தை விட, வேறு எவரும் பெரியவர்களோ உயர்ந்தவர்களோ அல்லர் என்பதைத் தன் பல்வேறு செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் எண்பித்தான். ஈழத் திரு நாட்டையும் தமிழினத்தின் நல்வாழ்வையும் சிங்கள அரசுக்கோ அல்லது வேறு எவருக்கோ தாரைவார்க்க யாரும் எண்ணினால், அவன் அழித்தொழிக்கும் புயலாக,-சுட்டெரிக்கும் நெருப்பாகமாறு வான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஈழத் தமிழனின் விடுதலையை நிலக்கடலை போல் கருதிப்பேரம் பேசவோ, அவனது சுதந்திரத்தை சுண்டங்காய் என நினை த்து யாரும் விலை கூறவோ இடமளியான்.

அண்மையில் சந்திரிக்கா அம்மையார் 'ரைம்ஸ்' என்ற வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றைப் படித்தேன். என் வயிறு குலுங்கச் சிரித்தேன். அதில், அவர் மிகவும் ஏமாற்றத்துடன் தான் பிரபாகரனிடம் தமிழீழக் கோரிக்கையை விடும்படி கேட்டதாகவும், வடக்கை பத்து வருடங்களுக்கு எவ்வித தேர்தலுமின்றி அவர் ஆளுவதற்குத் தான் வழி செய்வேன், என்று உறுதிமொழி அளித்தும், அவர் அதற்கு இணங்கவில்லை, எனவும் குறிப்பிட்டிருந்தார். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்ற பழமொழியே என் நினைவுக்கு வந்தது.பண ஆசை பிடித்தவர்கள் பணத்தைக் கொண்டு மற்றவர்களை வாங்க நினைக்கின்றனர். பதவி வெறி பிடித்தவர்கள் அதைக்கொண்டே மற்றவர்களை மாற்றப்பார்க்கின்றனர். அம்மையார் பாவம்! தன் தலையை கருங்கல்லில் அல்லவா மோதுகிறார்!! சோற்றுக்காகச் சுதந்திரத்தை விற்றுப் பிழைக்கும் வீணர் கூட்டத்திற்கு அவன் வழிகாட்டி இல்லையே. விடுதலைக்காய் என்ன இன்னல்களையும் தாங்கும் இனத்தின் முடிசூடா மன்னனல்லவா அவன்? விடுதலைக்காய்த்தம் தலைகளையே விலையாகக்கொடுக்கத் தயங்காத தன்மானத் தமிழர்களின் தலைவணங்காத் தலைவனல்லவா அவன்? விடுதலை வேண்டி, எந்தச் சுமைக்கும் தோள்கொடுக்கத் துடித்து நிற்கும் வீரர்கட்கு வீரனல்லவா அவன்? தன் இலட்சியப் பற்றால் வீர வாழ்வால் எத்தனையோ கோடிக்கணக்கான தமிழர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கள்வனல்லவா அவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னலமற்ற நெஞ்சம்

நல் விளைவைத் தந்து நம்மை வாழவைக்கக் தான் மடிகின்றதே நெல்விதை; நம்மை ஊட்டி வளர்க்கப் பசும் பாலைச் சொரிந்து தான் மட்டும் புல்லைத் தின்கிறதே தாய்ப் பசு; இருளகற்றி நமக்கு ஒளி வழங்கத் தன்னை அழித்தொழிக்கின்றதே மெழுகுவர்த்தி; வெயிலின் கொடுமை போக்க மானிடர்க்கு நிழல் தந்து தான் வெந்து நிற்கின்றதே நெடுமரம்; இவைகள் நமக்குப் புகட்டும் பாடம் என்ன? பிறரை வாழ வைக்க வேண்டுமெனில், நாம் அழிய வேண்டும்; நம்மை மறக்க வேண்டும்; நான், எனது, எனக்கு என்ற எண்ணங்களை அடியோடு ஒழிக்க வேண்டும், என்பதே. அப்படி ஆயின், மக்களின் சேவைக்கெனப் புறப்பட்ட தலைவனுக்குத் தன்னலம் அற்ற நெஞ்சம் தேவை என்பது சொல்லாமலே விளங்கும்.

கலித்தொகை என்ற இலக்கிய நூல் கூறுவதன் பொருளைக் கேளுங்கள்: நறுமணம் மிக்க சந்தனம் மலையில் வளர்ந்தாலும், மலைக்கேதும் பயனில்லை. அதை மார்பிலே தேய்த்துக்கொள்ளும் மக்களே அதனால் பயன் பெறுவர். கத்து கடலில் தான் அழகிய முத்துப் பிறந்தாலும் கடலுக்கு என்ன லாபம்? அதை அணிந்து கொள்வோரே, அதனால் பயன் பெறுவர். ஏழு வகை இன்னிசை எழுவது யாழிலே. அவ் இன்னிசையால் யாருக்குப் பயன் கிட்டும்? அதை கேட்டு மகிழ்கின்ற உள்ளங்கள் தான் உவகை அடையும். எவ்வளவு அழகான தத்துவம். அது போன்று ஒரு தலைவனது ஆற்றல் திறமை, பணி சுருங்கக்கூறின், அவன் கொண்டிருப்பவை அனைத்தும் தன்னல மற்றுப் பிறர் நல்வாழ்விற்கும், சிறப்புக்குமே பயன்பட வேண்டும்.

தன்னலம் என்பது எவராலும் வெறுக்கப்படும் ஒன்று. தன்னலம் மிக்கோரே தன்னலம் மிக்கோரை வெறுத்து ஒதுக்குவர். ஏனெனில் பிறர்க்கென வாழ்வதே மெய்வாழ்வு. தனக்கென வாழ்வதோ பெரும் இழுக்கு. இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். எந்த மனிதனிலும் மிகவும் அழகு வாயந்தது அவன் சிந்தும் புன்னகையே. அது நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில் உள்ள மிக அழகானதொன்று என்பதனால், என்றாவது ஒருநாள், நம்மை மகிழ்விக்கவோ, நமக்கு ஒரு மன நிறைவை அளிக்கவோ ஒரு கண்ணாடியின் முன் நின்று நம்மைப் பார்த்துப் புன்னகை செய்திருக்கின்றோமா? அப்படிச் செய்யும் பழக்கம் யாரிடமாவது இருந்தால் பிறர் கண்டுவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! பைத்தியம் எனற பெயர் சூட்டி, மனநோயாளர் விடுதியில் ஒரு கட்டிலை தப்பாமல் தந்துவிடுவார்கள், கவனம்! அவ்வழகு பொழியும் புன்னகை நம்மை அல்ல பிறரை மகிழ்விக்கவே ஆண்டவனால் அருளப்பட்டது. இறைவன் மனிதனைப் படைத்த போது அவனுக்கு இரு கரங்களைக் கொடுத்து அனுப்பினான். அக் கரங்களால் அவன் பிறரை அர-வணைக்க முடியுமேயன்றித் தன்னை அன்று; பிறரைத் தூக்கிச் செல்ல முடியுமே தவிர தன்னை அன்று; இறைவன் நமக்குத் தந்த உடல் அமைப்பே நாம் பிறர்க்காகப் படைக்கப்பட்டவர்கள் என்பதை அல்லவா தெளிவாக்குகிறது. எனவே, சுய நலம் கொண்டவன் மன நோயாளி என்பது பொருள். தன்னலம் கொண்டவனைச் சமுதாயம் என்றுமே தலைவனாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

என் அன்புத் தம்பி தங்கையரே வன்னிக் காட்டுக்-குள் வாருங்கள், தன்னலமே பேணாத தலைவனைக் காட்டுகிறேன். தன்னினத்தின் மானம் பேண தன்னலத்தைக் கொன்றுவிட்ட மன்னவனைக் காட்டுகிறேன். மாட மாளிகையிலல்ல, மலர் மஞ்சத்திலல்ல, மர நிழலில் காட்டுகிறேன். துன்பத்தின் மடியில் தன் குஞ்சுகளைத் தவழ விட்டு, தமிழீழம் விடியுமட்டும், பகை முடிப்பவனைக்காட்டுகிறேன். நம்மவர்க்காய் உண்ணாத பொழுதுகளும் உறங்காத இரவுகளும், ஓயாத பணிகளும் கொண்டு நிற்பவனைக் காட்டுகிறேன்; சொத்து சுகங்களில்லை, சுவிஸ் பாங்கில் கணக்குமில்லை; செத்து மடியும் தமிழினத்தைத் தன் சொத்தாகக் கொண்டு ஆங்கே, கண்ணின் கருமணிபோல் காத்து நிற்பவனைக் காட்டுகிறேன். தமிழர் நலமொன்றே தன்னலமாய் கொண்டு எங்கள் உள்ளங்களைக் கொள் ளை கொண்ட அக் கள்வனைக் காட்டுகிறேன். உலகம் அறிந்திராத பெரியதோர் பிறவியவன், தமிழன்னை தவம் கிடந்து பெற்ற நம் பிரபாகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்றிறன்

எவ்வளவோ திறமைகள் ஒருவனிடமிருந்தும் செயற்றிறன் இல்லாது போய்விடின் அதனால் அடையும் பயன் என்ன? தம்மை வழி நடத்தும் தலைவனிடம் மக்கள் எதிர்பார்ப்பது போதனையை விடச் சாதனையையே. எத்தனையோ தரங் கெட்ட தலைவர்களிடம் வார்த்தை அலங்காரங்கள் இருக்கும்; சில வேளைகளில் வளங்குறையாக் கருத்து க்கள் இருக்கும். ஆனால், மக்களின் வாழ்வை வளப்-படுத்த எதைச் சாதித்தார்களென்று பார்த்தால் எதுவுமே இராது. இவர்கள், வெறும் சீறு வாணங்களேயன்றி வேறல்ல. அலங்கார வார்த்தைகளின் அழகைக் கொண்டு, கள்ளம் கபடமற்ற மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர். தமிழீ ழத்தை எடுத்துக் கொண்டால், வாய்ச் சொல்லளவில் வீரம் மிகுந்து நின்ற தலைவர்கள், எதையும் தாய்மண்ணுக்காகச் செயலால் சாதிக்க வில்லையே. 'நாளை தமிழீழம், நாளை தமிழீழம்' என நாவினிக்கப் பேசி நாளைப் போக்கிவிட்டு, தமது நனிபங்கை அதற்கென நல்காமல் இருந்து விட்ட வாய்ச் சொல்வீரர்கள் எத்தனை பேர்? இன்று தமிழ் மக்களின் வாழ்வைச் சீர்ப்படுத்த எதையும் சாதிக்காது, பழம்பெருமை பேசிக்கொண்டிருக்கும் போலித் தலைவர்கள் எத்தனை பேர்? ஏட்டிலுள்ள விடுதலை வீட்டுக்கோ, நாட்டுக்கோ உதவாதே. இதனாலன்றோ மாமேதை வள்ளுவன்:

**"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்"** என்றார்

"ஆற்றுவதற்கு அரிய செயல்களைப் பெருமை உடைய-வர்களே சாதிப்பர்" என்பது அதன் பொருள்.
இன்று தமிழீழத்தில், நம் தலைவனிடம் வார்த்தை அலங்-காரங்களை எவரும் காணமுடியாது. பேசும் போது வளங்-குறையாக் கருத்துக்கள் நிறைந்திருக்கும்; கொள்கைத் தெளிவிருக்கும்; அக்கொள்கைகளைத் தாங்கியே தினமும் செயல்கள் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திண்ணிய துணிவு

நெப்போலியன் மிகவும் சிறியவனாக இருந்தபோது ஒருநாள் நள்ளிரவில் வீட்டைவிட்டு வெளியே போய்விட்டானாம். அதை அறிந்த அவனது தாய் ஓடிப்போய் அவனை உள்ளே அழைத்து வந்தபோது; 'மகனே உனக்குப் பயமே இல்லையா?' என்று அன்புடன் கேட்டாளாம். அதற்கு அந்தச் சின்னஞ்சிறுவன் தாயிடம் பயமென்றால் என்னம்மா? என்று கேட்டானாம். அத்தாய் அன்றிரவு கண்ட அவனது அஞ்சா நெஞ்சம் பின்பு அகிலம் அறிந்ததொன்று.

பயந்த இயல்பைக் கொண்ட ஒருவன் தலைவனாக விளங்கவே முடியாது. ஏனெனில், எடுக்க வேண்டிய மிக முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கோ எடுத்த முடிவுகளைச் செயற்படுத்துவதற்கோ வேண்டிய மன வலிமையைக் கொண்டிராத கோழை எப்படி ஒரு தலைவனாக விளங்கிப் பிறரை வழிநடத்த முடியும்? "அச்சமுடையார்க்கு அரணில்லை," என்கிறது குறள் நெறி. ஏனெனில், அரணுக்குள் இருக்கும் போதும் ஒருவர் நெஞ்சிலே பயமிருந்தால் அவ்வரணால் பயன் ஏது?

வன்முறை வழிநின்று போராடுகின்றவர்கள் தான் திண்ணிய துணிவுமிக்கவர்கள் என்று எண்ணுவது தவறு. இருபதாம் நூற்றாண்டு கண்ட மாபெரும் தலைவர்களில் ஒருவர் மகாத்மா காந்தி. மிகவும் மனவலிமை படைத்தவர். ஆனால் எந்த வன்முறை வழியையும் தழுவ விரும்பாதவர். அன்பும் உண்மையும் அறநெறியுமே அவருக்கு அந்த நெஞ்சுரத்தைக் கொடுத்தன "ஒருவன் தன் ஆற்றாமையின் காரணத்தாலோ, வன்முறைக்கு அஞ்சியோ, அகிம்சை வழியைத் தழுவக்கூடாது. அது கோழைகளுக்கன்று கொள்கை வீரர்களுக்கே உரிய வழி" என்கிறார். "உனது ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" என்கிறார் யேசு பெருமான். அன்பினால் உலகத்தை வென்ற அந்தத் தெய்வத் திருமகன். இது ஓர் முட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமான செயலாக சிலர் கண்ணில் தோன்றலாம் அன்றேல் நடைமுறைக்கு ஒவ்வாத அறிவற்ற சிந்தனை எனவும் சிலர் எண்ணலாம். ஆனால், சற்றுச் சிந்தித்தால், மனத் திண்மை உடையவர்களே அதைச் சாதிக்க முடியும் என்பது புரியும். அடிப்பவனை அடிப்பதற்கு பெரிய வீரம் தேவையற்றது. பலமற்ற ஒரு சிறிய உயிர் கூட, தான் தப்பித்துக் கொள்வதற்குத் தன்னைத் தாக்குவோரைத் திருப்பித் தாக்கிவிடுகிறது. அடிப்பவனை அன்புடன் அணைப்பதற்கு, ஒரு கன்னத்தில் அறைபவனை மன்னித்து மறுகன்னத்தையும் காட்டுவதற்கு, எவ்வளவு துணிவும் ஆன்மீகப் பலமும் தேவை! இதை விளக்க ஒரு அழகிய கதை ஒன்று உண்டு. ஒரு நாள் இந்து மதத்துறவி ஒருவர் ஆற்றங்கரையிலுள்ள மரநிழலிலே அமர்ந்து அமைதியில் தனது மந்திரத்தை ஓதிக்கொண்டிருந்தார். ஒரு தேள் மரத்திலிருந்து ஆற்று நீரிலே விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. அதைக் கருணையுடன் நீரிலிருந்து எடுத்து மரக் கிளை ஒன்றில் வைத்த முனிவனின்கையை அத் தேள் தீண்டியது. நோவைப் பாராட்டாது தன் மந்திரத் தைத் தொடர்ந்து செபித்தார் முனிவர். திரும்பவும் அத் தேள் தண்ணீரில் விழ தயங்காது அதை எடுத்து மரக்கிளையிலே வைத்தார். திரும்பவும் தேள் கொட்டிவிட்டது. இப்படியே, இந்த நாடகம் பல தடவைகள் நடந்தேறியது. இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் ஆற்றில் தண்ணீர் எடுக்க வந்த ஊரவன் ஒருவன். கடைசியில் அவன் பொறுமையை இழந்து; "ஐயா திரும்பவும் திரும்பவும் துன்பம் தரும் அத்தேளைக் காப்பாற்றாதீர்கள். அது செத்துத் தொலையட்டும்'' என்றான். அப்போது அத் துறவி; "தம்பி அது பாவம். வேறொன்றையும் அறியாது. கொட்டுவது அதன் இயல்புதானே'' என்றார். அதற்கு அந்த மனிதன், "சுவாமி அனைத்தையும் அறிந்த நீங்கள் அதைத் தொடாமல் சற்றுத் தொலைவில் இருந்திருந்தால் அது உங்களைக் தீண்டியிராதே'' என்றான். அதற்குப் பதிலாக, "அத் தேளு க்கு உதவாமலிருக்க என்னால் முடியவில்லை. ஏனெனில், என் மனித இயல்பு ஏனைய உயிர்களைக் காப்பாற்று-வதல்லவா?'' என்றார் துறவி. "பலர் **முரட்டுத்தனத்தை துணிச்சல் என்று தப்பாக எண்ணி விடுகின்றனர்.**'' முரட்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தனம் மிருகத்துக்குச் சொந்தமானது. துணிவோ மனிதனிடம் விளங்க வேண்டியது.

தமிழ் மகனே, தமிழ் மகளே, உன் நெஞ்சத்தைப் பெருமையால் பொரும வைக்கும் நம் தானைத் தலைவனைப் பார். வீரத்தின் உருவாக விளங்கும் அத் திருமகனை நன்றாக ஏறெடுத்துப்பார்; என்ன வீரம்! என்ன கம்பீரம்!! என்ன ஆண்மை!!! வீரம் வாழும் வீடு அவன். எவருக்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்ட மறவனவன். உண்மைக்கு மட்டும் பணிந்து, திண்ணிய துணிவோடு எண்ணியதனைத்தையும் சாதிக்கும் கண்ணியவான் அவன். என்றும் நெளியாத நேர்மை அவன் பார்வையிலே துலங்கும். அவனது நெஞ்சிலே குடி கொள்ளும் வீரமும் துணிவும்தானே எத்தனையோ ஆயிரமாயிரம் புலிகளை இவ்வையகமே வியக்கின்ற அளவிற்கு வீர வேங்கைகளாக இன்று செருமுகம் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. ஒரு படை பலம் கொண்ட எதிரியை, போர்க்களத்திலே தன் மனப் பலம் ஒன்றலே திணறடிப்பது நாளாந்தம் நாம் காணும் ஒன்று. அவனது ஆற்றல் மிகுந்த ஆண்மையின் முன் எந்த ஆட்பலமோ ஆயுதப் பலமோ ஆட்டம் கண்டு விடுகிறதே. எதிரியின் கையை எத்தனையோ அரசுகள் பல்வேறு வழிகளில் பலப்படுத்தி நிற்கும் நிலையிலும், இறைவன் அவனுக்களித்த துணிவின் துணைகொண்டன்றோ எதிரியைச் சிந்தை கலங்கி நிலை குலைய வைக்கிறான். தமிழரின் நெஞ்சைப் பெருமையால் வீங்கவைக்கும் வீரகாவியம் ஒன்று படைத்துக் கொண்டிருக்கிறான். அவனது நெஞ்சத்து வீரம் நம் நெஞ்சங்களிலும் கசிந்து அவகளை ஈரமாக்கட்டும். தூங்கியது போதும் பொங்கி எழுங்கள்! அன்றேல் நாளை ஏங்க வேண்டிவரும். நேரம் இதோ, நும் தீரம் காட்டுவதற்கு. நம் இளவல்களே எழுவீர்! தமிழன்னையின் செல்வங்களே எழுவீர்!! போர்க்களத்தில் பகைவனுடன் பொருதுவதுமட்டுமன்று வீரம். வள்ளுவனார் கூறுவது போன்று

**"நல்லாண்மை என்பது ஒருவர்க்குத் தான் பிறந்த**
**இல்லாண்மை ஆக்கிக் கொளல்"**

அதாவது "வீரம் என்பது, தன் குடியை உயர்ந்த ஒருவன் கொடுக்கும் கடின உழைப்பே" என்கிறார். நாம் விடுதலைப் பயணத்தில் ஒரு முக்கிய கட்டத்தில் நிற்கிறோம். பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரத்தில் பேதைகள்போல் கைகட்டி நின்று விடுப்புப் பார்ப்பதை விட்டு, தமிழ் வீரம், தமிழ் மானம் நெஞ்சில் கொப்புளிக்க தமிழ்க்குடியை உயர்த்தக் கொடி ஏந்திக் கிளம்புங்கள். உங்கள் வீரத்தை, வீணே உண்டு களித்திருப்போர்க்கு விளம்புங்கள்.

**தோல்வியில் தளராமை:**

தோல்வியையோ துன்பத்தையோ வாழ்வில் சந்திக்காத மனிதன் எவனுமில்லை. கோழை அவைகளை அடையும் போது மனமடிவு கொள்ளுகிறான். ஒரு வீரம் நிறைந்த தலைவனோ, அத்தோல்வியையோ துன்பத்தையோ தன் வெற்றிக்குப் படிக்கல்லாகி அடுத்த காரியம் என்னவென்றெண்ணி, எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பான். "**உள்ளற்க உள்ளம் சிறுகுவ.**" அதாவது உள்ளத்தைச் சுருக்கி ஊக்கத்தைப் போக்கும் செயல்களை நினைக்காதே, என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப தோல்வியிலும் துன்பத்திலும் ஆக்கம் தருவனவற்றையே மனதிலிருத்திச் செயற்படுவான். விளக்கின் திரியில் எரியும் தீச்சுடர் போல் ஒரே நிலையில் நிற்பான். "**இடுக்கண் வருங்கால் நகுக**" என்றும் வள்ளுவனார் வாய்மொழிந்தார். "இடர்கள் வரும்போது மனச்சோர்வடையாது, அதைப் பழித்துரைக்கும் மனப்பலத்தைப் பெறு" என்பதே அவரது அறிவுரை "தடைகள் வரும்போது மனம் உடைந்துவிடாது தன் பலம் கொண்டு வண்டியை இழுத்துச் செல்லும் உருக்கு மனம் கொண்ட எருதுபோன்று விடாமுயற்சி கொண்டவனை வந்தடைந்த துன்பம், பெறுவது பெரும் துன்பத்தையே" என்றும் அவர் கூறுகிறார்.

ஈழ விடுதலைப் பயணத்தில் நம் தலைவன் சந்தித்த தடைகள் தோல்விகள் துன்பங்கள் பின்னடைவுகள் எத்தனை! நண்பன் போல் நாட்டுக்குள் நுழைந்து, பாரதம், சிங்கள அரசுடன் இணைந்து நயவஞ்சக வேலைகளில் இறங்கியபோது, யாழ்குடாநாட்டை சிங்களப் படைகளிடம் பறிகொடுத்தபோது, கிட்டு போன்று கிடைப்பதற்கே அரிய எத்தனையோ முத்துப் போன்ற தளபதிகளை இழந்த போது, தனது புலிக்குட்டிகள் ஒவ்வொன்றையும் ஈழவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்காய்ப் போர்க்களத்தில் பலி கொடுத்தபோது மனத்தளர்வு கொள்ளவில்லை; மதி இழந்து போகவில்லை. மனத்திண்மையோடு உழைத்தான். 'சிங்களப் படைக்குத் தமிழர் எல்லைக்குள் வேலை இல்லை' என உணர்த்த, ஒரே நாளில் முல்லைப்போரில் அதைக் கிள்ளி எறிந்தான்; ''ஜெயசிக்குறு'' படையணியை ஓராண்டுக்கு மேலாக வன்னிக்காட்டுக்குள் முடக்கி வைத்து பல இடங்களில் சுக்குநூறாக்கினான். அண்மையில் கிளிநொச்சியிலும், பரந்தனிலும் அவர்களைக் கொன்று குவித்தான். கண்ணொத்த நமது மண்ணின் பெரும் பகுதியை ஈழத்தின் கிழக்குப் பகுதியில் மீட்டெடுத்தான்; சிங்களக் கடற் படையின் கப்பல்களை மூழ்கடித்து கடற்புலிகளின் பலம் காட்டினான்; நம் வான் பரப்பில் வந்து குண்டுகளைப் பொழிந்து தமிழர் வாழ்வைப் பாழ்படுத்திய விமானங்களைச் சுட்டு வீழ்த்தினான். தன் கரும்புலிகளின் இரும்புக்கரங்கள் கொழும்புக்கு மட்டுமன்று கண்டிக்கும் காலிக்கும் சிங்கள நாட்டின் எந்த மூலைக்கும் நீளும் என்பதைக் காட்டிச் சிங்கள அரசுடன் எங்கும் செங்களமாட தன் வேங்கைகள் தயார், என்பதை எண்பித்தான். அவனது சாதனைகளை இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். எத்தனை துன்பங்கள் தோல்விகள் அவனது பாதையில் தடைபோட்டாலும் யாழ்க் குடாநாடு புலிகளின் கைகளுக்கு வந்து சேருமட்டுமல்ல, ஈழத்திருநாடு உலக அரங்கில் உருவாகுமட்டும் நம் தம்பியின் பணி ஓயாது என்பது யாருமறிந்ததே.


## ஈழத்தாய் ஈன்ற முத்துக்களே

**அறிவை வளர்க்க, நம் கலை பண்பாட்டைக் கட்டிக் காக்க, ஆன்மீகத்தைப் பேண, உடல் நலத்தை ஊக்குவிக்க, இன நலத்தைக் காண, நம்மவர்கள் மத்தியில் கழகங்கள் பல தோன்ற வேண்டும். அவை இளம் உள்ளங்களை இன ரீதியில் ஒருங்கிணைத்து, அவர்கள் மத்தியில் இலட்சாதிபதிகளை விட இலட்சியவாதிகளை, கொள்கைப் பிடிப்புமிக்க, தன்னலமற்ற, நிலத்தைப்போல் பொறுமையும், மலையைப் போல் மாண்பும் உறுதியும், கடலைப்போன்ற ஆழமும், எதற்கும் கலங்காத வலிமையும், எதையும் தாங்கும் திண்மையும், தராசுக் கோலைப்போல் ஒருபக்கமும் கோணாமல் நீதி வழுவாத மனப் பக்குவமும், அறிவிலே தெளிவும், வாய்மையும் அதாவது நே-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்மையும் மிக்க தமிழ்த் தலைவர்களை உருவாக்கிவிட வேண்டும். அவர்களைப் பயிற்றும் பயிற்சிப் பாசறைகளாக அவைகள் விளங்கி நம் தானைத் தலைவனின் பின்னே அவர்களை இத் தரணியெங்கும் அணி திரட்ட வேண்டும். ஒரு தலைவனிடம் விளங்க வேண்டிய குண நலன்களையும் சிறப்பியல்புகளையும் அவை வளர்த்து ஒப்பற்ற உயர்ந்த தலைவர்களாக அவர்களையும் உருவாக்கி விடுமாயின் நாளை நமதாகும்! நம் தமிழீழம் விரைவில் நனவாகும்!!



இளந் தமிழர், நமக்கு வளம் தருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் அமைதி தங்கட்டும்! நெஞ்சில் உவகை பொங்கட்டும்!!

**தமிழ்த் தாயில் என் உடன் பிறப்புக்களே,**

இவ்வுலகில் வாழும் எந்த மனிதனும் ஏங்கித்தவிப்பது, தாகம் கொண்டலைவது இதய அமைதிக்காகவே. அவன் எறும்புபோல் உழைத்து எலும்பாய்த் தேய்ந்து போவதும், ஓடி ஓடிப் பொருள் சேர்ப்பதும், ஒரு நாள் சுடுகாட்டுச் சாம்பலாக, சவக்காட்டுப் புழுதியாக தன் கூடு மாறும் என்பதை அறிந்திருந்தும் சிற்றின்பங்களைத் தேடிப் பேயாய் பறப்பதும், அதன்பின் வாடி மனமடிவு கொள்வதும், நல்லதென்று தோன்றுவதனைத்தையும் நாடி நாயாய் அலைவதும் கூடாத மனிதருடன் கூடித்திரிவதும் எதற்காக? அமைதியைத் தேடித்தானே! எதற்காகக் குடிக்கிறாய் என்று குடிகாரனைக் கேட்டால், குடித்துக் குட்டிச்சுவராவதற்கென்று கூறமாட்டான். மாறாக "அமைதி வேண்டித்தான் குடிக்கிறேன்'' என்பான். போதைப் பொருட்களைப்பயன்படுத்தும் பேதைகளைக் கேளுங்கள். "நிம்மதி தேடுகிறோம்'' என்பர். அமைதி தன்னில் பொய்த்துவிட்டதென எண்ணித்தன்னை மாய்த்து விடத்துடிக்கும் தற்கொலையாளியைக் கேட்டால், அதே பதிலைத்தான் பெறுவோம். உண்மை அமைதியை எப்படி, எங்கே அடைவதென்று ஏங்கும் மக்கள் கூட்டம் வேண்டுவது அந்த அமைதியையே. இருண்ட வீட்டிலிருந்த பேதை மனிதன் ஒருவன், தீபெட்டிகளிலிருந்து தீக்குச்சிகளை எடுத்து ஒன்றின் பின் ஒன்றாய்த் தீ மூட்டி எரிய வைத்துக் கொண்டிருந்தானாம். எதற்காக இரவெல்லாம் அப்படிச் செய்து கொண்டிருந்தாய் என்று கேட்டதற்கு, வேறு வழி அறியாதவன் போன்று, 'ஒளி ஏற்றி இருளகற்றத்தான்' என்றானாம். அது போன்றே, உண்மை அமைதியென்ற விளக்கேற்ற அறியாது நிலையற்ற ஆட்களிலோ பொருட்களிலோ அமைதியைத் தேடிக் காலத்தை விரயமாக்-குகிறான் மனிதன்.

கண்ணனின் கீதையும், யேசு பேசிய வார்த்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், போதிமரத்தின் கீழ் அமர்ந்து ஞானம் பெற்ற புத்த னின் போதனையும், நபி நாயகத்தின் நல்லுரைகளும் மனிதன் அமைதி காண உதவிக்கரம் நீட்டின; வழி காட்டின. **"அனைத்துப் படைப்புகள் மட்டிலும் வெறுப்புணர் வற்றவன் அனைவரிடமும் நட்பும் கருணையும் கொண்டவன், 'நான்' என்ற அகந்தை உணர்விலிருந்தும், உரிமை கொண்டாடும் சுயநல விருப்புகளினின்றும் விடுபட்டவன் இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே மனநிலையில் வாழ்பவன், மன்னிக்கும் மனப்பக்குவமும், நிறைவு மிக்க நெஞ்சமும் கொண்டவன்..... எனது உண்மையான பக்தன். எனக்கு மிகவும் அருமையானவன்**" என்கிறது பகவத்கீதை 12:13-14 அத்த கையவனே அமைதியை அடைய முடியும். போதிமரத்தடி யில் அமர்ந்த அத் திருமகனின் போதனை என்ன? **"ஆசை யை அடக்கு ஆனந்தமும் அமைதியும் அடைவாய்"** என் பதுதானே **"'அமைதி' என்பது கருணைமிக்க கடவுளிட மிருந்து வந்து வாழ்த்துகின்ற வார்த்தை**" என்கிறது குரான். 36:58 அவனே அமைதி, அவனே அதை அருளவும் முடியும் என்பது அதன் போதனை. அமைதி என்பது மனித வாழ்விற்கு மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்தே யூத மக்களும் முஸ்லிம் மக்களும், 'வணக்கம்' என்று சொல்வதற்குப் பதிலாக அமைதியைக் குறிக்கும் தம் மொழிச் சொற்களாகிய "சலோம்" "சலாம்" என்ற செற்க ளைக் கொண்டே தம்மவரை வாழ்த்துகின்றனர்.

யேசுபெருமான் பிறந்த இரவில்:

**"விண்ணிலே இறைவனுக்கு மகிமையும்**

**மண்ணிலே நன் மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக**" என்று வானதூதர் பாடினர். ஆம், நன் மனதிற்றான் அமைதி நில வும். இதை விளக்கும் ஒரு கிறிஸ்தவப் பாடல் ஒன்று மிக வும் பொருள் பொதிந்தது. ஆழமான உண்மைகளை அது கருத்தாங்கி நிற்கிறது. இதோ அவ்வழகிய பாடல்.

"சமாதானம்! சமாதானம்! சமாதானம்!

உலகில் நிலைக்கவேண்டுமானால் விண்ணகத்தில் இறைவனுக்கு மகிமை பெருகவே, மண்ணகத்தில் நன் மனத்தோர்க்கமைதி நிலவவே

சமாதானம்! சமாதானம்! சமாதானம்!

மனிதன் மனதில் அன்பு முதலில் மலரவேண்டுமே - மலர
அன்புத் தேவனோடு உறவு வேண்டுமே - உறவுகொண்ட
நெஞ்சிலே உவகை பொங்குமே - பொங்கும்
உவகை பெருக மனதில் அமைதி தங்குமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள உவகையும் இதய அமைதியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒன்றை விட்டு மற்றதைப் பிரிக்க முடியாது. இதனாற்றான் பகவத் கீதை: "அமைதியற்றோருக்கு எப்படி ஆனந்தம் கிட்டும்" என்று வினவுகிறது 2:66

**என் உயிர்க்கினியவர்களே**

**அமைதி மனிதனின் உள்ளத்திலே அவனது இல்லத்திலே, உலக அரங்கிலே கோலோச்சுகின்றதா என்று கேட்டால், இல்லையென்றே சொல்ல வேண்டியுள்ளது. இருளடைந்த உள்ளங்களும், உடைந்துவிட்ட வாழ்வுகளும், குழப்பிப் போன குடும்பங்களும் குமுறுகின்ற நெஞ்சங்களும் ஒரு புறத்தில், கலக நிலையாக விளங்கும் உலக நிலை இன்னொரு புறத்தில். இதற்குக் காரணம், எங்கும் அநீதி தலைதூக்கி நிற்பதே. ஒரு தனிமனிதனின் உரிமைகளோ, ஒரு இனத்தின் உரிமைகளோ மற்றவரால் மறுக்கப்படும் போது நீதி கெட்டுவிடுகின்றது. நீதி கெட்டுவிடும் போது அமைதியும் கெட்டுவிடுகின்றது. அநீதி பிறக்கும் போது அவ்விடத்தில் அமைதி இறக்கிறது. மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதும், ஏமாற்றிப் பிழைப்பதும் வழமையான வாழ்க்கை முறையாகி விட்டது. ஓர் இனம் இன்னொரு இனத்தை விழுங்கி ஏப்பம் விடுவது வாடிக்கையாகி விட்டது. அதை, வேடிக்கை பார்த்து நிற்கின்றன உலக நாடுகள். சமதர்மச் சமுதாயம் தன்னலத்திற்குப் பலியாகிக் கொண்டிருக்கிறது. வல்லரசு என்றால், எந் நிலையிலும் அது நல்லரசு, என்று பாடம் புகட்டப்படுகின்றது. இந்நிலையில் மனித உள்ளங்களிலும் இல்லங்களிலும், ஊரிலும் உலகிலும் அமைதி பிறக்க வழி திறக்காதா?**

மனித உள்ளத்தில் அமைதியில்லை. ஏனெனில், அதன்கண் வதியும் இறைவனை மனிதன் தன் பட்டறிவால் தொட்டதில்லை. இறைவனுடன் தனக்குள்ள ஒருமைப்பாட்டை தன் சொந்த அநுபவத்தால் கண்டதில்லை. அதற்குக் காரணம், மனிதன் தன்னுள் உறையும் இறைவனைக் காண நேரம் ஒதுக்கவில்லை; வழிவகைகள் தேடவில்லை; செயல் முறைகளை நாடவில்லை. அவனே நம்முள் வாழும் அமைதி. இருளில் புரளும் ஆன்மா அதை அறியவில்லை. ஆன்மாவின் உரிமை மறுக்கப்பட, அநீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்கப்படுகிறது. அப்போ ஆன்ம அமைதி கெடுகிறது. இப்போது நம் உடலை எடுத்துக்கொள்வோம். உடலை ஊட்டி வளர்ப்பது உணவு. உடலின் களைப்பை ஆற்றி அதைத் தேற்றுவது ஓய்வு. உடலை உறுதிப்படுத்துவது உடற் பயிற்சி, இவைகளை நாம் உடலுக்கு வழங்கத் தவறும் போது அநீதி பிறக்கிறது. உடல் நோய்வாய்ப்பட உடல் அமைதி இறக்கிறது. சமூக வாழ்வை உற்று நோக்கினால் அங்கும் அமைதியில்லை. மனிதன், மனித னுக்கு ஆற்றுமுதவி, அவனை ஏமாற்றுவதே என்பதுபோல், மனிதனை மனிதன் மதிக்காது அவனது அடிப்படை உரிமைகளை மறுத்து வாழ்வதே காரணம். என்று மனித னின் "நான்" என்ற அகந்தை அழிந்து "எனது, எனக்கு" என்ற சுயநல எண்ணங்கள் ஒழிந்து போகுமோ, அன்றுதான் மனிதன் தூய உள்ளத்தைப் பெற முடியும். அதன் வழி யாகத் தன்னுள்வாழும் இறைவனைக் கண்டு அவனுடன் ஒன்றுபடவும் முடியும். இறைவனுடன் ஒன்று பட்ட உள் ளம், அனைவருடனும் தனக்குள்ள ஒருமைப்பாட்டை உணர்ந்து அன்பால் இணைந்து அமைதியின் அர- வணைப்பில் மகிழ்வுடன் வாழும். அதனாற்றான் யேசு தனது மலைப்பொழிவிலே **"தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்" ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்...... சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்**." என்றார் மனிதனில் இறை உருவைப் பதிக்கும் ஆன்ம குணநலன்களில் ஒன்று "அமைதி" என்கிறது, நமது பாதைக்கு ஒளியூட்டும் கீதை. அமைதி வீட்டிலும் நாட்டிலும் பிறக்கின் மனிதவாழ்வு ஒளி சிந்திச் சிறக்கும்.

இவ்விடத்தில், அமைதியின்றித் தம் உரிமையை வென்றெடுக்க வேறுவழியின்றி ஆயுதமேந்திப் போராடும் நம் உடன் பிறப்புக்களை நினைவு கூராமலிருக்க முடியாது. அவர்களை நினைக்கும் போதெல்லாம் நம் நெஞ்சு கனக்கிறது. கண்கள் பனிக்கின்றன. அவர்களது விடுதலைப் போராட்டம், உண்மையின் ஒளியிலே, தர் மத்தின் நிழலிலே, நீதி கோரி, தம் உரிமையை மீட்ட டெடுக்க முன்னெடுக்கப்பட்ட அறப்போராட்டம் என்பதில் சந்தேகம் வேண்டாம். நீதியின் அடிப்படையில் அமையும் உண்மை அமைதியை வேண்டியே நம்மவர் ஆயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கினர். எனவே, இதை அமைதிக்கான போர், சிங்கள மக்களுடன் என்றும் சமாதானமாக வாழத் தொடுக்கப்பட்ட ஈழப்போர் என அழைக்கலாம். இது வன்முறையை விரும்பி யதாலோ அன்றேல், இன்னொரு இனத்தை அழிக்க வென்றோ தொடுக்கப்பட்ட போர் அன்று. எனவேதான், நம் தலைவன், நாம் ஆயுதம் தாங்கி நின்றாலும் நம் சமாதனக் கதவுகள் என்றும் திறந்திருக்குமெனக் கூறிக் கொண்டி ருக்கிறார்.

**இந்த ஈழ விடுதலைப்போரில் புலம் பெயர்ந்து வாழும் நாம், நம்மவரின் விடுதலைக் குரலாக உலக அரங்கில் ஒலிக்க வேண்டியது நமது தலையாய கடமை. நம் மக்களின் இப் போராட்டத்தில், உதவும் கரங்களாக, அவர்களைத் தாங்கும் கரங்களாக அவர்களை ஊக்குவிக்கும் கரங்களாக விளங்க வேண்டும். எல்லையில்லாத் தொல்லைகளை நாம் சந்திக்க-வேண்டி நேரிடலாம். "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றோர்'' என்றார் யேசு. உண்மைக்குச் சாட்சி சொல்-வோர், உரிமைக்குக் குரல் கொடுப்போர் அடையும் இன்னல்-களை அவர் அறிவார். ஏனெனில், அவருக்கு முன் வாழ்ந்த இறைவாக்கினர்களும் துன்புறுத்தப்பட்டனர் என்பது அவர் அறிந்ததே. சத்தியத்துக்குச் சான்று பகர்ந்ததால் அவருக்குக் கிடைத்தது சிலுவை மரணம்; மகாத்மா காந்திக்கு துப்பாக்கிச் சூடு. அவர்கள் வரிசையிலே எத்தனையோ பேர் நீதிக்காக வாதாடி, உண்மையை உள்ளபடி கூறியதால் தங்கள் தலை யையே விலையாகக் கொடுத்தனர். அவர்கள், கொள்கை-களைக் கோணவைக்காது, உண்மைகளைக் கலப்படம் செய்யாது நெளியாத நேர்மையோடு வாழ்ந்த நெஞ்சுரங்கொண்ட கொள்கை வீரர்கள். நாமும் அமைதியின் கருவிகளாக அவர்கள் வழியிலே நடந்து அதன் பொருட்டுத் துன்பங்களை இன் முகத்துடன் ஏற்கவும் ஆயத்தமாக வேண்டும்.**

நம் இனத்தவர் அமைதி காண நாளாந்தம் நாம் தவறாது செய்ய வேண்டியதொன்றுள்ளது. இதுவே அனைத்திலும் மிக முக்கியமானது. இலங்கைத் தீவில் வாழும் இரு நாட்டு மக்களையும் அதன் தலைவர்களோடு இறைவனின் அன்பால் மூடி; நம் அன்பும் அமைதியும் நிறைந்த உணர் வுகளை அவர்களை நோக்கி ஏவு கணைகள் போல் எறிகணைகள் போல் செலுத்தி ''ஓம் சாந்தி! ஓம் சாந்தி'' யென்று பலமுறை அம் மந்திரத்தை உருக்கமாக இதய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தியுடன் நாளாந்தம் ஓதினால், அமைதி விரைவில் பிறக்கும். இரு இனத்தவரின் அழிவும் ஒழிந்து அன்பு தழைக்கும். உபநிடதம் வேண்டுவதுபோல் "பொய்மை-யினின்று மெய்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், சாவி லிருந்து வாழ்விற்கும் உள்ளங்கள் அனைத்தையும் அழைத்துச் செல்வாய் சாந்தி" என வேண்டுவோம். நம் தலைவனை இறைவனின் கரத்தில் அடைக்கலம் வைத்து அவனைக் காத்து வழிநடத்த நாளாந்தம் கையெடுத்து வழிபடுவோம். புரட்சிக்கவி பாரதிதாசனுடன்
**புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்** எனச் சேர்ந்து பாடி **யாதுமூரே யாவரும் கேளிர்** என்று அறைகூவி, புலரப்போதும் புது ஈழத்தினுள் அடி எடுத்து வைப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில்

புயல் ஓயும்

உள்ளத்தில்

உவகை பாயும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருபது வருடங்களுக்கு முன் ஈழத்தில் இவரை அறிமுகம் செய்து வைக்கவேண்டிய தேவை இருக்கவில்லை. அன்று ஈழத்தமிழர்கள் பேதங்களை மறந்து அன்பொழுக "மாம்பழச் சுவாமி" என்று வாய் இனிக்க அழைத்த பெயரிது. இன்றும் இவர் செய்த தொண்டுகளை நெஞ்சினிக்க நீங்கா நினைவோடு பேசுபவர் பலர் உளர். தமிழ்ப் பற்றும் இனப் பற்றும் கொண்டு நம்மவர்க்கு இவராற்றிய அளப்பரிய தொண்டுகள் வார்த்தைகளில் அடங்கா. மாம்பழம் என்ற பெயர் கேட்டதும் அன்று இளைஞர்களின் நெஞ்சிலே ஊக்கம் ஊற்றெடுக்கும்; அன்பு சுரந்து வரும்; துணிவு துள்ளியெழும்.

1977ம் ஆண்டு இனக் கலவரத்தில் அகதிகளாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான எம்மின மக்களை அரவணைத்துத் துயர் துடைத்ததும், வாழ்க்கைப் பழுவால் நொந்து போனோரின் சுமை தாங்கிபோல் நின்று வாழ்வளித்ததும், தனது நாவன்மையால் மேடைகளில் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டி, தமிழீழமே தனது தாரக மந்திரமாகக் கொண்டு விளங்கியதும், எல்லையில்லாத் தொல்லைகளின் மத்தியிலும் தளராத உறுதியோடு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக முழங்கியதும் அன்று பலரும் அறிந்ததே.

இவரது சேவைகளை நேரில் கண்டு பெருமை கண்டவனும் இன்று அதே முகத்தை அறிமுகம் செய்து பெருமை காணும்

அ. அன்ரன்பீலிக்ஸ் (மணிவண்ணன்)

"இந்நூல் புலம்பெயர்ந்து சரிந்து போய்க்கொண்டிருக்கும் எங்கள் பண்பாட்டுக் கோபுரத்தைத் தாங்கிப் பிடிக்கிற கைகளில் ஒன்றாய் கணக்கிடப்பட வேண்டியது"

கலிவாணி இராஜகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org